# இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 19 சுடர் - 05



திருக்கேதீஸ்வர திருக்கோயில் மகோற்சவ சிறப்பிதழ்

மன்மத வருடம்
சித்திரை - வைகாசி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

April - May
2015

# பாரெல்லாம் பரவும் மாமன்றப் பணிகள்

**அவுஸ்திரேலியா, சிட்னி முருகன் திருத்தலத்தில் மாமன்ற வெளியீடுகளான "A Compendium for Hindus" ஆங்கில மஞ்சரி, தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு நூல் 19.04.2015 அன்று வெளியிட்டு வைக்கப்பட்ட போது.**



இந்து மக்களுக்கு ஒரு மஞ்சரி ஆங்கில நூலை வெளியிட்டு வைத்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றுகிறார்.



தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் நூலை அறிமுகம் செய்து வைத்து கலாநிதி ஆறு. திருமுருகன் உரையாற்றுகிறார்.



திரு. கு. பார்த்திபன் உரையாற்றுகிறார்.



சைவமன்ற கல்விக்குழுச் செயலாளர் திரு ஆனந்தராஜா ரவீந்திரராஜா உரையாற்றுகிறார்.



சிட்னி முருகன் ஆலய சைவ மன்றத் தலைவர் திரு. வீரசிங்கம் குணரஞ்சிதன் முதற்பிரதி பெறுகிறார்.



திரு. மு. கருணாநிதி சிறப்புப் பிரதி பெறுகிறார்.

சபையோர்





உ
சிவமயம்

தீபம் – 19

# இந்து ஒளி

சுடர் – 05

மன்மத வருடம் வைகாசித் திங்கள் 16 ஆம் நாள் (30.05.2015)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணரவ வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே!

### திருவாசகம்

இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே!

### திருவிசைப்பா

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேற்
தொத்து மிளர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே!

### திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரிந்து அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக்கு என்செய வல்லம் என்றும்
கரந்துங்க கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிதுமேவி
ஆழிபுடை சூழ்ந்துஒலிக்கும் ஈழம் தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
திருக்கேதீச் சரத்து அண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்து ஏத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார்!

திருச்சிற்றம்பலம்

## யாழ் மண்ணில் தர்மம் பேணப்படவேண்டும்

யாழ் மண்ணில் சமீபத்தில் இடம்பெற்ற அதிர்ச்சி தரும் பாலியல் வெறியாட்டச் செயலும் படுகொலையும் வெறும் குற்றங்கள் அல்ல. அவை அந்த மண்ணில் காலம் காலமாக வளர்ந்த தர்மத்திற்கு சாவுமணியடிக்கும் முயற்சியாகும். சமீபத்தில் பல வன்முறைக் குற்றச் செயல்களும், போதைப்பொருள் பாவனையும் வடபகுதியில் அதிகரித்து வருகிறது என்ற செய்தி மிகவும் வேதனைக்குரியதாகும்.

கண்டனங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வன்முறையை கட்டவிழ்த்து விடாது பார்க்கவேண்டும். அந்த நிலையை தீயசக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது. அத்துடன் ஆர்ப்பாட்டங்களும் கண்டனங்களும் மட்டும் போதாது. எமது பண்பாடும் கலாசாரமும் அழிந்துவிட்டால் பொருளாதார அபிவிருத்தியோ அரசியல் தீர்வோ எமது மக்களுக்கு உதவப்போவதில்லை. மேலும் இராணுவமயப்படுத்தலுக்கும் வழிவகுக்க இடம் தரக்கூடாது.

பெற்றோர்கள், ஆசிரிய சமூகம், ஆன்மீகத் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், அரசியற் தலைவர்கள் ஆகியோர் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டு எமது இளம் தலை முறையினரை முறையான வழியில் நடாத்த திட்டங்கள் தீட்டிச் செயற்பட வேண்டும்.

அவ்வாறான நல்ல திட்டங்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் என்றும் கைகொடுத்து உதவத் தயாராக இருக்கின்றது. இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த வடமாகாண முதல்வர் சத்தியவித்தகர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை எல்லோருக்கும் வழிகாட்டி உதவுமாறும் அவரின் தலைமைத்துவத்தையும் நாடுகின்றோம்.

பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை எமது கலாசார பண்பாட்டு வழியில் வாழ வைக்க வேண்டும் என்பதுடன் அப்பிள்ளைகளின் ஒழுக்கத்திலும் கவனமும் கரிசனையும் காட்டவேண்டும். நவீன உலக சக்திகளுக்கு எதிர் நீச்சல்போட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமது இளம் தலைமுறையினருக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. எனவே அவர்களைச் சரியான வழியில் வழிநடத்துவது பெற்றோர்களின் தலையாய கடமையாகும். ஆசிரிய

சமூகமும் அதற்கு உறுதுணையாகச் செயற்பட வேண்டும். பிள்ளைகளைப் பெற்றோர்கள் சிறுவயதில் இருந்தே ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று ஆலய வழிபாட்டில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்த விரும்புகின்றோம்.

பாடசாலைகள் மற்றும் ஆலயங்கள்தோறும் சிவதொண்டர் அணிகளை அமைக்கும்படி கேட்டுக் கொள்வதுடன், அதற்குத் தேவையான உதவிகளை அகில இலங்கை இந்து மாமன்றம் என்றும் வழங்கத் தயாராக இருப்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருக்கேதீஸ்வரப் பெருமானின் மகோற்சவப் பெருவிழா காலத்திலிருந்தாவது எமது மக்களின் கலாசாரப் பண்பாடுகள் காப்பாற்றப்படுவதற்கு. அவனருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக!

## மகாலிங்கம்



முந்தி உலகம் படைத்தாய் போற்றி!
மூவர் முதலாய மூர்த்தி போற்றி!
அந்தரமும் அலைகடலும் ஆனாய் போற்றி!
ஆருயிர்கட் காருயிரேயாவாய் போற்றி!
எந்தை பெருமான்எம் ஈசாபோற்றி!
எத்துவார் இன்னல் களைவாய் போற்றி!
பந்தமறப் பறிக்குமகா லிங்காபோற்றி!
பாலாவித் தீர்த்தனே! போற்றி! போற்றி!

தலங்களில் சிறந்த கேதீச்
சரத்துமான் மியத்தை அன்பு
கலந்துறப் படிப்போர் கேட்போர்
காதலித்து உரைவி ரிப்போர்
நிலந்தனில் நிரப்பின் நீங்கி
நிறைசுக வாழ்வின் நீடிப்
பலங்களிற் சிறந்த வீட்டின்
பாலராம் பாலி னாரே!

*(திருக்கேதீச்சரப் புராணம்)*

**அடுத்த சுடர்**

**மன்மத வருடம் ஆனி – ஆடி**

வாழ்த்து

வான்மழை பொழிக ஞாலம் வளம்பல மலிக எங்கும்
நான்மறை ஒழுக்கம் சைவ நன்னெறி நாளும் சிறக்க
பான்முறை நான்மா தோட்டப் பாலாவி என்றும் பெருக
மேன்மைகொள் கேதீச்சர்தாள் மேவிய அன்பர் வாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
திருக்கேதீஸ்வர திருக்கோயில் மகோற்சவ சிறப்பிதழ்
**மன்மத வருடம் வைகாசித் திங்கள் 16 ஆம் நாள் (30.05.2015)**



**ஆசிரியர் குழு :**
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Publication of**
**HINDU RESEARCH CENTRE OF**
**ALL CEYLON HINDU CONGRESS**
**Thirukketheswarm Temple Festival**
**Special Issue - 30.05.2015**



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**



ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்



# ஆத்மீகம் கூறும் யோகக்கலை

இப்பிரபஞ்சத்தை இயக்குகின்ற இறைவன் தான் படைத்த உயிரினங்களுக்கு பல வாழ்வாதாரங்களை படைத்தருளினார். இயற்கையோடு இயைந்த, இணைந்த இனிய வாழ்விற்கு நிகர் வேறொன்றுமில்லை. தில்லைக் கூத்தனாகிய சிவபெருமான் தன் சரீரத்தை நூற்றியெட்டுத் தாண்டவமாக வெளிப்படுத்திக் காட்டினார். இதனை திருவாசகத்தில் மணிவாசகர்,

***"கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்***
***காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி....."***

என விபரிக்கிறார். இறைவன் அட்ட மாசித்திகளை ஞானிகளுக்கு உபதேசித்தார். ஞானிகள் ஆன்மாக்களைப் பக்குவப் படுத்துவதற்கு தமது சீடர்களுக்கு உபதேசித்தார்கள். அவற்றில் யோகக் கலை உன்னதமானது. வேதத்திலும் உடல், உள, ஆரோக்கியம் பற்றிய சிந்தனை கூறப்பட்டுள்ளது. ஆசனம், சிரவணம், நிவித்தியாசனம் பற்றிய ஆழமான விடயங்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போதிக்கப்பட்டுள்ளது. பதஞ்சலி யோகசூத்திரம் பற்றி திருமூலர் முதல் பல சித்தர்கள் விளக்கி உள்ளனர். சரீரத்தையும், உளநலத்தையும் ஒருங்கே சீர்செய்யும் உன்னத கலைவடிவம் யோகக் கலையாகும். மனிதர்களை ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், புலன்களை வெல்லும் மார்க்கத்தையும் போதிப்பது யோகக்கலையாகும். எம் சமயம் சார்ந்த இக்கலை மேலைத்தேசங்களில் இன்று மிகுந்த செல்வாக்கு பெற்றுவிட்டது. இக்கலைவடிவம் தோன்றிய கீழைத்தேசத்தை விட மேலைத்தேசத்தவர்கள் இக் கலைபற்றி மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர்.



இன்று மேலைநாட்டவர்கள் சமூக, உளநல வைத்தியத்துறையில் யோகக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். மேலும் நரம்பியல் சார்ந்த நோய்களுக்கு தீர்வு தரக்கூடிய ஒரு மருத்துவ வழியாக யோகக்கலையை மதிக்கின்றனர். இக்கலை பற்றிய ஆராய்ச்சிகள் விரிவடைகின்றன. பல்வேறு விதமான தீரா நோய்களுக்கு யோகக்கலையூடாக ஆறுதல் உண்டு என்ற செய்தி பரவலாக பரவி வருகின்றது.

பலவிதமான இரசாயன மருந்துகளை உட்கொண்டு வாழும் மக்களுக்கு மருந்துகளின் தாக்கத்தினால் பல உபாதைகள் ஏற்படுகின்றன. ஆனால் யோகக்கலை வருமுன் காக்கும் சக்தி உடையது. நோய்கள் வருமுன்னே அரணாக நின்று காக்கும் இக்கலையை சகலரும் அறிதல் காலத்தின் கட்டாயமாகும். இப்போது **ஐக்கிய நாடுகள் சபையில் விசேடதினப் பிரகடனத்தில் ஜூன் 21ஆம் திகதியன்று உடல், உள, உறுதியை நேசிக்கும் யோகக்கலையை முக்கியத்துவப்படுத்தும் வகையில் சர்வதேச யோகாசன தினமாக பிரகடனம் செய்வதற்கு அறிஞர்கள் திட்டமிட்டனர்.** இன்றைய இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திரமோடி அவர்களின் வேண்டுதலால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, கீழைத்தேசத்தவர்கள் தமது சொத்தாக உள்ள யோகக்கலைக்கு முதன்மை கொடுக்க வேண்டும். பள்ளித்தலங்கள், கோயில்கள், கோட்டங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அனைத்தும் மகத்தான யோகக் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து எம்மை நாம் பேணுவோமாக!.

ரிஷி தொண்டுநாதன்

# திருக்கேதீச்சரம் மீது பாடப்பெற்ற திருப்பதிகம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி னாணரா
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே! 1

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி
லெழிதிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே! 2

பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே! 3

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே! 4

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர
மிராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே! 5

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே! 6

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டந்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே! 7

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாய்ப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே! 8

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தஎம் பெருமானே! 9

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே! 10

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே! 11

திருச்சிற்றம்பலம்

# இந்துஒளி

## திருக்கேதீஸ்வர திருக்கோயில் மகோற்சவ சிறப்பிதழ்

அங்கம்மொழி அன்னாரவர் அமரர் தொழுதேத்த, வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்,
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல் எழுந்தருளியிருக்கும்

## திருக்கேதீச்சரநாதர் திருக்கோயிலின்

## வருடாந்த மகோற்சவப் பெருவிழா

இம்மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருக்கிறது.

இம்மாதம் 31ஆம் திகதியன்று இரதோற்சவம் நடைபெறவிருக்கிறது.
இதனையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
**ஆன்மீக இதழான இந்து ஒளி**
மகோற்சவச் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.
இந்த சிறப்பிதழை அருள்மிகு கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப் பெருமான்
திருப்பாதங்களுக்கு சமர்ப்பிப்பதில் அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமகிழ்ச்சியடைகிறது.


# திருஞானசம்பந்தர் தரிசித்த திருக்கேதீச்சரம்

ஏழாலை மு. ஞானப்பிரகாசம்



ஈழ நாட்டில் நிலவிய சைவ வாழ்வையும், சைவ நெறியையும், சைவச்சால்பையும் முதன் முதலாகத் தெளிவாக வெளிப்படுத்தியவர் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளே. சுவாமிகள் கி. பி. ஏழாம் நூற்றாண்டினர்.

இராமேஸ்வரக் கரையிலிருந்து, அதிதூர வணக்கம் செய்து, ஈழ நாட்டிலே மாதோட்ட நகரை நோக்கி நிற்கும் சுவாமிகளுக்கு, சூக்குமத்திற் சூக்குமமாயும், பெரியதிற் பெரிதாயும் திகழ்ந்து, ஈழ நாட்டை அருளாட்சி புரிந்து சுயம்புலிங்கம் தோன்றிக் காட்சி அளிக்கிறது. சுயம்பு மூர்த்தியாகிய சிவபிரான் திரிபுராந்தக மூர்த்தியாய் 'உடும்பு ஒன்றைப் பற்றி நிற்பது போல' திருக்கேதீச்சரத்தை இறுகப் பற்றிப் கொண்டு நிற்பதையும், பற்றியது மாத்திரமின்றி அதனையே சதா கருதிக் கொண்டு நிற்பதையும், ஆதரித்துக் காதலித்துக் கொண்டிருப்பதையும் ஒரு அதி அற்புத அருட்காட்சி மூலம் காணுகின்றார். அக்காட்சியால் விழுங்கப்பட்ட சுவாமிகளின் பாடல்கள் திருக்கேதீச்சரப் பூமி மீது பாடப்பெற்ற பாடல்களாகவே அமைந்துவிடுகின்றன.



அதிதூரத்திலிருந்து அந்தப்பூமியைத் திசை நோக்கிக் 'கைத்தொழ கெடும் இடர்வினை தானே' என்கின்றார். அந்தப்பூமியைத் தொழுதற்கு எழுவோம் என எழுந்து நின்றாலே "தொழுதெழக் கடுவினை அடையாவே என்கிறார். எழுந்து அப்பூமியை அடைவோம் என மனத்தால் உன்னி அடைபவருக்கு "அருவினை அடையாவே" என்கின்றார். அப்பூமியை அடைந்து, அப்பூமியின் பரம இரகசியமாகிய மூர்த்தியை ஒருவர் கண்டுகொள்வாராகில், அவர் பாதங்களில் விழுந்து கும்பிடுவாராகில், "மொய்த்து எழும் வினைபோமே" என்கின்றார். இவையெல்லாம் இங்ஙனமிருப்பதனால், ஈழநாட்டு மாதோட்டத்திலே, பாலாவிக் கரையிலேயுள்ள 'அத்தர் கேதீச்சரம் அடைமின்னே! அடைமின்னே!' என்றும் அறை கூவுகின்றார். சுவாமிகள் பதிகம் பாடும் பொழுது, சில தலங்களில் அவற்றின் திருவிழாப் பொலிவினையே புகழ்ந்து பாடுவார்; சிலவற்றில், ஆங்குள்ள வேத ஒலி, கீத ஒலி முதலியவற்றிற்கே முதன்மை கொடுத்துப் பாடுவார்; இன்னும் வேறு சிலவற்றில், ஆங்குள்ள அபிஷேக பூஜாதிகளையும், அர்ச்சனை புரிந்தொழுகும் அந்தணர் ஒழுக்க விசேடத்தையுமே சிறப்பித்துப் பாடுவார்; இன்னும் சிலவற்றில், அடியார்கள் உருத்திர பல் கணத்தார் போல நின்று, அட்டு இட்டு உண்டு ஒக்கலிக்கின்றதாகிய காட்சியையே பாடுவார். எங்கள் ஈழ நாட்டைப் பொறுத்தமட்டில், சுவாமிகள் தலத்தின் பெருமைக்கே, அதாவது பூமியின் மகத்துவத்துக்கே முதலிடம் கொடுத்துப் பாடுவாராயினர். ஈழநாடு ஒரு சிவபூமி என்ற கருத்துக் காட்சியே சுவாமிகள் உள்ளத்தில் மேலோங்கி நின்றதனாற்போலும். "கேதீச்சரம்" என்றால் முக்காலத்தும் கேடில்லாத கேதீச்சரம் தானே! எனக் கூறி அருளுகின்றார்.

**(நன்றி: திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் – 1976)**

# திருக்கேதீச்சரம் ஆலயத்தின் தொன்மையும் பழமையும்

## சில தகவல்கள்

சரவணமுத்து கந்தையா



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1872ஆம் ஆண்டில் கண்ட கனவு 1976ஆம் ஆண்டு யூலை மாதம் 4ஆம் திகதி பூர்த்தியானது எல்லா சைவ சீலர்களுக்கும் தெரிந்ததே. அவர் திருக்கேதீச்சர ஆலயம் அழிந்துகிடப்பதைக் கண்டு மனம் வருந்தி 1872இல் யாழ் வாழும் சைவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். எத்தனையோ சிவன் கோயில்கள் இருக்கின்றன. ஆனால் தொன்மைவாய்ந்த பழமை பெற்ற ஸ்தலமாகிய கேதீச்சரம் பாழடைந்து கிடப்பது சைவர்களாகிய உங்களுக்கு அபிமானம் வரவில்லையா என்றும் ஒவ்வொரு சைவனும் தன்னால் இயன்றதைக் கொடுத்தால் இக்கோயில் முன் இருந்த உன்னத நிலைக்கு வரச்செய்யலாம் என்று பரிந்து ஒரு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் நாவலர் பெருமான் காலத்தில் கோயிற் திருப்பணி ஒன்றும் நடக்கவில்லை.

அவர் சிவபதம் அடைந்த பின் 1893ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத் திருப்பணிச் சங்கம் ஒன்று யாழ்ப்பாணத்தவர்கள் கூட்டி முயன்ற பொழுது மன்னார் கத்தோலிக்க பெரியார்களும் குருமார்களும் முட்டுக்கட்டையாக நின்றார்கள். அப்படி இருந்தும் சொற்ப ஏக்கர் காணி பிரசித்த ஆண்டு ஏலத்தில் வாங்கினார்கள். வாங்கி, ஒரு சிறு கோயில் (சிவன்) ஸ்தாபித்தார்கள். 1903ஆம் ஆண்டு 1921ஆம் ஆண்டு மன்னாரில் வேலை செய்த அரசாங்க உத்தியோகத்தர்களால் திருத்திக் கட்டப்பட்டது.

அக்காலத்தில் புகையிரத நீடிப்பு கந்தோரில் வேலை செய்த காலஞ்சென்ற திரு.சுப்பிரமணியம் என்னும் ஒரு கணக்காளர் (Accountant in the Railway Extension Dept.) மிகச் சிரத்தை எடுத்தார் என நாம் அறிகிறோம். இவர் யாழ்ப்பாணம் சுதுவை மானிப்பாய் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். அவரே மன்னார் உப்புக்குளத்துப்பிள்ளையார் கோயிலுக்கும் காரிய கர்த்தாவாக இருந்தார் என நாம் அறிகிறோம். காலப்போக்கில் திருக்கேதீச்சரம் கோயில் பரிபாலனத்தை, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கொழும்பில் வணிகம் செய்த நாட்டுக்கோட்டை செட்டியார் வம்சாவழியினர் பரிபாலித்து தினசரி கிரமபூசை ஒழுங்குகள் தளபாடங்கள் வாகனம் ஆகிய திருக்கோயிலுக்கு உரிய பொருள்கள் எல்லாம் வாங்கி போட்டு பரிபாலனம் செய்தார்கள்.

1948ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் திகதி திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. திருப்பணிச் சபையார் இந்தக் கோவிலுக்கு திருத்தம் செய்து 1952ஆகஸ்ட் மாதம் கும்பாபிஷேகம் வைத்தார்கள். சைவசித்தாந்திகளும், இஸ்தபதிகளும் இந்து சாஸ்திர முறைப்படி இப்போ கட்டப்பட்டு ஒரு அளவிற்கு பூர்த்தியான கோவிலுக்கு அத்திவாரம் 1953, மார்ச்சு மாதம் 27ஆம் திகதி, வெட்டி அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. 23 வருட காலமாக திருப்பணி வேலைக்கு பணம் சேர்த்து பூர்த்தியாய் விட்டது. இத்திருப்பணி வேலையில் கூடிய சிரமம் எடுத்தவர்கள் சேர். கந்தையா வைத்தியநாதன் (தலைவர்) திரு.எஸ்.சிவசுப்ரமணியம் (செயலாளர்) பின்பு திரு. இ. நமசிவாயம் சட்டத்தரணியின் நன் விடாமுயற்சியால் திருக்கேதீச்சரம் கோயில் வளர்ச்சி பெற்றது.

திருக்கேதீச்சரம் கோயில் முதன்முதலாக சோழமன்னர்களால் அல்லது பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டு இருக்க வேண்டும். பாண்டியர் 1274-84 கி.பி. இலங்கையை ஆண்டார்கள். அப்போதுதான் வீரபாண்டியன் திருக்கேதீச்சர ஆலயத்தைத் திருத்தி பாண்டிய நாட்டு சிற்பம் வைத்து கோயிலைத் திருத்தி அமைத்தான் என்பது சரித்திரம். அன்றியும் புதைபொருள் ஆராய்ச்சியாளரான திரு. சண்முகநாதன் அபிப்பிராயத்தின்படி, சோழமகாராசாக்கள் தங்கள் சிற்ப சித்திரப்படி கோயிலை அமைத்தார்கள். பாண்டிய இராசாக்கள் சிதம்பரம் சிற்ப சித்திர முறைப்படி திருத்தியமைத்தார்கள் என எழுதியிருந்தார்.

ஆனால் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் எடுக்கப்பட்ட பெரிய சிவலிங்கமும், நந்தியும், கசேஷா விக்கிரகமும் கற்களால் செய்யப்பட்டன. சோமாஸ்கந்த மூர்த்தம் (வீரசக்தியுடன்) பஞ்சலோகத்தால்(செம்பு) செய்யப்பட்ட சோமாஸ்கந்த விக்கிரகம் சோழமன்னர் காலத்து செய்யப்பட்டது என்று திட்டவட்டமாக அபிப்பிராயம் எழுதுகிறார். ஆனால் சிவலிங்கமும் நந்தியும், பாண்டியன் காலத்து சித்திர சிற்பம் என்று கூறுகிறார்.

**[இலங்கை இந்து – திருக்கேதீஸ்வரம் மண்டலாபிஷேக மலர் – (1976) மாமன்ற வெளியீடு]**

சம்பந்தமூர்த்தி நாயனார் ஏழாம் நூற்றாண்டில் குமரிமுனையில் நின்று கேதீச்சரத்தானை பற்றி பதிகம் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனார் ஒன்பதாம் நூற்றாண்டில் கேதீச்சரத்தானைப்பற்றியும் பாலாவி ஆற்றின் மகிமையைப்பற்றியும் பாடி உள்ளார்கள். ஆனால் திருக்கேதீச்சரத்தில் வைக்கப்பட்டிருக்கும் நந்தி (உடைந்தது) மிகப் பெரியது. அவ்வளவு பெரிய நந்தி இலங்கையில் எந்த பழைய சிவன் கோயில்களிலும் காணமுடியாது. இந்த நந்றி தலை சரியாமல் இருப்பதால் இது நந்தன் காலத்துக்கு முந்தினது. திருப்புங்கூரில் நந்தி விலக நந்தன் பாடினான்- நந்தி விலகியது. அதன் பிறகு கோயில்களில் (சிவன்) நந்தி தலைசரிந்துதான் இருக்கிறது. கற்சிற்பர்கள், ஸ்தபதிகள், நந்தி தலைசரித்துதான் பொறிப்பார்கள். நந்தன் காலம் எப்போ? சிதம்பரம் எப்போ கட்டப்பட்டது? அக்காலத்து, நந்திகள் தலைநிமிர்ந்து தான் இருக்கும். இதுவும் ஒருகால வரலாற்றை- இலங்கையில் பொலனறுவாவில் சிவன் கோயில் ஒன்றில் தலை சரியாமல் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் சங்கானை சுதுமலை புவனேஸ்வரி அம்மன் கோயில் நந்தியும் தலைசரியாமல் இருக்கக்காணலாம். வேறு சில பழைய சிவன் கோயில்களில் நந்தி தலை சரியாமல் இருக்கின்றன. திருக்கேதீச்சரத்தில் மேற்குவீதியில் வைத்திருக்கும் சிவலிங்கத்தை உற்றுப்பார்த்தால் ஒரு ஜோதி வடிவம் இருக்கிறது. இந்த சிவலிங்கம் ஒரு பக்கத்தில் உடைந்து இருப்பதால் மூலஸ்தானத்தில் வைக்கப்படவில்லை போலும்.

**- சரவணமுத்து கந்தையா**

மாதோட்டம் கோட்டையும் திருக்கேதீச்சர சிவன் கோயிலும் பேர்பெற்ற ஸ்தலமாக இலங்கையில் இராவணன் காலத்தில் இற்றைக்கு 2000 வருஷங்களுக்கு முன் இருந்தது எனச் சரித்திரம் சொல்லுகிறது. ஸ்ரீ இராமபிரான் இராவணனை வென்று சீதையை மீட்டு இலங்கையிலிருந்து பரத கண்டத்துக்கு கொண்டுபோக முன் பாலாவிக் கரைமேல் இருந்த சிவலிங்கத்தை வணங்கினாரென சரித்திரம் கூறுகிறது. ஆகையால் இந்த பழைமைவாய்ந்த சிவலிங்கம் இராமபிரானால் வணங்கப்பட்டது என்பதற்கு ஐயமில்லை.

# சிறப்புமிக்க திருக்கேதீச்சரம்

ஐ.கைலாசநாதக் குருக்கள்

*திருக்கேதீச்சரத்தைப் பார்த்த உடனே நமது தாய் நாடான பாரத நாட்டின் நினைவு வருகிறது. காரணம் அங்கு அமைந்திருக்கும் ஆலயக் கட்டிட அமைப்பு எனலாம். தென் இந்தியச் சிற்ப வல்லுனர்களால் சிற்ப முறைப்படி விமானங்கள் ராஜகோபுரங்கள், பரிவார ஆலயங்கள் முறைப்படியும் சரித்திர ஒழுங்குகளையும் அனுசரித்து மிக அழகாக அமைந்திருக்கிறது.*

*இத்தலம், தீர்த்தம், மூர்த்தி எல்லாம் முறையாய் அமைந்திருக்கிறது.*

*இத்தலத்தில் தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், அடியார்கள், சீவராசிகள் பூசித்து வரம் பெற்றதாக சரித்திரங்களும் கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு. ஈசுவரனைக் கேது பூசித்தமையால் கேதீஸ்வரம் என்று வந்ததாகவும் கருத இடமுண்டு. அசுரர்களும் சிவபூசையிற் சிறந்தவர்கள் என்று அவர் பரம்பரையைச் சேர்ந்த மண்டோதரி மயன் முதலியோரும் பூசித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. இலங்கையில் பலவித அற்புதங்களோடு விசேஷமாக வணங்கி வந்தது இந்த ஸ்தலம் என்று கூறலாம்.*



*திருக்கேதீச்சரம் ஆலயம் கொஞ்சக் காலம் மறைந்து கிடந்தது. நமது சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்திற்குப் பின்னாக கண்டு ஆராதிக்கப்பெற்று வந்தது. அது முதல் காலத்திற்குக் காலம் திருத்தப்பெற்று இந்தியா நாட்டுக்கோட்டை நகரத்தாராலும், இலங்கை வாழ் சைவ அன்பர்களாலும் ஆதரித்து வணங்கி வந்தது. பின்னர் இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை என ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் சைவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் முதலான அன்பர்களின் பெரும் முயற்சியால் ஈசான சிவாசாரியார் நரசிம்மனைக்கொண்டு சகல பரி குறிப்பில் இருந்தபடி ஆலயங்கள், மடங்கள், குருகுலம், பாடசாலை, சுக்கிரகாரம் முதலானவைகள் எல்லாம் முறைப்படி அமையப்பெற்றிருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு மடங்களிலும் குறிப்பிட்ட தினங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறுவதோடு சிறப்பாக ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தார் மார்கழித் திருவாதிரை பத்து நாட்களிலும் பூசை, தியானம், திருமுறை ஓதல், புராணப்படனம், சமயச் சொற்பொழிவுகள், சிவபூசை மகாநாடு முதலிய நிகழ்ச்சிகளும் நடந்து வருவதைக் கவனிக்கும்போது மணிவாசகப் பெருமான் பாடிய "இன்னிசை வீணையர் யாழினர்" என்ற திருப்பள்ளி எழுச்சிப் பாட்டு நமது திருக்கேதீச்சரத்திற்கு மிகப் பொருத்தம் என்றும் இதுதானா திருப்பெருந்துறை என்று நினைக்கவும் தோன்றுகிறது.*

**[இலங்கை இந்து – திருக்கேதீஸ்வரம் மண்டலாபிஷேக மலர் – (1976) மாமன்ற வெளியீடு]**

# பாலாவியின் கரையமர்ந்த பரமன்



கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

"சிவபூமி" எனத் திருமூலரால் போற்றப்பெற்ற எமது ஈழத்திருநாட்டிலே, சிவனாலயங்களுக்குப் பஞ்சமேயில்லை. மும்மூர்த்திகளுள் முதல்வன் சிவன், சிவனாருக்கென பஞ்ச ஈஸ்வரங்கள், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்கிற்கிணங்க யாம் வழிபட்டு உய்ய எமது நாட்டின் நாலா பக்கமும் அமைந்துள்ளன. இவ்வாலயங்கள் மிகப் புராதனமானவை, அருள்மணம் கமழ்பவை. எமது திருநாட்டின் கிழக்கே திருக்கோணேஸ்வரமும், மேற்கே திருக்கேதீஸ்வரமும், வடக்கே நகுலேஸ்வரமும், காலத்தால் முந்திய முன்னேஸ்வரமும் இவற்றிற்கு மேலாக வடமத்தியில் தோன்றிய ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரமும், மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரமும் எமது சிவ வழிபாட்டிற்கு உகந்தவை. இவற்றுள் மன்னார் மாவட்டத்தில் மாந்தோட்டத்தில் பாலாவியின் கரையில் அமைந்துள்ளது திருக்கேதீஸ்வரத்தலம்.

*அங்கம் மொழி அன்னார் அவர் அமரர் தொழுதேத்த*
*வங்கம் மலிகின்ற மாதோட்ட நன்னகரில்*
*பங்கம் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்*
*செங்கண் அரவு அசைத்தான் திருக்கேதீச்சரத்தானே!*

*(- சுந்தரர் தேவாரம்)*

இவ்வாறு இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவனைப் பற்றிப் பாடித்தந்தவர் சுந்தரர்பெருமான்.

தமிழ் நாட்டில் அமைந்த பல சிவத்தலங்களையெல்லாம் தரிசித்து வந்த சுந்தரர் பெருமான், இராமேஸ்வரத்திற்கு வந்தபோது இலங்கையில் மன்னாரில் மாதோட்டத்தில் பாலாவியாற்றின் கரையில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரத் தலம் பற்றிக் கேள்வியுற்றார். இப்பழம்பெரும்பதி பற்றியும் அங்கமைந்த அருள்மிகு அட்டன் அழகனின் பெருமை பற்றியும், தன் ஞானக்கண்ணால் கண்டறிந்த சுந்தரர் மாதோட்டத்தின் வளத்தையும் பாலாவியின் தன்மையையும், செழுமையையும் இறைவன், இறைவி அருட்கருணையையும் போற்றி ஒரு பதிகத்தையே பாடியருளினார் இவ்வண்ணம் திருக்கேதீஸ்வரப் பதிகம் உருவானது.

வரலாற்றுப் பெருமைக்கும் ஆய்வுக்கும் அப்பாற்பட்ட இவ்வருட்தலம் பற்றி, ஞானப்பாலுண்ட ஞானசம்பந்த சுவாமிகளும் பாடிப் பரவியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

*மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி*
*மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்*
*பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்*
*தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே!*

(ஞானசம்பந்தர் தேவாரம்)

இந்த வகையில் ஞானச் செல்வங்களான சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும், திருஞானசம்பந்தராலும் பாடப்பெற்ற இத்தலம் பற்றி "தட்சிணகைலாய மான்மியம்", "மாந்தைப் பள்ளு" என்னும் நூல்களும் செய்திகள் தந்துள்ளன.

இத்தலத்தின் கண் உறையும் இறைவன் நாமம் திருக்கேதீஸ்வர நாதர் ஆகும். இறைவி பெயர் கௌரியம்பிகை. தல விருட்சம், வன்னி மரம். இங்குள்ள மூர்த்தியில் ஆகாயம், நிலம், நீர், வளி, அக்கினி, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் எட்டு மூர்த்தங்களும் ஒன்று சேர்ந்திருப்பதால் சுந்தரர் பெருமான் தனது தேவாரப்பாடலில் இங்குள்ள இறைவன் அட்டன் அழகன் எனக்குறிப்பிட்டுப் பாடியுள்ளார். ஞானசம்பந்தரும் தனக்கு ஞானப்பாலூட்டிய எம்பெருமாட்டிக்கு நன்றி கூறுமுகமாக தனது தேவாரப்பாடலில் தேவியை முதற்கண் குறிப்பிட்டு "தேவி தன்னொடும் திருக்கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே" எனக் குறிப்பட்டுப் பாடித்தந்தமை இங்கு கவனிக்கப்பாலது.

இத் தலத்தின் பண்டைய வரலாற்றை நோக்கின்,

"வங்கம் மலிகின்ற மாதோட்ட நன்னகர்" எனப் பாடப் பெற்றதால் இத்தலம் கேந்திர முக்கியத்துவமுள்ள வணிகப்பட்டினத்திலேயே அமைந்தது என்பது புலனாகின்றது. தேவதச்சன் மயன் என்பவனும் மகாதுவட்டா என்பவனும் நிர்மாணித்த தலம் திருக்கேதீஸ்வரம் என்பது மரபுக்கதை. மயனின் மகள் மண்டோதரி தீர்த்த யாத்திரை செய்த அர்ச்சுனன் ஆகியோர் இத்தலத்தை வழிபட்டதாகத் தட்சிண கைலாய மான்மியம் கூறுவதோடு, விஜயனுடன் இலங்கை வந்த உபதிஸ்ஸன் என்னும் அந்தணன் இத்தலத்திற் பூசை செய்துவந்ததாக மகாவம்சமும் குறிப்பிட்டுள்ளது.

பிற்காலச் சோழ மன்னர்களில் முதலாம் இராஜேந்திரன், இடைக்காலப் பாண்டிய மன்னர்களுள், முதலாம் சுந்தர பாண்டியன் முதலான மன்னர்கள் இத்திருத்தலத்திற்கு திருப்பணிகள் செய்துள்ளனர். இதன் காரணமாக கி.பி. 11ஆம் நூற்றாண்டிலும், அதனைத் தொடர்ந்த காலத்திலும் இத்தலம் தமிழ்நாட்டு திருவரங்கக் கோயிலுக்கு நிகராக, இணையாக ஏழு சுற்றுப்பிரகாரங்களோடு திகழ்ந்ததாகவும், சோழர் ஆட்சிக்காலத்தில் இம் மேன்மையுறு தலம் இராஜராஜ மகாதேவன் கோயில் என்னும் இருப்புப் பெயர் பெற்றிருந் தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறப்புறு ஆலயம் 1690ஆம் ஆண்டு அளவில் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பெற்றது. தொடர்ந்து வந்த கடற்பெருக்கால் இவ்வாலயம் இருந்த இடமும் மறைந்தது பின்னர் ஏறத்தாழ 200 ஆண்டுகளின் பின்னர் 1894ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியாளர்களால் இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்புக்களுடன் அமைந்திருந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டது. தாயுமானவர் பாடலும் இதற்குச் சான்றாகும். பின்னர் ஆறுமுகநாவலர் பெருமானின் வேண்டு கோளுக்கிணங்க யாழ் வாழ் சைவப்பெருமக்கள் ஒன்று கூடி காடு

வெட்டி இறை சித்தத்தின் வண்ணம் இத்திருத்தலம் அமைந்த இடம், கிணறு, மகாலிங்கம், சோமாஸ்கந்தர், விநாயகர் ஆகிய விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பெற்றன. ஆலயத் திருப்பணிகள் ஆரம்பித்து இராமேஸ்வரம் வழியாக காசியிலிருந்து கொணர்ந்த சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமும் கற்கோயில் அமைத்து ஸ்தாபிக்கப்பெற்று கும்பாபிஷேகமும் இடம்பெற்றது.

நாவலர் பெருமானின் வேண்டுகோள் மற்றும் வண்ணார்பண்ணை பசுபதிச் செட்டியார் மற்றும் சைவத் தொண்டர்கள் யாவரினதும் தொடர் முயற்சியால் இப்புண்ணிய திருக்கேதீச்சரத்தலம் மீண்டும் புது அருட்பொலிவு பெற்றெழுந்தது. சுந்தரப்பெருமானால் பாடப்பெற்ற சுந்தரக்கோயில் மீண்டும் சுந்தரப் பொலிவு பெற்றது.

இன்னும் இத்தலத்தின் தீர்த்தச்சிறப்பினைக் கூறப்புகின், இத்தலத்தின் தீர்த்தமாகிய "பரிய திரை எறியாவரு பாலாவி" என சுந்தரப் பெருமான் புகழ்ந்ததோடு, "பாவம் வினை அறுப்பான் பயில் பாலாவி" எனவும், பத்தாகிய தொண்டர்தொழு பாலாவி என்றும் பாலாவித் தீர்த்தத்தின் சிறப்பையும், மேன்மையையும், அருட்திறனையும் சுந்தரர் போற்றிப்பாடியுள்ளார். மேலும் மகா சிவராத்திரி காலத்தில் அடியார்கள் வெள்ளிக் குடங்களில் பாலாவித் தீர்த்தத்தை அள்ளித் தாமே கொண்டு வந்து சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகித்தல் கண்கொள்ளாக் காட்சியாக அமையும். இச் சிவலிங்கமே புராதன கோயிலின் மூலஸ்தானத்தில் அமைந்திருந்த மிகப்பெரிய மகாலிங்கமாகும். இந்த சிவலிங்கம் இப்போது ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இத்தலத்தில் ஆறுகாலப்பூசைகள் ஒழுங்காக இடம் பெறுகின்றன. அத்தோடு மகாசிவராத்திரி உற்சவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. வருடாந்த நடேசர் அபிடேகங்களும் பிரதோஷ விரத விழாக்களும் கூட சிறப்பாக ஆண்டுதோறும் இத்திருத்தலத்தில் இடம்பெற்று வருதல் கண்கூடு. இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெறுவதோடு, வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறும் வகையில் விழா அமைகின்றது.

அடியார்கள் சேவையாக திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், சிவராத்திரி மடம், திருவாசக மடம், கௌரீசர் மடம், கதிர்காம யாத்திரைத் தொண்டர் சபை மடம், நாவலர் மடம், நகரத்தார் மடம் மற்றும் சமீப காலத்தில் அமைக்கப்பெற்ற புதிய மடங்களுமாக இவை யாத்திரிகர்கட்கு அளப்பரிய சேவைகளைத் தினமும் இத்தலத்தில் செய்து வருதல் பாராட்டுக்குரியது.

இந்த வகையில் திருக்கேதீஸ்வர ஆலயம் அருள் நிறைவுடன் அழகான சூழலில் வானுற எழுந்த இராஜகோபுரம் வண்ணக் கலையின் எழில் கொஞ்சும் ஆலயச் சிற்பங்கள் யாவும் செய்யடியாரை ஈர்க்க பாலாவியின் கரையிலே கேதீஸ்வரத்தான் கௌரியம்பிகையோடு வீற்றிருந்து பாலாவியின் கரையமர்ந்த பரமனாக இன்றும் அருளாட்சி செய்து வருகின்றான்.

*அட்டன் அழகாக அரைதன்மேல் அரவார்த்து*
*மட்டுண்டு வண்டாடும் மாதோட்ட நன்னகரில்*
*பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்*
*சிட்டன் நமையாள்வான் திருக்கேதீச்சரத்தானே!*

(சுந்தரர் தேவாரம்)

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்



திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே!

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி அணிந்த கறைக் கண்டன்
படஏரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே!

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே!

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டுயாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியுமறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே!

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே!

வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே!

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்ட நன்னகரில்
பால்நத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே!

அட்டன்னழ காகவரை தன்மேலரவு ஆர்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே!

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை யாள்வான் திருக்கேதீச்சரத் தானே!

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டுயாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே!

திருச்சிற்றம்பலம்

# எங்கள் ஈசனைக் கண்டு கொண்டேனே!

கவிஞர் வி. கந்தவனம்



சோதியாக வளர்ந்து படர்ந்து
சோதனைக ளளந்து கடந்தே
ஆதியந்த மிலாது நிலைத்தும்
அன்பருள்ள மனையில் திளைத்தும்
வேதஞானசம் பந்தரின் பாடல்
விளைந்து கேட்டும கிழ்ந்திருந்தானை
கேதுநாளும் வழிபடப் பெற்ற
கேடுபோக்கியைக் கண்டுகொண் டேனே!

நீறுபூசுங் கடற்கரை தோறும்
நித்திலஞ் சந்த னத்துடன் சேரும்
மாறிலாதபல் வாணிபக் கப்பல்
வரிசைகொண்டு முன்நின்றமா தோட்டம்
பேறுபெற்றிடக் கௌரியுந் தானும்
பேதமின்றி விளங்கிநின் றானை
கூறுகேது வழிபடப் பெற்ற
கொற்றவன்றனைக் கண்டுகொண் டேனே!

பத்தருக்கு வரும்புற நோயும்
பாவியார்தமை யாளக நோயும்
சுத்திசெய்து தொடர்ந்து முன்பாய்ந்த
தூயவாறு பாலாவி மருங்கில்
பித்தன் என்றவன் அர்ச்சனை பாட்டால்
பின்னர் செய்ய மகிழ்ந்திருந் தானை
நித்தம்கேது வழிபடப் பெற்ற
நிகரிலான்றனைக் கண்டுகொண் டேனே!

தென்னை வான்குடை யாடைபா லாவி
தென்றல் சாமரை பாட்டுக்குயில்கள்
மன்னுவேதம் கிளிகள்நல் லாடல்
மஞ்ஞை வாத்தியம் மந்திகள் யானை
வன்ன மான்வட்டம் பந்தம்சி றுத்தை
என்னும் வண்ணம் பவனிகொள் வானை
இன்னற்கேது வழிபடப் பெற்ற
இயற்கை வாணனைக் கண்டுகொண் டேனே!

ஒன்றிப் பத்தர் உலாவிவணங்க
ஓதும்வேதம னாவியி ணங்க
வென்ற சோழர் விழாக்களெடுத்து
வீதி தோறும் வணங்கநின் றானை
இன்று மன்றுமென் றென்றுமுள் ளானை
இருவர் பாடல் செவிமடுத் தானை
என்றும்கேது வழிபடப் பெற்ற
எங்கள் ஈசனைக் கண்டுகொண் டேனே!

மட்டி லாவளர் மாநகர் பொங்கி
வார்கடல் புணர் பானதி வானம்
முட்டுகோபுரக் கோயிலென் றெல்லாம்
மூடி மண்ணுளொர் காட்டையுண் டாக்கி
நிட்டைகொண்டு தனித்திருந் தானை
நினைப்ப வர்மனம் நின்றருள்வானை
இட்டகேது வழிபடப் பெற்ற
ஏகநாதனைக் கண்டுகொண் டேனே!

ஆண்ட கோயில் களித்திருந் தானை
அதுவுமின்றி யொளித்திருந் தானை
மீண்டுந் தன்னவர் நாவலர் மூலம்
மேன்மை கொள்பதி கங்களைக் காட்டித்
தூண்டிப் பத்தரைத் தொல்புகழ் நாட்டித்
தோண்டத் தோன்றி யெழுந்திருந் தானை
வேண்டிக்கேது வழிபடப் பெற்ற
வேதநாதனைக் கண்டுகொண் டேனே!

நல்ல கூத்திவர் செய்கைகள் என்று
நான்கு திக்கடி யார்களு மின்று
எல்லை யிற்புகழ் பாடிய வண்ணம்
இன்ப நெஞ்சுநெக் காடிய வண்ணம்
செல்ல வல்வினை சேர்ந்துநற் பூசை
செய்ய வேற்றருள் செய்திருப் பானை
வல்லகேது வழிபடப் பெற்ற
மாந்தை யார்தமைக் கண்டுகொண் டேனே!

சாதி வேற்றுமை போகிடல் வேண்டும்
தமிழர் ஒற்றுமை யாகிடல்வேண்டும்
ஏதமில் தமிழ் ஆண்டிட வேண்டும்
என்று நொந்தடி யார்கள்வ ணங்கும்
போது புன்னகை பூத்தருள் வானை
பூண்ட மாலையி ரண்டுடை யானை
கேதுமுன்னர் வழிபடப் பெற்ற
கேண்மை யாளரைக் கண்டுகொண் டேனே!

போற்றி தொல்வர லாற்றுமா தோட்டம்
போற்றி புண்ணிய பாலாவித் தீர்த்தம்
போற்றி யுள்ளத்துள் எண்ணிய கேது
போற்றி பூசனை செய்தநற் பான்மை
போற்றி ஈழத்த வப்பயன் போற்றி
பொய்யில் தொண்டர் உளத்தவர் தேவர்
போற்றி கௌரியம் மைப்பெரு மாட்டி
போற்றி கேதீச்ச ரர்பதம் போற்றி!

*(இலங்கை இந்து – திருக்கேதீஸ்வரம் மண்டலாபிஷேக மலர் – (1976) மாமன்ற வெளியீடு)*

## வரலாற்றிலிருந்து சில தகவல்கள்

# திருக்கேதீச்சரநாதனை வழிபட்டோரும், திருப்பணிகள் செய்தோரும்

மாதோட்டத் திருக்கேதீச்சரநாதனைத் திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், கேதுபகவான், மகாதுவட்டா, பிருகு முனிவர், அகத்திய முனிவர், இராவணன், மாலியவான், மயன், மண்டோதரி, ஸ்ரீராமர், பாண்டியர், சேரர், இராசேந்திர சோழன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர். திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இராமேச்சுவரக் கடற்கரையில் நின்று தரிசித்துத் தேவாரப் பதிகங்கள் பாடித் துதித்துள்ளனர்.

அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் பொருட்டுத் தென்னாட்டுத் தலங்களை வழிபட்ட பின்னர் ஈழநாடு சேர்ந்து கேதீச்சரநாதனை வழிபட்டான். மன்னார்த்தீவுக்கு அருகே தென்பாலுள்ள பகுதியை அரசுபுரிந்த நாக கன்னிகையை அருச்சுனன் சந்தித்து அவளைத் திருமணம் செய்துகொண்டான் என ஒரு வரலாறு கூறும்.

கி.மு.6-ஆம் நூற்றாண்டிலே கலிங்கநாட்டு அரசகுமாரனான விஜயன் அவனது நண்பர்களுடன் இலங்கை மாதோட்டத் துறைமுகத்தில் இறங்கிய போது விஜயனது நண்பனும் பிராமணக் குருவுமான உபத்தீசன் கேதீச்சரநாதனைப் பூசித்தான் என்ற வரலாறும் உண்டு

திருப்பணிச் சபையார் திருக்கேதீச்சர ஆலயச் சுற்றுப்பிரகாரத்தில் பூமியில் இருந்து எடுத்த மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேசுவரர் முதலிய மூர்த்திகளைப் பரிவார பிரதிஷ்டை செய்து 31-10-1960இல் கும்பாபிஷேகம் செய்வித்தனர். மேலும் பற்பல திருப்பணிகளுடன் ஐந்து தளமுடைய இராசகோபுரம், சுற்றுமதில்கள் முடித்து கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் முதலியவற்றின் வேலைகளைக் கருங்கற்களால் செய்யப்பெற்றன. மஹாமண்டபம் கருங்கற்றிருப்பணியும் நடந்தது. மிகப்பெரிய வெண்கலமணியை (இலண்டனில் வார்ப்படமானது) அதற்கேற்ற உறுதியான மணிக்கூடொன்றில் இராசகோபுரத்தின் இடப்பக்கத்தே அமைத்துள்ளனர். அம்மணியின் கம்பீரமான தெளிவான ஓங்காரநாதம் பலமைல்களுக்குக் கேட்கவல்லது.

காலஞ்சென்ற சைவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணத்திற்குச் செய்த சிவத்தொண்டுகள் அளப்பரியன ஆகும். திருப்பணிச் சபையில் உள்ள எல்லாரும் சிறந்த நற்சைவமணிகள் ஆவர்.

கேதுபகவான் பூசித்த திருக்கேதீச்சரத் திருத்தலத்தை சூரபன்மன் மனைவி பதுமகோமளையின் பாட்டனான மகாதுவட்டா என்ற தேவசிற்பி பூசித்துப் பல திருப்பணிகள் செய்தான். இராவணன் மாமனாகிய மயன் என்பவனும் வழிபட்டுப் பல திருப்பணிகள் புரிந்தான்.

கி. மு. 6ஆம் நூற்றாண்டிலே கலிங்கதேச அரச குமாரனான விஜயன் இவ்வாலயத்தைப் புதுப்பித்துத் திருப்பணிகளைச் செய்வித்தான் என்று "யாழ்ப்பாண வைபவமாலை" நூல் கூறுகிறது.

கி. பி. 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராசராசசோழன் மகன் இராசேந்திர சோழன் திருப்பணிகள் பலவற்றை நன்கு செய்து கோயிலைச் சுற்றி நான்கு பக்கமும் நன்னீர் உவர்நீர் அகழிகளைப் பாதுகாப்பின் பொருட்டு அமைத்தான்.

கி. பி. 13ஆம் நூற்றாண்டின் (1251-1280)இடைப்பகுதியிலே முதலாம் சுந்தரபாண்டியன் பற்பல சிற்பவேலைத் திருப்பணிகளைச் செய்து நித்திய நைமித்திகங்களைச் சிறப்புற நடத்தினான். கி.பி.14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளிலும் பாண்டிய மன்னர்கள் கோயிலை ஆதரித்துள்ளனர்.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பகைவராலும் நீராலும் மண்மாரியாலும் அழியுண்டு கோயிலின் நினைவே எவர்க்கும் இல்லாதிருந்தது. கி.பி.1872இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இத்தலத்தைப்பற்றி நினைவுறுத்தியதன் பயனாக முன்னர் மண்மூடிய கோயிலிருந்த 40ஏக்கர் நிலம் அரசாங்க ஏலம் விடப்பட்டதன் மூலமாக 13-12-1893இல் பெறப்பட்டது. அதற்கு நகரத்தார்களும் இலங்கைச் சைவ நன்மக்களும் ஆவன செய்தனர்.

பின்பு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை திரு.சி.த.மு பசுபதிச்செட்டியார் அன்பர்களின் பொருள் கொண்டு பெருஞ் செலவுசெய்து கேதீச்சரத்தில் மண் அகழ்வித்துப் பழைய சிவாலயம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தார். கோயில் எழுப்பிக் கிரியாலிங்கம், கௌரியம்மை, நந்தி, பலிபீடம் முதலியன அமைத்து 28-6-1903இல் கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய பூசைகள் நடைபெறச்செய்து மேலும் திருப்பணிகளைச் செய்து கி.பி.1910இல் இன்னொரு கும்பாபிஷேகமும் செய்து முடித்தார்.



காலப்போக்கில் கேதீச்சரத்தில் நித்தியபூசைகள் மட்டும் நடைபெற்றுக்கொண்டு திருப்பணிவேலைகள் சிறிது சிறிதாகக் குறைந்தன. இதனை உணர்ந்த கொழும்பிலுள்ள சைவப்பெருமக்கள் சார்பில் 1944ஆம் ஆண்டிலே கொழும்பு பொரளையிலுள்ள திரு.கா. நாகலிங்கம் என்பவரின் இல்லத்தில் திரு.வ.க.செல்லப்பா, ஸ்ரீ.சி.சரவணமுத்து அடிகளார், திரு.நீ.ஆறுமுகம் மூவரும் சேர்ந்து ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்று முதற்கண் ஆரம்பித்தார்கள். அத்திருக்கூட்டத்தின் முயற்சியால் 1948ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத்தில் சைவ மகாநாடொன்று நிகழ்ந்தது. அம்மகாநாடு இலங்கைச் சைவமக்கள் மனதிலே பெருவிழிப்பை ஏற்படுத்தியது. அவ்விழிப்பை அடித்தளமாகக் கொண்டு 19-10-1948இல் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபை தோன்றியது. இச்சபையார் பல திருப்பணிகளைச் செய்து 1952ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கும்பாபிஷேகம் செய்தனர். அதில் மதுரை ஆதீனமும் பெரும் பங்காற்றியது. மேற்கொண்டும் பணிகளை வேகமாகச் சபையார் தொடர்ந்தனர்.

**(நன்றி :- இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு - திருவாசகமடம் வெளியீடு-1984)**



# திருக்கேதீச்சரத் திருப்பணியும் சேர். கந்தையா வைத்தியநாதனும்

ச. அம்பிகைபாகன்

சேர் கந்தையா வைத்தியநாதன் பத்தாண்டுகளுக்கு மேல் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக்குத் தலைவராகவிருந்துள்ளார்கள். இக்காலத்தில் திருக்கேதீச சரத்தில் தமக்கென ஓர் இல்லத்தை அமைத்தார். "கொட்டில்" என்பது அதன் பெயர். அதனிலிருந்து கொண்டே திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டு வந்தார்கள். இப்படி அங்கு வசித்து வந்தபடியால் தான் ஆலய வேலைகளை மேற்பார்வை செய்ததோடு அங்கு வரும் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களுடன் நேராகத் தொடர்பு கொள்ள முடிந்தது. இப்படி அவர்களுக்கு முன்னும் பின்னுமிருந்த திருக்கேதீச்சர ஆலய நிர்வாகிகள் ஒருவரும் அங்கு வசிக்கவில்லை.

சேர்.கந்தையா வைத்தியநாதன் காலத்துக்கு முன்னும் பல பெரியார்கள் திருக்கேதீச்சர ஆலயம் சம்பந்தமாக அருந் தொண்டாற்றியுள்ளார்கள். ஆறுமுக நாவலர் அவர்கள் திருக்கேதீச்சரத்தில் பழையபடி ஓர் ஆலயம் அமைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியுள்ளார்கள். பசுபதிச் செட்டியார் அவர்கள் பழைய ஆலயமிருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவ்விடத்தில் ஒரு சிறு ஆலயத்தை நிறுவி கும்பாபிஷேகம் நடாத்துவித்தார்கள். சிவபாதசுந்தரர் காலத்தில் பிரபல ஸ்தபதி செல்லக்கண்ணு அவர்கள், கட்டடக் கலைஞர் நரசிம்மன், ஈசான சிவாச்சாரியார் முதலியோரின் ஆலோசனையுடன் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு ஒரு முறையான படம் தயாரித்துக் கொடுத்தார். இப்படத்தின்படி உட்பிரகாரம், இரண்டாம் வீதி, தேரோடும் வீதி முதலியவற்றை அமைத்து திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண வேலையை ஆரம்பித்த பெருமை சேர்.கந்தையா வைத்தியநாதனையே சாரும்.

வீதிகளை அமைத்ததும், சேர்.கந்தையா வைத்தியநாதன் பரிவாரக் கோயில்களை அமைக்கத் தொடங்கினார். 1960 ஆம் ஆண்டில் விநாயகர், வைரவர், சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கம், மகாலிங்கம், சுப்பிரமணியர், நடராசர் முதலியோருக்குரிய கோயில்களைப் பூர்த்தி செய்து திருவருள் துணைகொண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

இப்பரிவாரக் கோயில்களுக்குள் மகாலிங்கத்துக்கு அமைக்கப்பட்ட மண்டபத்தை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். இம்மண்டபம் அழகான தூண்களைக் கொண்டது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் மிகவும் பழமையானது. சிறிது பின்னப்பட்டிருந்தபடியால், அதனைப் புதிதாக அமைக்கப்பட்ட கோயிலுக்குப் பிரயோசனப்படுத்தப்படவில்லை. இதனையே தமது செலவில் அமைக்கப்பட்ட மண்டபத்தில் பிரதிஷ்டை செய்வித்தார்கள். அதனோடு அதற்குச் சகல அடியார்களும் பாலாவியிலிருந்து தீர்த்தக் காவடியெடுத்து வந்து தாமே அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடு செய்து வைத்தார்கள். திருக்கேதீச்சரத்துக்கு இது ஒரு சிறப்பான அம்சமாயிருக்கிறது. இது காசி விசுவநாதருக்கு கங்கா தீர்த்தத்தை மக்கள் அபிஷேகம் செய்வதை ஒத்துள்ளது. இப்படி அபிஷேகம் செய்யும் பொழுது மக்களுக்கு ஏற்படும் ஆனந்தம் எழுத்தில் சொல்லி அடங்காது. மேலும் தீர்த்தக் காவடியினால், கோயில் திருப்பணிக்கு ஆயிரக்கணக்கில் பணம் சேர்ந்துள்ளது. இம்முறையை ஏற்படுத்தியதற்காக நாமென்றும் சேர்.கந்தையா வைத்திய நாதனுக்கு நன்றியுள்ளவர்களாகவிருக்க வேண்டும். அவர்கள் காலத்தில் தினந்தோறும் பாலாவியிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்த பின்னரே பூசை செய்யப்பட்டது. இப்பொழுதும் இம்முறை கையாளப் படுகிறதென நினைக்கின்றேன். இல்லாவிட்டால் அவர் பெயரால் ஒரு கட்டளை ஏற்படுத்தி இது ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

சேர். கந்தையா வைத்தியநாதன் தினசரி பூசையால் திருமுறைகளுக்கு சிறந்த இடத்தை ஏற்படுத்தியது இன்னுமொரு சிறந்த அம்சமாகும். குன்றக்குடி அடிகளார் திருக்கேதீச்சரம் சென்றிருந்தபொழுது தமிழிலும் வழிபாடு நடைபெற வேண்டுமென வற்புறுத்தினார். தமிழிலும் வழிபாடு நடைபெற வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்ட சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வழமையான பூசையோடு தமிழ் மறையோதுதலையும் சேர்க்கத் தீர்மானித்தார். வழக்கமாக கோவில்களில் பூசைகளெல்லாம் முடிந்த பின்பே திருமுறைகளை ஓதுவார்கள். ஆனால் இவர் ஒவ்வொரு பிரதான சன்னிதானத்திலும் பஞ்சாலாத்தி காட்டமுன், பூசையின் அம்சமாக திருமுறைகளை ஓதுவதற்கு ஒழுங்கு செய்துள்ளார்கள். நானறிந்த வரையில் ஈழநாட்டில் திருக்கேதீச்சரத்தில்தான் இம்முறை கையாளப்பட்டு வருகிறது. மறு கோவில்களும் இம்முறையைப் பின்பற்றுவது விரும்பத்தக்கது.

சேர். கந்தையா வைத்தியநாதன் காலத்திலேயே மாந்தைச் சந்தியிலிருந்து திருக்கேதீச்சரத்துக்குத் தார் வீதியும், மின்சார வசதியும், பாலாவிக்குக் கட்டுவேலையும், மணியும், மணிக்கோபுரமும், தபால் நிலையம் முதலியனவும் அமைக்கப்பட்டன.

திருக்கேதீச்சரத்தில் பிராமணப் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கு ஒரு குருகுலத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில் நிறுவியது இவரது இன்னுமொரு சிறந்த பணியாகும். பிராமணப் பிள்ளைகளை ஆலயச் சூழலில் பழைய குருகுல முறைப்படி பயிற்றுவிப் பதற்கு ஒழுங்கு செய்தார்கள். வேதாமகங்களிலும், சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும், திருமுறைகளிலும், இதிகாச புராணங் களிலும் பயிற்சி பெறுவதற்கு ஒழுங்கு செய்தார்கள். இதனை நடாத்துவதற்கு அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்களினதும் கொக்குவில் குமாரசுவாமிப் புலவரினதும் உதவியைப் பெற்றார்கள். இக்குருகுலத்தை நிறுவுவதற்கு திருமதி. சிவானந்தம் தம்பையாவும், அமெரிக்க கல்வி நிறுவனத்தாரும் பொருளுதவி செய்தனர்.

சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் திருக்கேதீச்சரம் முன்னேறி வருவதைக் கண்ட

பிறமதத்தவர் திருக்கேதீச்சர ஆலயத்துக்கென விடப்பட்ட காணியில் அத்துமீறிக் குடியேறினர். இம்மதத்தைச் சேர்ந்த மேலிடத்தாருக்கு இவர் முறையிட்டபோதும் அவர்கள் வாளாவிருந்தனர். இதனால் அவர் இவ்விஷயத்தை நீதிமன்றம் வரைக்கும் எடுத்துச்செல்ல நேர்ந்தது. இக்காலத்தில் அவர்பட்ட கஷ்டம் அளப்பில. அவர் இப்படி உரிய காலத்தில் முயற்சி எடுத்தபடியாலேயே திருக்கேதீச்சரத்தின் புனிதத்தன்மை காக்கப்பட்டது.

சேர். கந்தையா வைத்தியநாதனுக்கு திருக்கேதீச்சரத்திலிருந்த ஈடுபாட்டை விளக்கும் ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதை எனக்கு அவர்களே யாழ்ப்பாணத்துக்கு அவர்கள் செய்த கடைசிப் பிரயாணத்தின் போது கூறினார். டட்லி சேனநாயக்கா அப்பொழுது பிரதமராக விருந்தார். ஒருநாள் டட்லி அவரைச் சந்தித்தபொழுது பின்வருமாறு கூறினார். "சேர்.கந்தையா நீங்கள் ஏன் என்னை இப்பொழுது அதிகம் சந்திப்பதில்லை. பாரிஸ், லண்டன் முதலிய இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஸ்தானிகர் பதவிகள் காலியாக விருக்கின்றன. இவற்றில் ஒன்றை நீங்கள் ஏற்றுக்கொண்டால் பெரும் உதவியாக விருக்கும்." அதற்கு அவர் கூறிய விடை பின்வருமாறு:-

"உங்கள் குடும்பத்துக்கு (சேனநாயக்கா குடும்பத்துக்கு) மகியங்கனை எப்படியோ அப்படியே திருக்கேதீச்சரம் எனக்கு. என் வாழ்க்கை அதன் வளர்ச்சிக்கென அர்ப்பணித்துள்ளேன். ஆனபடியால் வெளிநாட்டுக்குப் போக வசதிப்படாது. உள்நாட்டில் ஏதோ உதவி செய்ய முடியுமானால் அதனைச் செய்வேன்."

மேற்கூறியவற்றால் சேர். கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சரத்திற்கு ஆற்றிய பணிகளையும் அவர்களுக்கு அவ்வாலயத்திலிருந்த ஈடுபாட்டையும் கவனித்தோம். அவர் ஆரம்பித்து வைத்த திருப்பணிகள் நிறைவேறி வரும் இக்காலத்தில் அவர்கள் ஞாபகத்தைப் போற்றிப் பாதுகாப்பது சைவமக்கள் கடனாகும்.

**(இலங்கை இந்து - திருக்கேதீஸ்வர மண்டலாபிஷேக மலர் - (1976) - மாமன்ற வெளியீடு)**

# திருக்கேதீச்சரத்தின் பெருமை

**சேர். கந்தையா வைத்தியநாதன்**

1960 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மூன்றுநாள் பெருவிழாவாக திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 55 ஆம் ஆண்டு விழாவையொட்டிய சைவ மாநாட்டின்போது சேர்.கந்தையா வைத்தியநாதன் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து சில பகுதிகள் இவை.

பண்டுதொட்டுத் தமிழ் நாட்டிற்கும் ஈழத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருவதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற அறிஞர்களை இன்றுவரை இரு நாடுகளும் "கொண்டும் கொடுத்தும்" வந்துள்ளதை வரலாறு கூறும். மேலும், தேவாரம் பாடிய நாயன்மார்களுள் இருவர் திருக்கேதீச்சரத்தின் பெருமையைப் பாடிப் பரவியுள்ளனர். அவர்களுள் ஒருவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். மற்றவர் ஒன்பதாம் நூற்றாண்டிலே சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவர். இன்னும் ஸ்ரீராமர், இராவணனை வென்று இலங்கையிலிருந்து அயோத்திக்குச் செல்லும்போது வழியில் திருக்கேதீச்சரத்துப் பெருமானை வழிபட்டுச் சென்றார் என்று தக்ஷிண கயிலாய புராணம் கூறுகின்றது. மேலும், பஞ்சபாண்டவர்களுள் ஒருவனான அருச்சுனன் தீர்த்தயாத்திரையின் பொருட்டு இலங்காபுரிக்கு வந்தான் என்றும், அவ்வாறு வந்த அவன் திருக்கேதீச்சரத்தானை வழிபட்டுச்சென்றான் என்றும் சொல்லப்படுகின்றது. விசயன் இலங்கைக்கு வந்தபோது அவனோடு கூடவந்த அந்தணன் ஒருவன் சிவாலயம் ஒன்றிற் பூசை வழிபாடு செய்தான் என்று மகாவம்சம் எடுத்துரைப்பதும் திருக்கேதீச்சரத்துச் சிவாலயம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். ஆறாம் நூற்றாண்டிற் பாண்டிய மன்னர்கள் திருக்கேதீச்சரத்தில் ஆலயத் திருப்பணிகள் பல புரிந்தனர். இன்னும், சோழரின் ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரத்தின் சிறப்பு உச்சநிலையை அடைந்தது.

திருக்கேதீச்சரத்தின் பெருமையை நாயன்மார்கள் பாடிப் போந்தனர். திருநாவுக்கரசர் "பூதியணி பொன்னிறத்தர் பூணுநூலர் பொங்கரவர் சங்கரர்வெண் குழையோர் காதர், கேதீச்சரம் மேவினார்" என்று திருத்தாண்டகத்திற் குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகப்பெருமான் "குயிற் பத்திலும்" "திருவார்த்தையிலும்" இலங்கையில் மண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் "திருக்கேதீச்சரமே" என்று குறிப்பிடப் பட்டுள்ளதாக எல்லோராலும் கருதப்படுகின்றது. கேது வழிபட்டமையால் "கேதீச்சரம்" என்ற பெயரைப் பெற்ற இத் தலத்தை வழிபடுவோர் வினைகளும் நோய்களுந் தீரப்பெற்று இன்புறுவர். *"கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே"* என்றும், *"அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைவார்க்கு அருவினை யடையாவே"* என்றும், *"முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே"* என்றும் பலவகையாகத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்துள்ளார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தான், *"அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்"* என்றும், *"வெய்ய வினையாய வடியார்மேல் ஒழித்தருள்வான்"* என்றும், *"ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான"* என்றும், "குறையாத் தமிழ்" சாற்றியுள்ளார் எனவே, பயமும் பீதியும் நிறைந்த இக்காலத்தில் வினையையும் நோயையும் தீர்க்குந் திருக்கேதீச்சரத்தான் கோயில் கொண்டுள்ள இப் பழம் பகுதியில் இவ்விழா நடைபெறுவது மிகமிகப் பொருத்தமுடையதன்றோ!

# திருக்கேதீச்சரப்பெருமான் திருவடி தீண்டப்பெற்றோர்

நா. முத்தையா

***திருக்கைலாயத்திலிருந்து வாயு பகவானால் பறித்தெறியப்பட்ட மூன்று சிகரங்களுள் திருக்கேதீச்சரமும் ஒன்றாகும். எம்பெருமான் திருக்கைலாயத்தில் இருந்து அருள் செய்வது போலவே இங்கும் அருள் செய்கின்றார் என்பது புராண வரலாறு. அதனாலேயே இதற்குத் தெட்சிண கைலாயம் என்று பெயர் வழங்குகின்றது.***

### கேது பகவான் வழிபட்டமை

கேது என்பவன் அசுரர்களில் மிக வலிவு படைத்தவன், நெடிய வடிவினன். தன் தவ வலிமையால் சாயக்கிரகபதம் பெற்றவன். அசுரக் கூட்டத்தோடு சேர்ந்திருந்த தன்மையினால் அகங்காரம் முற்றும் அறாதிருந்தான். தன்பிழை உணர்ந்து தென் கயிலாயம் நண்ணி இறைவனைச் சிவலிங்க வடிவில் இறைஞ்சினான். உற்றார் உறவினரோடு கூடியிருந்து அபிஷேகம் முதலிய ஆராதனைகள் செய்தான். தனது உள்ளத்திலே கேதீச்சரப் பெருமானின் திருவடிகளை இடைவிடாது தியானித்த பெரும் பேற்றினாலே எம்பெருமான் கௌரி அம்மையோடும் இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினார். அன்று தொடக்கம் இறைவர் கேதீச்சரநாதர் என்றும் தலம் கேதீச்சரம் என்றும் அழைக்கப்படுவதாயிற்று. கேது ஞானகாரகன், தவத்தின் மகிமையால் கிரகபதம் பெற்றான். அதனால் "பகவான்" என்று அழைக்கப்பட்டான். கேது பகவான் என்று அழைத்தல் மரபாயிற்று.

### மகாதுவட்டா வழிபட்டமை

சூரபன்மனுடைய மனைவியான பதுமகோமளையின் பாட்டனாரின் பெயர் மகாதுவட்டா என்பது. இவன் நினைத்த உடனே நினைத்தவற்றைப் படைக்குந் திறமை பூண்ட தெய்வச் சிற்பி. பூவுலகிலுள்ள சிவத்தலங்களுள் கேதீச்சரத்தலம் மிகச்சிறந்தது என்று கேள்வியுற்று அங்கு வந்து அபிஷேக ஆராதனைகள் தினமும் செய்து தவம் இருந்தான். கேதீச்சரப் பெருமானின் திருவடிகள் இடைவிடாத தியானத்தினாலே பதியப்பெற்றமையினால் எம்பெருமானுடைய திருக்காட்சி கிடைத்தது. உனக்கு என்ன வேண்டும் என்று எம்பெருமான் கேட்டார். தேவரீரிடத்தில் குறையாத மெய்யன்பு பூண்டொழுகும் அடியார்களில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளவேண்டும் என்று குறையிரந்தான். இறைவரும் அப்படியே ஆவதெனக் கூறி லிங்கத்திலே மறைந்தருளினார். கேதீச்சரநாதர் அருள்பெற்ற மகாதுவட்டா பெருமானாருக்கு நல்ல முறையில் கோயில் ஒன்று அமைத்தான். கோயிலை மத்தியாக வைத்து நகரம் ஒன்றும் அமைத்தான். மகாதுவட்டா அமைத்த நகரம் ஆகையினாலே மாதுவட்டாபுரம் என்று அழைக்கப்பட்டுக் காலகதியிலே மாதோட்டம் ஆயிற்று.

### இராமபிரான் வழிபட்டமை

தினமும் சிவபூஜை செய்து வந்த இராவணேஸ்வரனை இராமபிரான் கொன்றபடியினாலே அவரை பிரமகத்திதோஷம் தொடர்ந்தது. அதை நீக்குவதற்காக முன்னேசுவரம் சென்று பொன்னால் லிங்கம் அமைத்துச் சிவபூசை புரியலானார். திருக்கோணேஸ்வரம் சென்று இரத்தினலிங்கம் அமைத்துப் பூசை புரிந்தார். திருக்கேதீச்சரம் சென்று பாலாவியில் தீர்த்தம் ஆடி வெள்ளியினால் லிங்கம் அமைத்துப் பூசை புரியலானார். இராமபிரான் பஞ்சாட்சரத்தை ஆயிரத்தெட்டு முறை ஜெபம் செய்து தியானத்தில் அமர்ந்தார். எம்பெருமானுடைய திருவடிகளை இடைவிடாது தியானிக்கப்பெற்றமையினால் கேதீச்சரப்பெருமான் கௌரி அம்மையாரோடும் காட்சி கொடுத்து பிரமகத்தியைப் போக்கி அருளினார்.



### நாயன்மார் வழிபட்டமை

*"எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம்*
*இராப்பகல், நினைந்தேத்தி*
*அல்லல் ஆசறுத்து அரனடி இணைதொழும்*
*அன்பராம் அடியாரே"*

என்று ஞானசம்பந்தப் பெருமான் தொழுதேத்தி கேதீச்சரப் பெருமானின் திருவடி தியானத்தில் உயர்ந்து நின்றார்.

*"மறையார் புகழ் ஊரன் அடித் தொண்டனுரை செய்த*
*குறையாத் தமிழ் பத்துஞ் சொலக் கூடா கொடுவினையே"*

என்று சுந்தரர் துதித்து வணங்கி அடியார்களுக்கெல்லாம் அடியனாகும் பேறு பெற்றார்.

*"சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்*
*திருக்கேதீச்சரத்து அண்ணல் செய்யபாதம்*
*உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்*
*உலவாத கிழிபெற்றார் உவகை உற்றார்"*

ஞானசம்பந்தரென சேக்கிழார் பெருமானும் திருவடித் தியானம் செய்கின்றார்.

### நாவலர் வழிபட்டமை

"மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்றுள்ளது. அங்கு மருந்தொன்று மறைந்திருக்கின்றது." என்பது நாவலர் பெருமானுடைய திருவாசகம்.

இறைவனுடைய அதாவது கேதீச்சரநாதனுடைய திருவடித் தாமரையிலே முத்திப் பேறாகிய தேன் இருக்கிறது எனத் தாம் அனுபவித்த இன்பப்பேற்றை மற்றையோரும் அனுபவிக்குமாறு அழைக்கின்றார் நாவலர் பெருமான். நாவலர் பெருமானுடைய தூண்டுதலில் வளர்ந்தவையே இன்றைய திருக்கோபுரங்கள் ஆகும்.

கோயில் அழிவுற்று 300 ஆண்டுகளுக்கு மேலாகத் திருமுறையிலே வாழ்ந்து கொண்டிருந்த திருக்கேதீச்சரப் பெருமான் அடியார்களுடைய திருவடித் தியானத்தினாலே தாமே வெளிவந்து தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்.

*"அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்"*

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையிலே அருளிய வண்ணம் 13. 12. 1893 இல் பசுபதிச் செட்டியார் அவர்கள், முன்பு திருக்கோயில் இருந்து அழிவுற்றுக் காடாய்க் கிடந்து நிலத்தை வாங்கியதன் பின் உடலாலும் பொருளாலும் உள்ளத்தாலும் உதவி செய்து இன்றைய நிலைக்குத் திருக்கோயில் வருவதற்கு ஆயிரக்கணக்கான அடியார்கள் கேதீச்சரப்பெருமானுடைய திருவடிகளைத் தியானம் செய்து திருத்தொண்டுகள் புரிந்துள்ளார்கள். இன்று வரை நடைபெற்ற கோயில் திருப்பணியை விட இன்னும் கூடுதலாகவே திருப்பணி நடைபெற இருக்கிறது. அது நிறைவேறுவதற்கு நாவலர்பெருமானுடைய திருவாக்கியம் ஒன்றை நம்மனத்தில் சிந்திப்போமாக.

"இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ்செய்வர்."

**இலங்கை இந்து - திருக்கேதீச்சர மண்டலாபிஷேக மலர் - (1976) மாமன்ற வெளியீடு)**

### அகத்திய முனிவர் வழிபட்டமை

சிவபெருமானுடைய திருமணத்தன்று சிவபெருமானுடைய கட்டளைப்படி தெற்கு நோக்கி வந்த அகத்திய முனிவர் சிலகாலம் பொதியமலையிலே இருந்தார். சிவத்தல யாத்திரை செய்ய விரும்பி மனைவியாகிய உலோபா முத்திரையோடும் யாத்திரையை மேற்கொண்டு கேதீச்சரம் வந்தடைந்தார். பாலாவியிலே தீர்த்தமாடி திருக்கோயிலினுள்ளே சென்று முறைப்படி அபிஷேக ஆராதனைகள் செய்து கேதீச்சரப் பெருமானின் திருவடிகளைத் தியானித்தவராக இருந்தார். எம்பெருமானின் திருக்காட்சி கிடைத்த உடனே பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்.

*"வேத நாயகனே போற்றி*
*வேள்வியில் முதலே போற்றி!*
*வேதமான மறியாய் போற்றி!*
*விநாயக சனக போற்றி!*
*காதில் வெண் குழையாய் போற்றி!*
*கங்கையஞ் சடையாய் போற்றி!*
*மாதொரு பாகம் வைத்த*
*மாதோட்டக் கனியே போற்றி!"*

தோத்திரத்திற்கு மகிழ்ந்த பெருமான் யாது வேண்டும் என்று கேட்டார்? அகத்தியர், "எம்பெருமானே நின் திருவடி மலர்கள் அடியேன் இதயத்துள் என்றும் நீங்காமல் இருக்க வரம் அருள்க!" என்று கேட்டார். அவ்வண்ணமே ஆகுக என்று எம்பெருமான் அருளி லிங்கத்திலே மறைந்தருளினார்.

## மாதோட்டத்துக் கேதுநாதனின் பெருமை :

மாதோட்டத் திருக்கேதீச்சரத் திவ்யத் திருக்கோயிலில் எழுந்தருளிய மூலஸ்தான சிவலிங்கப் பெருமான் திருக்கயிலைச் சிகரத்தில் முளைத்தெழுந்த - திருக்கேதார லிங்கம் போன்ற - சுயம்பு வடிவான மூர்த்தி ஆவார். அவர், தென்கயிலாய நாதர், ஈழக்கயிலாய நாதர், திருக்கேதீச்சர நாதர், மகாதுவட்டாபுர நாதர், கௌரிநாதர் எனப் பல திருநாமங்களைப் பெற்று விளங்குபவர். அன்றியும் ஆதியில் ஒருவகை நாக குலத்தினர் கேதுநாதனைப் பூசித்து வந்ததால் அவர், நாகநாதர் என்றும் மெய்யன்பவர்களின் பிறவிப்பிணியினைப் போக்கும் அரிய மருந்தாகக் கௌரிநாதர் மாதோட்டத்தில் வீற்றிருந்ததால் அவர் மாதோட்டத்து மருந்து என்றும் இராசேந்திர சோழன் கல்வெட்டு ஒன்றில் கேதுநாதன், இராசராசேச்சரத்து மகாதேவர் என்றும் திருப்பெயர்களைப் பெற்றுள்ளார்.

ஆங்காங்கே முழங்கும் மணமுரசின் ஒலியைப் போலக் கடலொலி நீங்காத மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தில் கேதுநாதன், பக்குவ ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும் பொருட்டு எக்காலத்தும் அங்கு நின்றும் பிரியாமல் வீற்றிருந்தருளுகின்றார் என்றும், இக்கேது நாதரே நித்திய கல்யாண மணவாளராக எழுந்தருளி இருந்து யாவர்க்கும் மங்கல வாழ்வு அருளுகின்றார் என்றும் சைவத்திருமுறைகள் முழங்குகின்றன.

"மாதோட்டக், கேழல் வெண்மருப்பு அணிந்தநீன் மார்பர்கே தீச்சரம் பிரியாரே" என்பது சம்பந்தர் தேவாரம். "நனை கவிழ்வாய் மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்" என்பது சுந்தரர் தேவாரம். இங்கு எழுந்தருளிய அம்மையார் திருநாமம் கௌரியம்மையார் என்பதாம்.

**– வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்**
**(நன்றி : திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் – 1976)**

# சிவபாதசுந்தரனாரும் திருக்கேதீச்சரமும்

**மு. மயில்வாகனம்**

ஈழநாட்டிலே தேவாரம் பாடப்பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று திருக்கோணமலை. மற்றையது திருக்கேதீச்சரம். மிகப் புராதனமான இத் திருக்கேதீச்சரம் பன்னூறாண்டுகளுக்கு முன் மணலால் மூடப்பெற்று அமிழ்ந்து போயிற்று. அதனைப் பற்றிச் சிந்திப்பாரில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் திருக்கேதீச்சரத்தைப் பற்றி நினைவூட்டி அதனைப் புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமென்பதைத் தாம் எழுதிய யாழ்ப்பாணச் சமய நிலை என்னும் பிரசுரத்தின் மூலம் சைவ மக்களுக்கு அறிவுறுத்தினார். அவருடைய கருத்தை நிறைவேற்ற நாட்டுக்கோட்டைச் செட்டிமாரும் பிறரும் முன்வந்தனர். அரசினிடம் பழைய கோயிலிருந்த நிலம் விலைக்கு வாங்கப்பெற்று காடுகள் துப்பரவு செய்யப்பெற்று கோவிலிருந்த இடமும் பழைய சிவலிங்கமும் வேறும் மூர்த்திகளும் கண்டுபிடிக்கப்பெற்றன. தற்காலிகமான சிவாலயமும் அம்பாளாலயமும் நிறுவப்பட்டு பூசைகளும் முறையாக நடக்கக்கூடிய ஒழுங்குகளும் செய்யப்பட்டன.

பின்பும் ஒருமுறை 1950ஆம் ஆண்டளவில் கோயில் புனருத்தாரணம் செய்யப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

சிறந்த முறையில் வேதாகம முறைப்படி கருங்கற்றிருப்பணியுடன் சிவனாலயம், அம்பாளாலயம் மற்றைய பரிவார மூர்த்திகளின் ஆலயங்கள் கோபுரங்கள் முதலியன நிறுவப்படவேண்டுமென்பது சைவ மக்களுடைய உள்ளத்தில் தோன்றியது. அவர்களுள் முதன்மையானவர் புலோலியூர் திரு. சு. சிவபாதசுந்தரனாராவர். நாவலர் பெருமானுக்குப் பின் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பாதுகாப்பதற்கு சிவபெருமானால் அனுப்பப்பட்ட பெரியாரிவரென்றால் மிகையாகாது. இவர் சைவ மக்களைத் தூண்டி இக்கோயிற்றிருப்பணியை பூர்த்தியாக்கி அதனைச் சிறப்பாக நடத்த வழிவகுத்தனர்.


இம்முயற்சியில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் சிறந்த சைவாபிமானியும் அரசியல் ஞானியுமாகிய கொழும்பு சட்டத்தரணி திரு. சு. சுப்பிரமணியம் அவர்களாவர். இவர்களுடைய பெருமுயற்சியினால் திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை நிறுவப்பெற்றது. இச்சபைக்கு முதல் தலைவராக திரு. சு. சிவபாதசுந்தரனாரவர்களும் காரியதரிசியாக திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும் கடமையாற்றினர். திரு. சிவபாதசுந்தரனார் அவர்கள் மலாயாவிலுள்ள தமது பழைய மாணவர்கள் மூலம் அம்பாள் ஆலயத்திற்குப் பெருந்தொகை நிதி சேர்த்து உதவினர். இன்னும் மலாயாவிலுள்ள சைவ மக்களை திருக்கேதீச்சரத் தல முன்னேற்றத்தில் கவனமெடுக்கும் வண்ணமும் தூண்டினார்.

திருக்கோயிலுக்கு ஈசான திசையில் திருஞானசம்பந்தர் மடாலயத்தை நிறுவுவதற்கு வழிகோலித் தாமே பெருந்தொகை நிதி உதவினார்.

திருக்கோயிலில் ஒரு நடராசர் விக்கிரகத்தையும் சிவகாமி அம்பாள் விக்கிரகத்தையும் தாபிக்க வேண்டுமென்பது அவருடைய பெருவிருப்பம். பெருந்தொகைப் பொருள் செலவு செய்து யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சிறந்த ஆசாரியாரை நியமித்து மேற்படி விக்கிரகங்களைச் செய்வித்தார். பின்பு தன்னுடைய மூப்புற்ற வயோதிப நிலையில் சிரமத்தை நோக்காது தமது மருமகர் பண்டிதர் ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளையினுடைய உதவியுடன் திருவுருவங்களையுங் கொண்டு திருக்கேதீச்சரஞ் சென்று அவற்றை கோயில் உள்வீதியில் வடபுறத்தில் ஒரு மண்டபம் முறைப்படி பிரதிஷ்டை செய்து நித்திய பூசைகளும் வருடந்தோறும் நடராசப் பெருமானுக்குச் செய்ய வேண்டிய அபிஷேகங்களும் நிகழ ஒழுங்குகள் செய்திருந்தார்.


அவர் சைவ சமய விருத்திக்கும் திருக்கேதீச்சரத்திற்கும் புரிந்த தொண்டுகள் அளப்பில. வாழ்நாள் முழுவதும் சைவத்துக்கும் தமிழுக்கும் சலியாது உழைத்தவர். அவருடைய ஆன்மா பிரிகிற அன்றும் தாம் ஆங்கிலத்தில் எழுதிய சைவ சமய நூல் ஒன்றின் அச்சுப்பிரதிப் பிழைதிருத்தஞ் செய்தனரென்றால் அவருடைய சைவ சமயாபிமானம் எத்தகைய தென்பதை நாம் உற்றுணரலாம்.

**(மாமன்ற வெளியீடான இலங்கை இந்து-திருக்கேதீஸ்வரம் மண்டலாபிஷேகம்(1976)சிறப்பு மலரிலிருந்து பெறப்பட்டது.)**



## திருநாவுக்கரசர் தேவாரம்

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சரம் மேவினார் கேதார த்தார்
கெடில வட அதிகை வீரட்ட த்தார்
மாதுயரந் தீர்த்தென்னை உய்யக் கொண்டார்
மழபாடி மேய மழுவாள னார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவி னாரே !



நாவலர் பக்கம்

# திருக்கேதீச்சரமும் நாவலர் பெருமானும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத்தலம் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுமுண்டு. சமய குரவர்களாகிய நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவே யிருக்கலாம்; தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீஸ்வரம் அவர்கள் அகக் காட்சியிற் காட்சியளித்ததாகலாம் எனக் கருதலாம். 'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே' என்ற ஞானசம்பந்தப்பிள்ளையார் வாக்கில் 'கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்னலாம். திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும் சுந்தர மூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ்வாற்றால் தனக்குத் தானே இணையான தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்களருகிய காலத்தில் மறைவதும், பக்குவர் சிலரின் தவம் விசேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, பத்தொன்பதாவது நூற்றாண்டு மத்தியில் ஒரேயொரு ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. ''யாழ்ப்பாணச் சமய நிலை'' என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி, ''சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருகோணமலைக்குச் சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றிருக்கிறது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிக மொன்றும்இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்துகாடாகக்கிடக்கின்றதே! புதிதுபுதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படு கின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள வீபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந் தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வார்.'' எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான். திருக்கேதீச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக்காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'ரசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்குமாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

ரசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். ரசலுக்குப்பின் வந்தவர் துவைனம். திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடைமுறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். பெரியோர்கள் நீதிநெறிக்குப்புறம்பானவர்களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்களுள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசுபடுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்திய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமானது. மழையின்றிய பஞ்ச காலத்திலும், பேதி நோய்க் காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும் கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள். சமயம்! சமயம்! இது நல்ல சமயம் சமயம்! வெகு சனத் துரோகம்! என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

"யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College). அதற்கு தலைவர் (Principal) துவைனந் துரை; உபாத்தியாயர்கள் பாவந்தோன்றிய நாளையிற் றோன்றிய பாதகன் ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்; அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்''. ஏழைகளுக்கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார், எத்தகையினர் என்பதை ஊன்றி உணரக் கடவர்கள்.

நாவலர் குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனம் ஆகியோரின் ஊழல்களை எடுத்துக்காட்டி வாதித்தார். துவைனம் தம்மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றோ உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார். இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்துவிட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டானது. கச்சேரிக்கு விடுதலை அளித்து, கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தர் கைப்படாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கி வைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறைவேற்றினார். நாவலர் பெருமானின் தவ சக்தி இருந்தவாறு!!

நன்றி:

திருக்கேதீச்சரம் – திருக்குடத் திருமஞ்சன மலர் – 1976)



*வைகாசித் திங்கள் கார்த்திகை நட்சத்திர நாள் சுவாமிகளின் குருபூசை தினமாகும்.*

# யோகர் சுவாமிகள் முதன்மைச் சீடராக விளங்கிய மார்க்கண்டு சுவாமிகள்

ந.சண்முகராசா
ஸ்தாபகர், மார்க்கண்டு சுவாமிகள் சபை, பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

ஈழநாடு செய்த தவப்பயனாக அவதரித்த சித்தர் பரம்பரையில் கடையிற் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரை தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகளின் சீடராக யோகர் சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத்திங்கள் பதினேழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும் வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்று, பின்னர் சுன்னாகம் கந்தரோடை கல்லூரியில் உயர்கல்வி கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்வில் சித்தியடைந்ததுடன் அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப்பெற்றது.

மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவதொண்டுகள் செய்து திருமுறைப் பாடல்களைப் பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். இக்காலப் பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. சுவாமிகள் நேரத்திற்கு அலுவலகத்திற்குச் செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவம் தொடக்கத்திலேயே அவரிடம் தெரியலாயிற்று. சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார். சுவாமி பணத்தை பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரமச்சரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் வாய்ந்தவர். விடுமுறை நாட்களில் தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகை தந்து பெற்றோரைப் பேணினார். சகோதரிகளின் திருமணச்சடங்கினை நிறைவேற்றினார். கோயில் திருப்பணி, பாடசாலை வாசிகசாலை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவரானார். காலையிலும் மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கினை தவறாது மேற்கொண்டார். இக்காலப்பகுதியில் தான் யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க்கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது. தெய்வ சித்தம் எவ்வித சிவத்தொண்டுக்காக அவரை தோற்றுவித்ததோ அத்தொண்டினை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆன்மீகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும் செயலாலும் இடையிடையே திருமுகங்கள் மூலமாக உணர்த்திய பின்னர் அவரை சுயமாக இயங்கவிட்டார். மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவையில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிதுகாலம் தொழில் புரிந்தார். இக்காலப்பகுதியில் கல்விமான்கள் நடாத்திய சைவசித்தாந்த வகுப்புக்கும் சென்று வந்தார். சுவாமிகள் ஐம்பதாவது வயதில் தனது உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகள் குடிகொண்டிருந்த கொட்டிலை வந்தடைந்தார். குருநாதரான யோகர் அவரை ஒரு வீட்டில் தங்கவைத்தார். பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அவ் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிவதொண்டன் நிலையத்திற்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சிலகாலம் மார்க்கண்டு சுவாமிகளுடன் தங்கவைத்து இராம்ஸ போதத்திற்கு அருளுரை வழங்குமாறு கூறினார். சோல்பரிப் பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப் போல அன்பு செலுத்தி எதுவித வசதிகளையும் எதிர்பாராது ஒரு தொண்டனாகவும் தோழனாகவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவி சுப்பிரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக்குட்டிக் சுவாமிகள் உட்பட பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள் கூட மார்க்கண்டு சுவாமிகளை தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமிகள் தமது அந்திம காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தனது இறுதி நாட்களில் குளிப்பு முழுக்கு முதலியவற்றை கைவிட்டதோடு உணவையும் பெரிதாக சுருக்கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்தவேளையில் வைத்திய கலாநிதி யோகு பசுபதி அவர்கள் பார்வையிட வந்தபோது தமக்கு எவ்வித வருத்தமும் இல்லை எனக்கூறி பார்வையிட அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் சும்மாயிருந்து இரத்தாசி வருடம் வைகாசி மாதம் பதினாறாம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12.00 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன் பிறந்த சகோதரியின் பேரனால் மார்க்கண்டு சுவாமிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சபையால் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சபையால் மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப்பாடசாலையும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. மேலும் சமூகப் பணிகள் சமயப்பணிகள் கலாசாரப்பணிகள் போன்ற பல பணிகள் சபையால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.




## அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

# A COMPENDIUM FOR HINDUS

**என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த ஏப்ரல் 5ஆம் திகதியன்று கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண முதலமைச்சர்**

## சத்தியவித்தகர் மாண்புமிகு சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய சிறப்புரை



எமது இந்து மதமானது ஒரு மதமேயில்லை. அது ஒரு வாழ்க்கை முறை. மற்றைய மதங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு வரையறைக்குள் நின்று கொண்டு மக்களைத் தம் வசம் ஈர்க்கின்றன. அவற்றிற்கு ஒரு தொடக்குநர் இருப்பார். அம் மதங்களை வழிநடத்திச் செல்ல ஒரு தனி நூல் இருக்கும். அவற்றிற்கான அமைப்பொன்றிருக்கும். பௌத்த மதத்தின் தொடக்குநர் கௌதம புத்தர். கிறிஸ்தவ மதத்திற்கு தொடக்குநர் யேசுகிறீஸ்து நாதர். இஸ்லாத்தின் தொடக்குநர் மொகம்மது நபி அவர்கள் எனலாம். அதாவது அவர்கள் தாங்களாக ஒரு அமைப்பைத் தொடங்கினார்களோ இல்லையோ அவர்கள் பெயரில்தான் அந்தந்த மதங்கள் நிலைத்து நிற்கின்றன. திரிபிடகம் பௌத்தர்களின் மத வழி நூல். பைபிள் கிறீஸ்தவர்களுடையது. திருக்குர் ஆன் இஸ்லாமிய மதத்தினருடையது. அதேபோல் மேற்கண்ட மூன்று மதங்களுக்கும் அவற்றிற்கென அமைப்புக்கள் இருக்கின்றன.

இந்து மதத்தினருக்கு என்று ஒரு நூலை எல்லா இந்து சமயிகளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். வேதங்கள் இருந்தாலும் குறிப்பிட்ட வேதந்தான் எம்முடைய மதத்தின் நூல் என்று இந்து சமயிகள் அத்தனை பேரும் அடையாளம் காட்டமாட்டார்கள். தமது மதத்தை இன்னார் தான் தொடக்கினார்கள் என்று எல்லா இந்து மதத்தினரும் ஒருவரைச் சுட்டிக் காட்ட மாட்டார்கள். அவர்களுக்கென்று மத ரீதியாக எந்த ஒரு அமைப்பும் பொதுவாக அடையாளப் படுத்தப்படவுமில்லை.

ஆகவே மற்றைய மதங்களைப் போலானது அல்ல எமது இந்து மதம். அப்படியிருந்தும் அதை மதம் என்றே அழைக்கின்றோம். காரணம் சில அடிப்படைகளை நாம் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று கூறலாம். பொதுவாக இந்து சமயிகள் இறை நம்பிக்கை கொண்டவர்கள். ஏதோ ஒரு சக்தி இந்த உலகை ஆட்டிப் படைக்கின்றது என்ற அடிப்படை நம்பிக்கையில் ஊறியவர்கள். ஆனால் அப்படியிருந்தும் நாஸ்திகர்களையும் இந்து சமயம் தன்னுள் ஏற்றுக் கொள்கின்றது.

ஒரு உதாரணம் தருகின்றேன். ஒருவர் ஒரு தகவல் சேகரிப்பவரின் படிவம் ஒன்றுக்குப் பதில் அளிக்க வேண்டியிருந்தது. அவர் நாஸ்திகர். ஆனால் இந்து தாய் தந்தையர்களுக்குப் பிறந்தவர். படிவத்தில் கேள்வி "நீர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?" என்றிருந்தது. நான்கு மதங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஐந்தாவதாக வேறு எந்த மதம் என்று கேட்டிருந்தார்கள். அவரோ நாஸ்திகர். எதனைக் குறிப்பிடுவார்? அதை நிரப்பாது விட்டார். தகவல் சேகரிப்பவர் அவரைப் பிடித்துக் கொண்டார். "என்ன சேர்! விளையாடுகின்றீர்களா? உங்கள் மதத்தைக் கூறுங்கள்" என்றார். "எனக்கு மதம் இல்லை. நான் ஒரு நாஸ்திகன்" என்றார். "சேர்! அப்படியானால் "இந்து அல்லது பௌத்தர்" என்று எழுதுங்கள் என்றார். "அதெப்படி" என்று கேட்டார் அந்த மனிதர். "ஏன் சேர்! நீங்கள் நாஸ்திகராக இருந்து கொண்டு ஒரு கிறிஸ்தவராகவோ இஸ்லாமியராகவோ இருக்க முடியாது. உங்களை அந்த மதங்கள் விலக்கி விடுவன. வேண்டுமென்றால் "பௌத்தர்" என்று எழுதுங்கள். பௌத்தமும் ஒரு நாஸ்திக வாதந்தானே" என்றார். "இல்லை இல்லை. பௌத்தன் என்றால் என் உறவினர்கள் புறக்கணிப்பார்கள். அத்துடன் பௌத்தமோ ஒரு சூன்ய வாதம். அதை நான் ஏற்க மாட்டேன்" என்றார். "சேர்! நேரம் போகின்றது. நீங்கள் தமிழர் தானே! பேசாமல் "இந்து" என்றே போட்டு விடுங்கள்" என்றார். அவ்வாறே அந்த நாஸ்திகர் தன்னை "இந்து" என்று அடையாளம் காட்டினார். இந்து மதம் அவரை ஏற்குமா என்று கேட்டால் கட்டாயம் ஏற்கும். ஏனென்றால் கடவுளை இல்லை என்று கூறுபவனும் அக் கூற்றை தனது கருத்தாகத்தான் அவன் வெளியிடுகின்றான். இறைவன் இருக்கின்றான், இறைவன் இருக்கக் கூடும், இறைவன் இல்லை என்பவர்கள் யாவருமே இறைவனை மையமாக வைத்தே வாதிடுகின்றார்கள். அந்த விதத்தில் இறைவனை இல்லை என்பவனும் இறைவன் சம்பந்தமான மாற்றுக் கருத்துக் கொண்டவனாகத்தான் இந்து மதத்தில் அடையாளம் காணப்படுகின்றான். இரு விதக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்ட ஒரு மதந்தான் இந்து மதம். இறைவன் உண்டு என்பவனையும் இந்து மதம் ஏற்கின்றது. இறைவன் இருக்க முடியாது அல்லது இல்லை என்பவனையும் இந்து மதம் ஏற்கின்றது.

மொத்தத்தில் நான் முன்னர் கூறியது போல் இந்து மதம் ஒரு மதமே இல்லை. ஒரு வாழ்க்கை முறை. எல்லாவிதமான முரண்பாடுகளையும் தன்னுள் அடக்கி முன் செல்லும் ஒரு வாழ்க்கை முறை. சங்கராச்சாரியாரின் குருவோ அல்லது குருவின் குருவாகிய கௌடபாதர் கூறியதாக ஞாபகம். எல்லா விதமான முரண்பாடுகளையும் தன்னுள் அடக்கி முன் செல்லக் கூடியது தான் இறைமை என்பது என்று கூறினார் அவர். அதெப்படி என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு ஒரு உதாரணம் தரலாம். இரண்டு சமாந்திரக் கோடுகள் இருக்கின்றன. Two Parallel Lines. அவை என்றென்றுஞ் சேரமாட்டாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஷேத்ர கணிதம் அல்லது Geometry என்ன கூறுகின்றது? அவை சேர்வன என்று! எங்கு? Infinity ல் சேரும். மனிதனின் மனதால் எட்ட முடியாத அந்த எல்லையற்ற பெருவெளியில் இந்த இரண்டு சமாந்திரக் கோடுகளுஞ் சேருவன எனப்படுகின்றது. ஆகவே இந்து

மதத்தினுள் நுழைந்தவுடன் நாங்கள் ஒருசில முக்கிய விடயங்களை மனத்தில் கொள்ள வேண்டும். அதாவது எமது சிந்தனையின் பாற்பட்டதே இந்த உலகம். நாம் எந்தக் கோணத்தில் இருந்து சிந்திக்கின்றோமோ அந்தக் கோணத்தில் கிடைக்கும் பார்வை இன்னொரு கோணத்தில் இருந்து சிந்தித்தால் அது பிழையாகத் தோன்றும். அந்தந்தக் கோணத்தில் இருந்து சிந்திப்பவனுக்கு அவன் சிந்தனையின் அனுபவமே உண்மை. ஆனால் அந்தச் சிந்தனைக்கும் அப்பால் ஒரு உண்மையுண்டு. அதற்கு நாம் எமது உலகாயக் கருவிகளான மனம், வாக்கு, காயம் என்பவற்றை விட்டு விட்டுப் பயணிக்க வேண்டும். பஞ்ச புலன்களைப் படுக்க வைத்துவிட்டுப் பயணிக்க வேண்டும். ஷேத்ர கணிதம் குறிப்பட்ட எல்லையற்ற அந்த Infinity யைத் தொடவேண்டும். அப்பொழுது எல்லாமே புரிந்து விடுகின்றது என்கின்றது இந்து சமயம்.

இதில் ஒரு முக்கிய கருத்தை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அதாவது ஒவ்வொருவர் நிலையில் அவரவர் காணும் உலகமே அவரவர்களுக்கு உண்மை. இறைவன் என்பவன் உண்மையானால், அவன் உண்மையே உருவாக எங்கெங்கும் வியாபித்துத் தான்தோன்றியாக, சுயம்பு இறைமையாக வீற்றிருக்கின்றான் அல்லது வீற்றிருக்கின்றாள் அல்லது வீற்றிருக்கின்றது. அவனுக்குப் பாலில்லை, பாகுபாடில்லை, பந்தமில்லை. ஆனால் அவனின் படைப்பினுள் இருக்கும் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு எண்ணம், ஒரு நம்பிக்கை, ஒரு உண்மை எங்களை ஆட்கொண்டிருக்கின்றது. அது எமது அறிவின் பாற்பட்டது. அனுபவத்தின் பாற்பட்டது. நோக்கின் பாற்பட்டது. எமது நோக்கிற்கும், நம்பிக்கைக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டதே இறைமை. இறைமை தானாக எங்கும் உள்ளது. என்னையும் உள்ளடக்கி உள்ளது. ஆனால் என் நம்பிக்கை, என் நோக்கு. என் அறிவு என்னுடன் மட்டுமே இருக்கின்றது அல்லது என்னைப் போல் சிந்திப்பவர்கள் மனதில், நோக்கில், நம்பிக்கையில் மட்டுமே இருக்கின்றது.

இந்த நோக்கிற்கு அப்பாலும் இறைமை இருக்கின்றது என்பதைப் புரிய வைக்க இந்து மதம் பலவிதமான யுக்திகளைப் பிரயோகித்தது. கோயில்கள். பூஜை முறைகள், நிருத்தங்கள், நடனமுறைகள், முத்திரைகள், கதைகள், காப்பியங்கள், குறியீடுகள் என்று பலவிதங்களில் உண்மையை அந்தந்த அறிவு மட்டத்தில் இருப்பவர்களுக்கு எடுத்துக் கூற இந்து மதம் பிரயத்தனங்களில் ஈடுபட்டது. அதன் வழியாக வந்த பலதரப்பட்ட சம்பிரதாயங்கள், சடங்குகள். குறியீடுகள். அடையாளங்கள் போன்ற பலதையுந் தனது சமயத்தின் பாற்பட்டவர்களுக்கு அதுவும் பலதரப்பட்ட அறிவின் பாற்பட்டவர்களுக்கு எடுத்து விளக்குவது இந்து சமயத்திற்கு ஏற்பட்ட ஒரு பாரிய சவால். அதிலே இரண்டு கட்டங்கள் இருக்கின்றன. மக்களின் மனோதரத்தின் அல்லது அறிவுத்தரத்தின்படி அவர்களின் புரியுந் தரம் அறிந்து அதற்கேற்றாற் போல சில சம்பிரதாயங்களையும், சமய அனுஷ்டானங்களையும், சமயச் சடங்குகளையும், சமயச் சின்னங்களையும், சமயச் சிந்தனைகளையும் வகுத்து வைத்தது முதற்படி.

பல்லாயிரம் வருடங்களின் பின்னர் அவற்றை இன்றைய அறிவின்படி, கல்வியின்படி, அனுபவத்தின்படி இன்றைய சமயிகளுக்கு எடுத்து இயம்புவது அல்லது விளக்குவது இன்னொரு படி. அதைத் தான் இன்று வெளியிடப்படும் நூல் உங்களுக்குச் செய்யப் பிரயத்தனங்கள் எடுத்துள்ளது. இந்து மதத்தின் சமயச் சின்னங்களுக்கு, சமயக் குறியீடுகளுக்கு, சமயக் கருத்துக்களுக்கு ஆங்கிலத்தில் தெளிவுரை தந்துள்ளார்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தினர்.

நூலை ஆங்காங்கே புரட்டிப் பார்க்கையில் ஆதியில் வாழ்ந்த ஆன்றோரின் அருங்கருத்துக்கள் சிலவற்றைப் புறக்கணித்து விட்டனரோ எம்மவர் என்ற ஒரு கருத்து என்னிடம் உருவாகியது. அதாவது ஒரே விடயம் இருவித அறிவுடையார்களுக்கு இந்து மதத்தின்படி இருவித புரிந்துணர்வுகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடும். அதை மறந்து இது தான் சரி என்று ஒரு போக்கை மட்டும் நாம் பரிந்துரைத்துள்ளோமா என்ற கேள்வி எழுந்தது. எங்கோ ஒரு குறைபாடு ஒன்று உள்ளதோ என்று சிந்தித்தேன்.

ஒரு உதாரணத்தை எடுப்போம். விநாயகப்பெருமான் பற்றி ஆராய்வோம். பாமரர்களுக்கு ஏற்ற விதத்தில் பலதையும் கூறுகின்றது இன்று வெளியிடப்படும் நூல். வெளிப்பூச்சுக்களுக்கு அப்பால், வெளியிடப்படும் கருத்துக் களுக்கு அப்பால் எமது முன்னோர் பாரிய சில பரம இரகசியங்களை பாமரர்களுக்கு அப்பால் பரமனின் பக்தர்களுக்கு உரைக்கும் வகையில் கூறிவிட்டுச் சென்றார்களே, அவற்றை நாம் இந் நூல்களில் உரைக்கத் தேவையில்லையா? அதாவது இந்து மதம் ஒரு குறியீட்டு மதம். A Religion of Symbols. ஒரே குறியீடு பலருக்குப் பல அர்த்தங்களைக் கற்பிக்கக் கூடியது. அது அவர் அவர் அறிவுக்கும், அனுபவத்திற்கும், அவாவிற்கும் ஏற்ப வெளிப்படும்.

விநாயகர் பற்றிக் குறிப்பிடும் போது விநாயக ரூபம் எதனைச் சூட்சுமமாகக் குறிப்பிடுகின்றது என்பதையும் கூறிவைத்திருக்கலாம். அதாவது சிறந்த ஒரு மனிதன், ஒரு புருஷ உத்தமன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு விநாயக ரூபம் ஒரு எடுத்துக் காட்டு என்கின்றார் சுவாமி சின்மயானந்தர். Man of Perfection என்று அழைக்கின்றார் விநாயகரை. அதாவது ஒரு சாரருக்கு இது தான் இறைவன், இவன் தான் கடவுள்; இவனை வந்தனை செய்தால் வேதனைகள் யாவும் அகன்றிடும். சோதனைகள் யாவும் சோர்ந்து போவன என்று கூறும் அதே நேரத்தில் விநாயகப் பெருமானின் உருவத்தை ஊன்றிக் கவனித்து உன்னை மாற்றிக் கொள். அதாவது அவன் ஒரு குறியீடு. அவனின் குறியீடு உனக்கு எதையோ எந்நேரமும் உணர்த்திக் கொண்டு இருக்கின்றது. அதை உன்னிப்பாய்க் கவனித்து உன்னை முன்னேற்றிக் கொள் என்றும் கூறி வைக்கின்றார்கள் ஆத்ம சீலர்கள்.

விநாயகனுக்கு எதற்காக யானைத் தலையைக் கொடுத்தார்கள்? அப்பனும் அம்மனும் யானைகள் ரூபம் கொண்டு யானை முகனை ஈன்றெடுத்தார்கள் என்பது புராணம். புராணங்களில் இல்லாத பொய்யும் புரட்டுமா என்பார்கள். காரணம் அதில் கூறியிருக்கும் கதைகள் சாதாரண புரிந்துணர்வுக்கு ஒவ்வாதது. அதைக் கதையென்று எடுத்துக் கொண்டால் பொய்யும் புரட்டும் நிறைந்ததே புராணம் என்று ஏற்க வேண்டியிருக்கும். ஆனால் அந்தக் கதைகளுக்கு அப்பால் ஒரு ஆன்மீக உட்கருத்து உள்ளது என்பதைப் புரிய வைப்பதும் எமது கடமையே.

அந்தவாறு பார்க்கும் போது யானை முகம் எதை எடுத்துக் காட்டுகின்றது? யானை ஞாபக சக்தி மிகுந்த ஒரு மிருகம். அதன் துதிக்கை பாரிய பாறையையும் அகற்றும். பார்வைக்குச் சிறியதான ஒரு ஊசியையும் பற்றி எடுக்குந்

தன்மை வாய்ந்தது. எனவே விநாயக ரூபத்தைப் பார்க்கும் நாங்கள் அவனைப் போல் இருக்கப் பழக வேண்டும். ஞாபக சக்தியுடன் வாழவேண்டும். பலத்துடன் இருக்க வேண்டும். பவுத்திரத்துடனும் வாழ வேண்டும். பண்பாக வாழவேண்டும். மென்மையுடனும் வாழப் பழக வேண்டும். எவ்வாறு பாறைகள் அகற்றுந் துதிக்கை ஒரு சிறு பந்தையும் பற்றிக் கொள்கின்றதோ அதே போல் வாழ்க்கையின் சகல மட்டங்களிலும் அந்தந்த தருணத்திற்கு ஏற்றாற் போல் எமது தரத்தைக் காட்டிக் கொள்ள வேண்டும். அசுர பலம் இருப்பதால் எல்லாவற்றையும் மிதித்துத் துவசம் செய்வதல்ல ஒரு யானையின் குணம். அந்தந்த நிலைக்குள் தன்னை மாற்றிப், பலத்துடனும் அதே சமயம் பண்புடனும் வாழ்வதே யானையின் வாழ்முறை. அதை நாங்கள் அவனின் ரூபத்தில் இருந்து புரிந்து எம்மை அவ்வாறே நடக்கப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விநாயக ரூபம் எமக்கு அறிவுரை வழங்குகின்றது. ஒரு புருஷ உத்தமன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விநாயக ரூபம் என்ற குறியீடு வாயிலாக இந்து மதம் உணர்த்துகின்றது என்கின்றார் பூஜ்ய ஸ்ரீ சுவாமி சின்மயானந்தா அவர்கள். நான்கு கைகள் எதனைக் குறிப்பிடுகின்றன, விநாயகனின் ஒவ்வோர் கையில் இருக்கும் பொருட்களும் எதனைக் குறிக்கின்றன, அவரின் தொந்தி வயிறு எதனைக் குறிப்பிடுகின்றது என்பது பற்றியெல்லாம் விளக்கமாகத் தருகின்றார் சுவாமிஜி அவர்கள். அவை அனைத்தையும் இங்கு குறிப்பிட நேரமில்லை. அத்துடன் எந்த ஒரு துணை நூலைக் கூட வாசித்து வளம் பெற்று இந்தப் பேச்சை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. எப்பொழுதோ தெரிந்து வைத்த விடயங்களை வைத்துத் தான் பேசுகின்றேன். இங்கு கொழும்பு வருவதற்கு முன்னைய நிமிடம் மட்டும் என் அரசியல் வேலைக்குள் அமிழ்ந்திருந்தேன். இங்கு வந்த பின்னரும் அதே நிலை தான். இன்றைய நூலை வாசிக்கக் கூட நேரமில்லை. எனினும் ஆங்காங்கே கண்ட சில விடயங்கள் பற்றி மனதில் எழுந்த கருத்துக்களை வெளியிடுகின்றேன்.

பல தலையங்கங்களின் கீழ் தரவுகள் தரப்பட்டுள்ளன. இந்த நூலில் பூஜிக்கும் முறை, வாழ்வு முறை, செயல் முறை, விரத முறை, பிதிர் கடன் முறை, தவிர்க்க வேண்டியவை, சித்தாந்தக் கருத்துக்களின் தன்மை என்ற தலையங்கங்களின் கீழ் கட்டுரைகளை உள்ளடக்கி சில சமயச் சார்பான பாடல்களைக் கடைசி அத்தியாயத்தில் சேர்த்திருக்கின்றீர்கள். இந் நூல் தமிழில் வந்த "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்ற நூலின் ஆங்கிலவாக்கம் அல்ல. வேற்றுச் சூழலில் வாழ்கின்ற சைவசமயிகளுக்கென்று தயாரிக்கப்பட்டுள்ளது. பலதையும் விளக்கப்படுத்துவதாய் அமைந்துள்ளது. பிறநாட்டு இந்து சமயிகளும் ஆங்கிலத்தில் கூடிய நாட்டம் கொண்ட எமது சமயிகளும், இந்து மதம் பற்றி அறிய ஆவல் கொண்ட பிற சமயத்தவரும் ஒருவாறு இந்து சமயம் பற்றி அறிந்து கொள்ள இடமளிப்பதாய் நூல் அமைந்துள்ளது. ஆனால் இந்து சமயம் பலவிதமான அறிவு சார்ந்த மக்களுக்கும் சமய ஞானம் போதிக்க ஏற்ற விதத்தில் வளர்ந்து வந்துள்ளது என்பதை முதலில் ஒரு அறிமுக உரையில் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இதற்கும் ஒரு உதாரணம் தருகின்றேன். கண்ணப்ப நாயனார் கதை. சிவாச்சாரியார் இந்து தர்மத்தின்படி வாழ்ந்த ஒரு சைவப் பெரியார். எவ்வெவற்றை இந்து மதம் பூஜை என்று எடுத்துரைக்கின்றதோ அவற்றை முறையாகச் செய்து வந்தவர். திரிகரண சுத்தியுடன் தினமும் இறைவன் பூசையில் ஈடுபட்டு வந்தவர். அவர் முறையாகப் பூஜை செய்து விட்டுப் போக கண்ணப்பர் வந்து அவர் வைத்த மலர்களை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டுத் தான் கொண்டு வந்த மாமிசத்தை மகேஸ்வரனுக்கு நைவேத்தியம் செய்து விட்டுச் செல்வார். மகாசிவராத்திரி அன்று இவ்வாறு மகேஸ்வரனுக்கு மகாபாபம் இயற்றும் மாற்றுச் சுபாவம் உள்ளவரைக் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கக் கரவாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார் சிவாச்சாரியார்.

மாமிசத்துடன் வந்தார் கண்ணப்பர் என்ற அந்த வேடர். இறைச்சியைத் தேனுடன் கலந்து வைத்தார் சிவலிங்கத்தின் முன். அதைத் தீண்டவில்லை சிவன். "ஓகோ! இறைச்சி மென்மையாக இல்லையா" என்று கேட்டு விட்டு "இதோ நானே கடித்துச் சுவைத்து உனக்குத் தருகின்றேன்" என்று கூறி கடித்துச் சுவைத்துப் பார்த்து மென்மைப் படுத்தப்பட்ட, பதப்படுத்தப்பட்ட இறைச்சியைப் பரமனின் முன்னிலையில் வைத்து உட்கொள்ளுமாறு உமாமகேசனிடம் கேட்கின்றார். அப்பொழுது சிவலிங்கத்தின் ஒரு கண்ணில் இரத்தம் வடிகின்றது. ஒரு கண்ணின் மணியைக் காணவில்லை. திடுக்கிட்டார் கண்ணப்பர். உடனே தன் கத்தியை எடுத்துத் தன் ஒரு கண்ணைத் தோண்டி மணியற்ற மகேஸ்வரன் கண்ணுக்கு மாற்றாகக் கொடுக்கின்றார். விட்டானா பரமன்? அடுத்த கண்ணிலும் இரத்தம் கொட்டுகின்றது. அதிலும் மணியைக் காணவில்லை. உடனே தன் காலின் பெருவிரலை அம்மணியில்லாத அந்தக் கண்ணிருந்த இடத்தில் வைக்கின்றார். தனது அடுத்த கண்ணையுந் தோண்டி எடுத்து தனது கால் அடையாளம் காட்டிய இந்த இடத்தில் வைத்துப் பொருத்துகின்றார். சிவாச்சாரியார் இவற்றையெல்லாம் பார்க்கின்றார். முறையான சைவப் பிழம்பும் பிறழான சைவ பக்தனும் ஒன்று சேர்கின்றார்கள். இருவருக்குமே காட்சி கொடுக்கின்றான் இறைவன். பார்வையற்ற கண்ணப்பர் பார்வை பெறுகின்றார். பக்திக்கு முன்னால் தனது பூஜைகளும் புனஸ்காரங்களும் எம்மாத்திரம் என்ற படிப்பினையைப் படிக்கின்றார் சிவாச்சாரியார். ஆக மொத்தம் முறையான சிவபக்தரும் பிறழான சிவபக்தரும் இறைவனின் அருட் கருணையைப் பெறுகின்றார்கள்.

எனவே அறிமுக உரையில் பலதரப்பட்ட மாற்றுக் கருத்துக் களுக்கும் இடமளித்து வந்துள்ள மாமதமே எமது இந்து மதம் என்ற கூற்றினை உள்ளடக்கியிருக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்து. சில சமயங்களில் எம் மதம் இப்படித்தானிருக்க வேண்டும் என்ற எண்ணம் எம்முட் சிலருக்கு ஆணித்தரமாக அமைந்து விடலாம். அப்பொழுதெல்லாம் இறைவன் சிவாச்சாரியாருக்குச் சொல்லிக் கொடுத்த பாடத்தை நாம் மனதில் இருத்த வேண்டும்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்" என்ற ஆழமான கருத்து எம்முள் அடியூன்ற வேண்டும். "அன்பே சிவம்" என்பதின் அர்த்தம் எம்முள் ஆழப்பதிய வேண்டும். மதம் என்பது எம்மை இணைப்பதாக இருக்க வேண்டுமே ஒழிய சிதைப்பதாக இருக்கக் கூடாது. பிணைப்பதாக இருக்க வேண்டுமே ஒழிய பிரிக்கக் கூடாது.

ஆங்கில மொழியினூடாக ஒருமைப்படுத்தும் இந்தக் கைங்கரியம் நல்லதொரு சேவையாகும். இதனால் இந்து மதம் பற்றிய அறிமுகத்தை எமது அகில இலங்கை இந்து மாமன்றம் அகிலம் பூராகவும் அடையாளப்படுத்த முனைந்துள்ளது. அவர்கள் பிரயத்தனங்கள் வெற்றியடைய அருளிறைவன் ஆசீர்வதிப்பானாக என்று கூறி எனது சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.



# வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை காட்டிய பாதையில் வன்னிக்கும் எங்கள் சேவையை எடுத்துச் செல்வோம்

மா. கணபதிப்பிள்ளை

**கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியன்று கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடந்த சிறப்பு நிகழ்வின்போது கொழும்பு றோயல் கல்லூரியின் (தமிழ்ப்பிரிவு) ஓய்வு நிலை அதிபரும், மாமன்ற கல்விக்குழுவின் தலைவருமான திரு. மா. கணபதிப்பிள்ளை நிகழ்த்திய கலாநிதி வேலாயுதபிள்ளை ஞாபகார்த்த சிறப்புரை**

இந்து மாமன்றத்தின் மிகச் சிறந்த ஆளுமையாளர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி அமரர் வேலாயுதபிள்ளை பற்றிய இந்த உரை மூன்று முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.

1. எமது கதாநாயகன் வைத்தியகலாநிதி அமரர் கந்தையா வேலாயுதபிள்ளை அவர்களின் வாழ்வும் வகிபாகமும் பற்றியது.
2. வன்னி என்ற சொல்லால் வரைவிலக்கணம் காணும் நிலப்பகுதியும் அங்குள்ள மக்களின் வாழ்வாதார நிலையும் குறிப்பாகக் கல்வி நிலை.
3. வைத்திய கலாநிதியின் வாழ்விலும் வகிபாகத்திலும் இருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்களும் அவற்றை எவ்வாறு வன்னிக்கு எடுத்துச்செல்வது என்பதுமாகும்.

### வைத்திய கலாநிதி அமரர் வேலாயுதபிள்ளை அவர்களின் வாழ்வும் வகிபாகமும்

யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய் பிரதேசம் பல கல்வியாளர்களையும், கனவான்களையும், சீமாட்டிகளையும் எமது இலங்கைத் தீவுக்குத் தந்த பிரதேசமாகும். அப்பிரதேசத்தில் சிறப்புடன் வாழ்ந்த கந்தையா கண்ணம்மா தம்பதிகளின் புதல்வனாக 1927 செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வேலாயுதபிள்ளை அவர்கள் பிறந்தார். தன் இளமைக்கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். உயிரியல் துறையில் சிறப்பாகத் துலங்கிய அவர் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். மருத்துவ பீடத்தில் சிறந்து விளங்கிய வேலாயுதபிள்ளை அவர்கள் சிறந்த பெறுபேறுகள் பெற்றதுடன் சிலகாலம் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

கனடா ரொரன்ரோ பல்கலைக்கழகத்திலும் லண்டன் லிவர்பூல் பல்கலைக்கழகத்திலும் மருத்துவ மேற்படிப்பை மேற்கொண்ட அவர் நுண்ணுயிரியலில் சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். பொதுச் சுகாதாரத்திலும் அவருக்கு மிகுந்த ஆர்வம் காணப்பட்டது.

பிரதம வைத்தியராகப் பலாங்கொடையில் தன் பணியைத் தொடர்ந்த அவர் சுகாதார அமைச்சின் நுண்ணுயிர்ப் பிரிவில் மிகச் செல்வாக்குடன் செயலாற்றினார்.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்ற வாக்கிற்கிணங்க ஐந்து ஆண்பிள்ளைகளையும் ஒரு பெண்குழந்தையையும் பெற்றெடுத்து சந்தோஷமாக வாழ்ந்தார். அவர்களில் ஒருவர் மருத்துவராகவும் ஏனையவர்கள் பொருத்தமான தொழில்களிலும் சிறப்பாகத் துலங்குகின்றனர்.



சமயப்பணி, கல்விப்பணி, வைத்தியப்பணி, சமூகப்பணி என்று பல்துறையிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டவர். பல்துறை ஆளுமையை வெளிப்படுத்திய வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை அவர்கள் ஈழத்துத் தமிழ் இந்துப் பெரியவர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்.

வைத்தியத் தொழிலை வருவாய் ஈட்டுவதற்காகப் பயன்படுத்தவில்லை. மிக எளிமையாக வாழ்ந்த அவர் கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள லில்லி அவனியூவில் 11ஆம் இலக்க இல்லத்தில் வாழ்ந்தார். யார் நோய் என்று போய் ஆலோசனை கேட்டாலும் மருந்துகள் எழுதிக்கொடுப்பார். ஒரு சதமேனும் கட்டணம் அறவிடுவதில்லை.

இக்கட்டான காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் மூடப்பட்டுவிடும் என்ற சந்தர்ப்பத்தில் தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாது மிகுந்த கஸ்டமான போக்குவரத்து நிலையையும் கவனத்தில் எடுக்காது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று மருத்துவ பீடத்தில் விரிவுரையாற்றினார். ஒருநாள் பலாலி விமானநிலையத்தில் இரத்த அழுத்தம் அதிகரித்தமையால் மயக்கமடைந்தார். குடும்பத்தினர், நண்பர்கள் இனி யாழ்ப்பாணம் போக வேண்டாம் என்று கேட்டுக்கொண்டபோதும் அவர் தொடர்ந்து சென்று தான் ஏற்றுக்கொண்ட பதவிக்குப் பெருமை சேர்த்தவர். இத்தகைய பெரியார்களால்தான் மருத்துவபீடம் மூடப்படாது பாதுகாக்கப்பட்டது என அக்காலப் பெரியார்கள் குறிப்பிடுகின்றார்கள்.

1983 இல் இலங்கையில் இனக்கலவரம் உச்சநிலை அடைந்தபோது பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முகாமில் இடம்பெயர் தமிழர்களுக்காக தன்னாலான பங்களிப்பைச் செய்தார். இக்காலத்தில் மூடப்பட்ட இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் திறந்து கற்றல் கற்பித்தல் நிகழ போதிய நடவடிக்கைகளை எடுத்தார். எங்கெங்கு தமிழ் மாணவர்கள் துன்பம் அடைந்தார்களோ அங்கெல்லாம் குரல்கொடுத்து பிறரின் நிலை கண்டு பொங்கி எழும் மாமனிதனாக விளங்கினார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் உப தலைவராகவும் கல்வி, சமயக் குழுக்களின் தலைவராகவும் இருந்து சிறப்பாக பணியாற்றினார். சமயச் சொற்பொழிவுகளால் தன் சமூகக் குழந்தைகளை நல்வழிப்படுத்தியவர்.

கொழும்பு விவேகானந்தசபை, ஈழத்து திருநெறி மன்றம், கொழும்புத் தமிழ்ச்சங்கம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,

இந்து வித்தியா விருத்திச் சங்கம் போன்ற அமைப்புகளுடன் சேர்ந்து தமிழ்ப் பணியும் சைவப்பணியும் ஆற்றியவர். இனங்களுக்கிடையே சமத்துவம் நிலவ வேண்டும் என்ற நினைவுடன் செயற்பட்ட வேலாயுதபிள்ளை அவர்கள் தனது சொந்தப்பட்டம் பதவிக்காக யாரிடமும் தலை சாய்க்காத பெருமை படைத்தவர். எதற்கும் அஞ்சா நெஞ்சுத்துணிவுடன் தனக்குச் சரி என்று பட்டதை துணிவுடன் சொல்லும் செய்யும் திறன்படைத்தவர்.

மலையக மாணவர்களின் கல்வி மிக மோசமான நிலையில் இருந்ததை அவதானித்து அம்மாணவர்களுக்கு கல்வி புகட்ட பல வழிமுறைகளை கையாண்டார். அவற்றில் வெற்றியும் கண்டார்.

தன் நெஞ்சறியப் பொய்யாதவராய், உள்ளத்தில் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளி, தன்நடத்தையால் மக்களுக்குச் சேவை செய்வதே மகேசன் சேவை என்று வாழ்ந்த பெருமை படைத்தவர் அவர்.

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்*

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாக வாழ்ந்தார். தான் படிப்பால், தொழிலால், பொருளாதாரத்தால் உயர் நிலையில் இருந்த போதும் சாதாரண எளிய வாழ்க்கை முறையால் எல்லோருக்கும் உதவிய பெருமகனார் ஒரு உதாரண புருஷராகவே விளங்கினார்.

**வன்னி என்ற சொல்லால் வரைவிலக்கணம் காணும் நிலப்பகுதியும் அங்குள்ள மக்களின் வாழ்வாதார நிலையும் குறிப்பாகக் கல்வி நிலையும்.**

இலங்கையில் நிர்வாக மாவட்டங்கள் இருபத்தைந்து. அதில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் மூன்றும் தேர்தல் மாவட்டத்தில் வன்னி என்று ஒரு மாவட்டமாக அழைக்கப்படும். மற்றும் கிளிநொச்சி மாவட்டம் வன்னிக்குள் உள்ளடங்காத போதும் யாழ் மாவட்டத்து மக்கள் ஆனையிறவுக்குத் தெற்கே வவுனியா வரையுள்ள பிரதேசத்தை வன்னி என்றே அழைப்பதால் வன்னி என்ற வரையறைக்குள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி என்ற நான்கு மாவட்டங்களும் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

**சமூகநிலை**

மேற்படி நான்கு மாவட்டத்து மக்களும் யுத்தத்தால் பாரிய அளவில் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டவர்கள். இன்று வரை யுத்தத்தின் உளத்தாக்கங்களிலிருந்து விடுபடாதவர்களாகவே காணப்படுகின்றனர். இங்கு சேவையாற்றும் அதிகாரிகளும் சேவையாளர்களும் பொது நிறுவனங்களும் இவர்களுக்கு போதிய உதவிகளை வழங்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர். தங்களின் நிலைமையைச் சரியாக விளங்கிக்கொள்கிறார்கள் இல்லை. தமக்கான சமூக அடைவுகளை கிடைக்கச் செய்ய முடியவில்லை. எங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றனர். கடந்த காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் அறவே குறைக்கப்பட்டதால் எமக்குக் கிடைத்த குறைந்த பட்ச தேவைகளும் பறிக்கப்பட்டன. ஆகக் குறைந்தது முறையான வழிகாட்டலும் ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளவும் முடியவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். விதவைகள் ஊனமுற்றோர் மரணம் அடைந்தோர் பற்றிய சரியான புள்ளி விபரங்களுடன் அரச நிறுவனங்கள் செயற்படுவதில்லை என்றும் குற்றம் சாட்டுகின்றனர். செல்வாக்குள்ள பலர் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்கின்றனர். அரசியல் சமூகச் செல்வாக்கில்லாத இயலாமையுள்ளோர் போதிய உதவிகள் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில்லை என்று குறிப்பிடும் அவர்கள் தாங்கள் ஆறு தகரத்தோடு வாழ்கின்றோம் எனவும் தெரிவித்தனர்.

கிராம சேவையாளர்கள் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்கிறார்கள் இல்லை. பாகுபாடு காட்டுகின்றனர் எனக் குறிப்பிடுகின்றனர். ஏதோ தங்கள் வீட்டுப் பொருட்களைத் தருவது போல எமக்கு எதுவும் கிடைக்காமல் செய்கின்றார்கள். தமது குடும்ப உறவினர், சொந்தம் என்று எமது கிராமத்தில் ஏலவே காணாத பலர் இப்போது சிறப்பாக வாழ்கின்றார்கள். இங்கு என்ன நடக்கின்றது என்பது எங்களுக்கு விளங்கவில்லை. அரசியல்வாதிகள் அடுத்த கட்சி பதிதலில் காட்டும் அக்கறையை எம்மீது காட்டவில்லை. தமது பிரசாரம், கட்சி கட்டலில் காட்டும் அக்கறையில் ஒரு சதவீதத்தையேனும் எமது சமூக முன்னேற்றத்தில் காட்டவில்லை. அரசாங்கம் ஏ9 வீதியை திருத்திவிட்டு எல்லா அபிவிருத்தியும் முடிந்துவிட்டது என்கிறார்கள். எங்கள் வீதிகளை வந்து பாருங்கள் நடக்கவோ துவிச்சக்கர வண்டிகளில் செல்லவோ முடிகின்றதா? எங்கள் ஆதார வைத்திய சாலைகளைப் பாருங்கள். நாய்கள் உறங்குகின்றன. எங்கள் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் சீராக இல்லை. எது சரியாக இருக்கின்றது என்று அங்கலாய்க்கின்றனர்.

**பொருளாதார நிலை**

வன்னி மக்களின் பொருளாதார நிலை மிக மோசமாகவே காணப்படுகின்றது. பெரும்போகம், சிறுபோகம் போன்ற இரண்டு போக நெற்செய்கையும் பல தடவைகள் அற்றுப் போவதால் விவசாயமக்கள் பரவலாகப் பாதிக்கப்படுகின்றனர். மீனவர்கள் கரையோர மீன்பிடியோடு நிற்பதால் குடும்பநிலை வறுமைக்கோட்டுக்குக் கீழ்த்தான் காணப்படுகின்றது. ஆடைத் தொழிற்சாலை, சங்கிலித் தொடர்க்கடைகள் ஆட்சேர்ப்புச் செய்துள்ள போதும் அவர்களின் சம்பளமும் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. வடக்கின் வசந்தம் போன்ற திட்டங்களால் எமக்கு மின்சாரம் போன்ற வசதிகள் கிடைக்கும் என்றிருந்தோம். மின்சாரம் கிடைத்தால் தோட்டம் சிறுதொழில் என்று ஏதாவது செய்யலாம் என்று எண்ணினோம். இங்குள்ள சில அரசியல்வாதிகள் திறப்புவிழா நிகழ்வுக்காக ஆமை வேகத்தில் செய்யப்பட்ட மின்சாரம் வழங்கலால் எங்களில் பலருக்குக் மின்சாரம் கிடைக்கவில்லை. வேதனையில் வாழ்கின்றோம் என்கின்றார்கள்.

தாங்கள் ஆண்டாண்டாக வாழ்ந்த தங்கள் பாரம்பரியக் காணிகள் நல்ல பயிர் செய்நிலங்களில் இராணுவம் கடற்படையினர் நிலை கொண்டிருப்பதால் தம்மால் ஏதும் செய்ய முடியவில்லை. எங்கள் நிலங்களின் விளைவுகளை இராணுவம் கடற்படை சந்தைப்படுத்தும் போது அவற்றை விலை கொடுத்து வாங்கும் நிலையிலேதான் நாம் இருக்கிறோம். யுத்தம் முடிந்து ஆறு ஆண்டு முடியும் நேரத்திலும் எம் சொந்த இடங்களில் வாழ முடியாமல் இருக்கும் எம்மிடம் இழப்பதற்கு இனி என்ன இருக்கிறது என்று கேட்கின்றார்கள்.

கையில் கிடைத்த காசையும் சுரண்ட வங்கிகளும், லீசிங் கம்பனிகளும் வந்து எம்மை வாழவைப்பவர்கள் போல் பாசாங்கு செய்து இருந்த தாலிக்கொடியையும் இழந்து நாதியற்று நிற்கின்றோம். நாம் எங்கு பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவது என்கின்றனர். எங்கள் நிலம், நீர், வளம் எல்லாம் சுரண்டப்படுகின்றது. எப்படி எம்மால் நிமிர்ந்து வாழமுடியும் என்று கேட்கின்றார்கள்.

**கல்வி**

'அறியாமையை கல்வியால் அகற்றி விடுங்கள். அந்தச் சமூகம் உயர்நிலை அடையும்' என்ற விவேகானந்த சுவாமியின் கருத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு வன்னியின் கல்வி நிலையை நோக்கின்,

**கிளிநொச்சி மாவட்டம்**

104 பாடசாலைகளைக் கொண்ட கிளிநொச்சி வலயத்தில் நான்கு கோட்டங்கள் காணப்படுகின்றன. பளைக் கோட்டம் 14 பாடசாலைகளையும், கண்டாவளைக் கோட்டம் 24 பாடசாலைகளையும், கரைச்சிக் கோட்டம் 42 பாடசாலைகளையும் பூநகரிக் கோட்டம் 24 பாடசாலைகளையும் கொண்டு இயங்குகின்றன. பூநகரிக் கோட்டத்தில் முழங்காவில் இரணைதீவு போன்ற பகுதிகள் மிகவும் பின்தங்கியவை. அதேபோல் கண்டாவளைக் கோட்டத்தில் புளியம்பொக்கனை தட்டுவம் கொட்டி கட்டைக்காட்டுப் பிரதேசங்கள் மிகவும் வசதிகுன்றியவை.

இங்கு இடைவிலகல் 7 வீதத்தில் இருந்து 11 வீதம் வரை காணப்படுகின்றது. குடும்பத்தின் வறுமையே இடை விலகலுக்கான பிரதான காரணம். யுத்தத்தின் பின் தந்தை தாய் சகோதரர்களை இழந்த பலர் பாடசாலைக்கல்வியில் நாட்டம் காட்டாதுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்த 467க்கு மேற்பட்ட மாணவர்கள் எந்தத் தொழிலும் இல்லாதுள்ளனர். எல்லாத்தொழில் வாய்ப்புக்கும் விண்ணப்பித்துள்ளோம் கிடைக்கவில்லை. அரசியல், பொருளாதாரச் செல்வாக்கு அற்றவர்கள் நாங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

இரண்டு கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு வலயம், துணுக்காய் வலயம் என்பவை அவை. 113 பாடசாலைகளைக் கொண்ட ஐந்து கோட்டங்கள் உள்ளன. முல்லைத்தீவு வலயத்தில் கரைத்துரைப்பற்று 31 பாடசாலைகளுடனும் புதுக்குடியிருப்புக் கோட்டம் 23 பாடசாலைகளுடனும் இயங்குகின்றது. துணுக்காய் வலயத்தில் துணுக்காய் கோட்டம் 18 பாடசாலைகளுடனும், ஒட்டிசுட்டான் கோட்டம் 27 பாடசாலைகளுடனும் மாந்தை கிழக்குக் கோட்டம் 14 பாடசாலைகளுடனும் இயங்குகின்றது.

இங்கு இடைவிலகல் 11 வீதத்தில் இருந்து 13 வீதம் வரை காணப்படுகின்றது. வறுமை விரக்தி என்பவை இடைவிலகல் காரணங்களாகும். அத்துடன் இளவயதுத் திருமணமும் காரணமாக அமைகின்றது.

**மன்னார் மாவட்டம்**

மன்னார் மாவட்டம் இரண்டு கல்விவலயங்களைக் கொண்டது. அவை முறையே மன்னார், மடு என்று அழைக்கப்படுகின்றது. மன்னார் வலயம் மூன்று கோட்டங்களைக் கொண்டது. மன்னார்க்கோட்டம் 39 பாடசாலைகளையும், முசலிக் கோட்டம் 25 பாடசாலைகளையும். நானாட்டான் கோட்டம் 26 பாடசாலைகளையும் கொண்டிருக்கின்றது. மடுவலயத்தில் மடுக்கோட்டத்தில் 22 பாடசாலைகளும், மாந்தை மேற்குக் கோட்டத்தில் 31 பாடசாலைகளும் காணப்படுகின்றன. இடைவிலகல் 12 வீதத்தில் இருந்து 15 வீதம் வரை காணப்படுகிறது. சிறுவர் உழைப்பு வறுமை காரணமாகவே இடைவிலகல் அதிகரிக்கின்றது என்று குறிப்பிடுகின்றனர்.

**வவுனியா மாவட்டம்**

இங்கும் வவுனியா தெற்கு,வவுனியா வடக்கு என இருவலயங்கள் காணப்படுகின்றன. வவுனியா தெற்கு வலயம் வவுனியா தெற்குக் கோட்டத்தில் 22 சிங்களப் பாடசாலைகளும் 42 தமிழ்ப் பாடசாலைகளும் காணப்படுகின்றன. அடுத்த கோட்டம் வெங்கலச் செட்டி குளம் 37 பாடசாலைகளுடன் இயங்குகின்றது.

வவுனியா வடக்கு வலயம் நெடுங்கேணிக் கோட்டம் 41 பாடசாலைகளுடனும் ஓமந்தைக் கோட்டம் 48 பாடசாலைகளுடனும் காணப்படுகின்றது.

இங்கு இடைவிலகல் 9 வீதத்தில் இருந்து 13 வீதம் வரை காணப்படுகின்றது. வறுமை சிறுவர் உழைப்பு பெற்றோர் பொறுப்புணர்வின்மை என்பவை இடைவிலகல் காரணங்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

**பொதுவான குறைபாடுகள்**

வன்னிப் பெருநிலப்பரப்பின் கல்வி நிலைக் குறைபாட்டுக்கு பொதுவான காரணங்களாக அமைபவை,

- **ஆசிரியர் கல்வி**

ஆசிரிய ஆட்சேர்ப்பு முறை இலங்கையில் மிக மோசமான நடைமுறையைக் கொண்டது. வறுமை ஒழிப்புக்கு ஆசிரியர் தொழில் தீர்வாகவுள்ள நாடு இலங்கையாகும். இன்று உலகில் கல்வி வளர்ச்சி அடைந்துள்ள பின்லாந்து, சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகள் தம் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர் கல்வி வளர்ச்சியே காரணம் என்கின்றன. நாம் அதில் அக்கறை காட்டவில்லை.

- **போசாக்கான உணவின்மை**

பிள்ளைகள் போசாக்கான உணவை உண்பதில்லை என்பது UNICEF போன்ற நிறுவனங்களின் ஆய்வாகும். மதிய உணவுக்கு உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்பட்ட அரிசி, ரின்மீன், கருவாடு, பருப்பு என்பவை களவாடப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந் நடவடிக்கைகள் சீராக அமையவில்லை.

- **ஆசிரியர் பற்றாக்குறை**

இலங்கையின் தற்போதைய ஆசிரிய மாணவர் விகிதாசாரம் 1:18 ஆகும். ஒரு ஆசிரியருக்கு 18 பிள்ளைகள். ஆனால் வன்னி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் இந்த விகிதாசாரம் பேணப்படவில்லை. பொருத்தமான பாடங்களுக்கு பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பப் பாடங்களுக்கு போதிய ஆசிரியர்கள் இல்லை. இவ்வாண்டு வெளிவந்த க.பொ.த (சாதாரண தர)

பரீட்சை பெறுபேற்றில் ஆங்கிலப் பாடத்தில் பத்து வீதம் அடைவைக் கூட வன்னி பெருநிலப்பரப்பு மாணவர்கள் பெறவில்லை. கடந்த ஆண்டு பரீட்சை முடிவுகளின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டம் இருபத்தைந்தாவது மாவட்டமாகவும் முல்லைத்தீவு இருபத்து மூன்றாவது மாவட்டமாகவும் கல்வி அடைவு காணப்பட்டதை வேதனையுடன் நோக்க வேண்டும்.

➢ **ஆசிரியர் விடுதிகள் இல்லை**

தூர இடங்களில் இருந்துவரும் ஆசிரியர்கள் தங்கி நின்று கற்பிப்பதற்கு பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இல்லை. எனவே ஆசிரியர்கள் தினமும் தொலைதூரத்தில் இருந்து வந்தே கற்பிக்க வேண்டியுள்ளது. எனவே வருதல், போதல் ஆகிய காரணங்களால் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம் குறுகியதாகக் காணப்படுகின்றது. விடுதிகள் அமைக்கப்படுவதால் எதிர்காலத்தில் இந்நிலைக்குத் தீர்வு காணலாம் என நம்பலாம்.

➢ **யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் ஆசிரியர்கள்**

வன்னிப் பெரு நிலப்பரப்பில் பரவலாக யாழ் குடாநாட்டு ஆசிரியர்களே கடமைபுரிகின்றார்கள். அவர்கள் அலுவலக ஊழியர் பேருந்தில் வந்து செல்வோராக இருப்பதால் காலையில் பல மணித்தியாலம் பிந்தியும் மாலையில் பல மணி நேரம் முந்தியும் செல்லுவதால் வன்னிக் குழந்தைகள் முறையான கற்றல் அடைவைப் பெறுவதில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது. 1970 களை அண்மித்த காலங்களில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதி ஆசிரியர்கள் வந்து வன்னிப் பாடசாலைகளில் தங்கி இருந்து மலேரியா நோய், பாம்புக்கடி, யானை அச்சுறுத்தல் போன்ற எல்லாக் கஸ்டங்களையும் தாங்கிக்கொண்டு சேவை செய்தார்கள். பணத்துக்குக் கல்வியை விற்காது அர்ப்பணிப்புடன் சேவை செய்தனர். லீவு கிடைக்கும் நேரங்களில் மாலை நேரங்களில் மாணவர்களுக்கு கற்பித்தார்கள். அதனால் சிறந்த பெறுபேறுகளுடன் மாணவர்கள் துலங்கினர். இன்று தமது பிள்ளைகளை யாழ்ப்பாணத்து பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டு வன்னி நிலப்பரப்பு மாணவர்களை மாற்றான் தாய் மனப்பாங்கோடு கற்பிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

➢ **பெற்றோர், நலன்விரும்பிகள் அக்கறையின்மை**

எங்கே பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அக்கறையுடன் உள்ளனரோ அங்கே கல்வி வளர்ச்சி அடையும். ஆனால் வன்னி நிலப்பரப்பில் அவ்வக்கறை மிகக் குறைவு. ஏதோ நடக்கிறது என்ற மனோநிலையுடன், தான் தன்பிள்ளை என்ற சிந்தனையுடன் உள்ளனரே தவிர பொதுச்சிந்தனையுடன் காணப்படும் மனிதர்கள் அரிதாகவுள்ளனர்.

➢ **எல்லாம் தெரியும் என்ற நினைப்பு**

தம்மை இற்றைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்களிடம் காணப்படவில்லை. எமக்கு எல்லாம் தெரியும் என்ற சிந்தனையுடன் இருக்கிறார்கள். எனவே அவர்களின் மனோநிலையை மாற்றுவது கடினமாக உள்ளது.

➢ **வழிகாட்டல், ஆலோசனைகள்**

பெற்றோர், மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் எல்லோருக்கும் இந்நடவடிக்கை அத்தியாவசியமாகும். வழிகாட்டல் ஆலோசனைகளை செவ்வையான முறையில் முன்னெடுப்பின் எதிர்காலம் மாற்றமடைய சந்தர்ப்பம் உண்டு.

**வைத்திய கலாநிதி அமரர் வேலாயுதபிள்ளையிடம் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களும் வன்னிக்கு அவற்றைக் கொண்டு செல்லும் முறையும்**

1. பிறர் ஈனநிலைகண்டு பொங்கும் இயல்பு

   வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார் போல வறுமையாலும் போரின் துன்பத்தாலும் வாடி நிற்கும் மாணவரின் கல்வி நிலை வளர்ச்சிக்கு உதவுவதற்கு இயலக்கூடியவர்கள் முயல வேண்டும். அதைத்தான் வேலாயுதபிள்ளையிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

2. அஞ்சாமை, துணிவுடமை

   1983 இனக் கலவரத்தில் பம்பலப்பிட்டியில் நின்று சேவையாற்றிய வேலாயுதபிள்ளை அவர்களின் தலைமைத்துவ ஆற்றல் உள்ள பெரியார்கள் இன்று வன்னிக்குத்தேவை. மூடப்பட்டுக்கிடந்த இரத்மலானை இந்துக் கல்லூரியைத் திறக்கச் செய்த ஆற்றல் உள்ளவர்கள் வன்னியில் மூடப்படும் பாடசாலைகளைத் திறக்க முன்வர வேண்டும்.

3. பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்பட்டுவிடுமோ என்ற ஏக்கத்துடன் தன் உடல் நிலைபாராது பணி செய்த வேலாயுதபிள்ளை அவர்களின் மனப்பாங்குள்ள மனிதர்கள் வன்னிக்கு வேண்டும்.


4. 14 வயதுக்குள் கற்காமல் நிற்கும் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும், அதை ஊக்குவிக்க வேண்டும் என்பது சுற்றுநிருபம் ஆகும். அந்த சுற்று நிருபத்தை நடைமுறைப்படுத்தும் மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். அந்த நிலையில் செயற்பட்ட வேலாயுதபிள்ளையின் மனப்பாங்கு உள்ளோர் மீண்டும் வன்னிக்கு வருதல் வேண்டும்.

5. பணத்துக்கப்பால் நாளைய சந்ததி நன்றாக இருக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் செயற்படும் மனிதர்கள், முன்மாதிரியானவர்கள் வன்னிக்கு வாருங்கள். இத்தகைய மனப்பாங்கு வேலாயுதபிள்ளை அவர்களால் விதந்துரைக்கப்பட்டது.

6. ஏழ்மைநிலையில், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் வன்னி நிலப்பரப்பின் குழந்தைகளை துர்ப்பிரயோகம் செய்யாது, விபச்சாரத்துக்கு உட்படுத்தாது, அவல மரணங்களுக்கு உட்படுத்தாது அவர்கள் உள்ளத்தில் தலைத்தோங்கும் கல்வியை முறையாக அவர்களுக்குக் கொடுத்து எதிர்காலத் தலைமைத்துவம் உள்ள ஆற்றலாளர்களை உருவாக்குவதற்கு முன்வாருங்கள் என்று அமரர் வேலாயுதபிள்ளை அவர்களின் ஞாபகார்த்த தினத்தில் உங்களிடம் வேண்டுதலை முன்வைக்கின்றேன்.

# தவத்திரு சிவயோக சுவாமிகள் அருளிய மானிட வாழ்க்கையின் இரகசியம்

சிவதொண்டன் தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை – கனடா



ஈழவளநாடு எங்கள் தாய் நாடு. இந்நாட்டின் வடபாலுள்ள சிறந்த நகரம் செந்தமிழ் வழங்கும் யாழ்ப்பாணமாகும். இந்நகரில் தென்திசையிலுள்ளது கொழும்புத்துறை என்னும் சிற்றூர். இவ்வூரின் கண் நிலவி நானிலமெங்கும் அருளொளி வீசிய ஞானகுரவனே எங்கள் குருநாதன். எல்லோரும் இவர்களை கொழும்புத்துறை யோகசுவாமிகள் என்று அழைத்து வரலாயினர்.

சுவாமிகளின் தந்தையார் பெயர் அம்பலவாணர். தாயார் பெயர் சின்னாச்சியம்மை. சுவாமிகளின் பிறப்பிடம் மாவிட்டபுரம். இவர் பெரும்பாலும் வாழ்ந்து வந்த இடம் கொழும்புத்துறையேயாகும்.

சுவாமிகள் வாலிபராக இருந்த காலத்தில் நல்லூரில் செல்லப்பா சுவாமிகள் என்னும் திருப்பெயர் பூண்ட மாபெருந் தவத்தினராகிய சிவஞானியார் வாழ்ந்து வந்தார். இச்சிவஞானியரே எங்கள் சுவாமிகளின் ஞானகுரு ஆவார். தனது குருவுக்கு ஆளான பின் சுவாமிகளின் இனசன தொடர்புகள் தாமாகவே கழன்று விட்டன. செல்லப்பா சுவாமிகளை தமது தாயாகவும், தந்தையாகவும், இறைவனாகவும் கொண்டு அவர்களுக்கே தாம் மீளா அடிமையாயினார். அக்குருநாதன் வாக்கு சுவாமிகளுக்கு வேத வாக்காயிற்று.

*"குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்*
*குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்*
*குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்*
*குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பம்"* - நற்சிந்தனை

குருமூர்த்தியின் அருட்டிரு நோக்கம்பட்டதும் பாசம் எரித்தொழிந்தது. ஞானம் பிரகாசிக்கச் சிவானந்தம் மேலிட்டது. அப்பொழுது அதனுள் அழுந்தி இருக்கும் நிலையும் கைகூடியது. குருவருள் பெற்றுக் குணமென்னும் குன்றேறி நின்ற சுவாமிகளுக்கு சித்தியும், பக்தியும் முத்தியும் எய்தின.

சிவயோகியாயும், சிவஞானியாயும், சீவன் முத்தராயும், துறவி வேந்தராயும் திகழ்ந்து ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலத்துக்கு மேல் எங்கள் மத்தியில் நடமாடும் தெய்வமாக வாழ்ந்து எண்ணற்ற ஆன்மாக்களை ஈடேறச் செய்தவரும், இன்றும் தோன்றாத்துணையாக எம்முடனிருந்து எங்களை வழி நடத்துபவராகிய சுவாமிகள் கருணைக்குக் கைம்மாறு உளதாமோ!.

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே*
- திருமந்திரம்

சிவயோக சுவாமிகள் தமது வாழ்க்கையில் வண்ணார்பண்ணை, கைதடி முதலிய இடங்களிலே அதிகம் சஞ்சாரம் செய்து வந்தார்கள். வண்ணார்பண்ணையில் சிவதொண்டன் நிலையத்திற்கு ஏறக்குறைய எப்போதும் அங்கு செல்வார்கள். சில நாட்களில் இருமுறை, மும்முறையும் சென்று அதற்கு பொறுப்பாயிருப்பவர்களுக்கு அதை நடத்துவது பற்றியும் ஆலோசனை கூறிவருவார்கள்.

1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி சுவாமிகள் விழுந்த அன்று, காலை வண்ணார்பண்ணைக்குச் சென்றிருந்தார்கள் அன்று பிற்பகல் கால் நடையில் கொழும்புத்துறைக்குச் சென்றிருந்தார்கள். அங்கு சென்றதும் இவர் வழக்கம்போல் பசுக்கள் கட்டியிருக்கும் இடத்தைச் சுத்தி செய்யும் பொழுது, ஒரு பசு துள்ளியது. சுவாமிகள் அதைக் கண்டு சடுதியாகத் திரும்பியதும், நிலத்தில் விழுந்துவிட்டார்கள். தொடை எலும்பு உடைந்து விட்டது. சுவாமிகள் தமது நோய் பற்றிக் கூறியவை சில வருமாறு.

*"இந்த நோய் ஒரு வரப்பிரசாதம்.*
*கன்மத்தை அனுபவித்தே தீரவேண்டும்.*
*உடம்பு தோன்றியபொழுது அதோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கொண்டு வந்தது.*
*அதில் நோயும் ஒன்றாகும்."*

இந்த நோயைப் பற்றி ஆராய வேண்டியதில்லை. இது எப்போதோ முடிந்த காரியம். ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. இந்த நோயின் காரணத்தை அறிந்தவர் இது எல்லாத் துக்கங்களுக்கும் நிவர்த்தி என்பதை அறிவர். அறிந்து அமைதியாயிருப்பர்.

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கும், இரமண மகரிஷிக்கும் புற்றுநோய் வந்ததை அன்பர்கள் அறிவார்கள். சுவாமிகள் விவேகானந்தர், "உடலுக்குப் பிணி, மூப்பு, சாக்காடு வருவது இயற்கையென்றும் ஞானிகளின் உடம்பும் இதற்கு விலக்கானவையல்ல" என்றும் கூறினார்.

இந்நிலையில் தான் சுவாமிகள் சிலகாலம் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் தங்கி அந்த இடத்துக்கு ஒரு புதுச்சக்தியை கொடுத்தனர். சிவத்தொண்டன் சபை ஆதரவில் பாதயாத்திரைகள் இக்காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டன.

சுவாமிகள் நல்லூர் முருகன் மீதும், வண்ணைச் சிவன் கோயிலில் எழுந்தருளியிக்கும் தையல்நாயகி மீதும், விஷேச பக்தியுள்ளவராய் இருந்தார்கள். கடைசிக்காலத்தில் இவ்விரு கோயில்களிலும் அபிஷேகம், ஆராதனைகள் முதலியன செய்விக்கும்படி அன்பர்களை ஊக்குவித்து வந்தார்கள். தையல்நாயகி அம்மன் மீது சுவாமிகள் பாடிய பாடல் பின்வருமாறு:

*"தையல்நாயகித் தாயே*
*இது நல்ல தருணம் அம்மா*
*வையம் புகழும் வண்ணைமா நகரில்*
*வந்த வாணியே சிவகாமியே*
*கந்தசுவாமியை தந்த தையல்நாயகித் தாயே*
*இது நல்ல தருணமம்மா"*

சுவாமிகளோடு பல காலமாக நெருங்கிப் பழகிய எங்களுக்கு சுவாமிகள் வெண்முடி தாங்கி, வெண்தாடியோடு, வெண்ணீறு அணிந்து, வெள்ளை வேட்டி உடுத்து புன்சிரிப்போடு அருள்ஒளி வீசும் அத்திருவுருவத்தை, அந்தச் சிறுகுடிசையில் கண்குளிரக் கண்டகாட்சியை நினைக்கும்போது இன்றும் எமது மனதை உருக்குகிறது.

அன்பர்கள் மத்தியில் நடமாடும் தெய்வமாக விளங்கிய சிவயோக சுவாமிகள் 23.03.1964 இல் திருவடி பூசைத் தினத்தன்று சமாதியாகி சோதியுடன் கலந்து கொண்டார்கள். சுவாமிகள் கடைசியாக உருக்கமாக கூறியவை பின்வருமாறு.

''நான் ஐம்பது வருடத்திற்கு மேலாகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்து விட்டேன். போதிக்க வேண்டியவற்றை போதித்து விட்டேன். ஒருவருக்கும் ஒரு குறையும் விடவில்லை." ஆகவே சுவாமிகள் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக நமக்குக் காட்டிய நல்வழியைப் பின்பற்றி உய்தியடைவோமாக!

*"ஒரு பொல்லாப்புமில்லை*
*எப்பவோ முடிந்த காரியம்*
*நாமறியோம்*
*முழுவதும் உண்மை"*

- மகாவாக்கியங்கள்

*மாமன்றச் செய்தி*

# மாமன்றத்தின் வைரவிழா வெளியீடான

# A COMPENDIUM FOR HINDUS

## என்ற இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரியின் வெளியீட்டு விழாவும் வைத்திய கலாநிதி க.வேலாயுதபிள்ளை ஞாபகார்த்த சிறப்புரை நிகழ்வும்

மேற்படி நூலின் வெளியீட்டு விழாவும், ஞாபகார்த்த சிறப்புரையும் கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியன்று காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தின் போது திருப்பனந்தாள் காசித்திருமடம் இணை அதிபர் தவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் மாண்புமிகு நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாமன்ற உப தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாமன்றத்தின் வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலில் அடங்கியுள்ள பெரும்பாலான விஷயங் களுடன் மேலதிகமான பல விஷயங்களையும் தாங்கியதாக "A Compendium for Hindus" நூல் வெளிவந்துள்ளது. மேற்படி தமிழ் நூலிலுள்ள விஷயங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவிபிருந்த திருமதி திலகா விஜயரத்தினம் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டார்.

முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரும், இப்போது நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளருமான திருமதி சாந்தி நாவுக்கரசன் இந்த நூலை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை திருமதி திலகா விஜயரத்தினம் பெற்றுக்கொண்டார். திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆற்றிய வெளியீட்டுரையைத் தொடர்ந்து ஜனாதிபதி சட்டத்தரணியும் வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான திரு. கனகநாயகம் கனக-ஈஸ்வரன் நூலை ஆய்வுரை செய்தார்.

இந்த நிகழ்வின் போது மாமன்றத்தின் ஆன்மீக இதழான "இந்து ஒளி" யின் தவத்திரு யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளியீடும் இடம் பெற்றது. அமெரிக்க ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சிறப்பிதழை வெளியிட்டு வைத்த பின், "தவத்திரு யோகர் சுவாமிகளின் தீர்க்கதரிசனம்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து மாமன்ற உபதலைவரும் கொழும்பு றோயல் கல்லூரியின் ஓய்வு நிலை (தமிழ்ப்பிரிவு) அதிபருமான திரு.மா.கணபதிப்பிள்ளை "கலாநிதி வேலாயுதபிள்ளை காட்டிய பாதையில் வன்னிக்கும் எங்கள் சேவையை எடுத்துச் செல்வோம்" எனும் பொருளில் ஞாபகார்த்த சிறப்புரையை நிகழ்த்தினார்.

நிறைவுரையாக மாமன்ற உப தலைவரும் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் "பாரெல்லாம் எங்கள் பணி பரவட்டும்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

**விபுலானந்தர் பக்கம்**

# ஆழ்ந்த புலமை கொண்ட விபுலானந்த அடிகள்



பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

நான் பல்கலைக்கழகத்தில் சேருமுன்பே தமிழ்த்துறைக்கு தலைமையேற்றிருந்த விபுலானந்த அடிகள் தம் பதவியை உதறிவிட்டு வெளியேறிவிட்டார். ஆனால், பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு முன்பே அடிகளாரிடம் என் தந்தையாருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் இருந்து வந்தது.

இலங்கையில்பிறந்த இப்பெருமகனார் துறவுபூண்டு இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்திருந்தார். அம்மடத்தின் வேண்டுகோளின்படி இமயமலையை அடுத்துள்ள 'அல்மோரா' என்ற பனிப்பிரதேசத்தில் மிக நீண்ட காலம் இருக்க நேரிட்டமையினால் உடல்நலம் பாதிக்கப்பட்டார். பிறகு தமிழகம் மீண்டு, சிலகாலம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். கருத்து வேறுபாடு காரணமாக அப்பதவியை உதறிவிட்டார்.

பல்கலைக்கழகத்தில் இருக்கும் போதுதான் இசைக் கல்லூரியோடு பெரிதும் தொடர்பு கொண்டு பழந்தமிழருடைய யாழ் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கினார். என்னுடைய கல்லூரித் தோழரும், நடமாடும் அகத்தியர் என்று சிறப்புப் பெற்றவருமாகிய அமரர் க. வெள்ளைவாரணனார் இந்த ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவியாகவிருந்தார். வேலையை விட்ட பிறகு திருக்கொள்ளம்பூதூர் சென்று நீண்டகாலம் தங்கியிருந்து 'யாழ்நூல்' என்ற பெயரில் தம் அரிய ஆராய்ச்சிநூலை வெளியிட்டார். அற்றைநாள் தமிழறிஞர்கட்கு இல்லாத ஒரு பெருஞ்சிறப்பு அடிகளாரிடம் இருந்தது. இயற்பியலில் பட்டம் பெற்ற அவர் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் பெரும்புலமை படைத்தவராக இருந்தார். தமிழிற் காணப்படும் சிறப்புக்களுக்கு ஆங்கிலம், வடமொழி என்பவற்றிலிருந்து சிறந்த ஒப்புமைப்பகுதிகள் எடுத்துக்காட்டக்கூடியவர்.

1939ஆம் ஆண்டில் செட்டிநாட்டிலுள்ள ஆவினிப்பட்டி என்ற ஊரில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. அக்கூட்டத்திற்கு அடிகளார் தலைமை தாங்கினார். நான் எடுத்துக்கொண்ட தலைப்பு 'கவிச்சக்கரவர்த்தி' என்பதாகும். ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழியிலும் வல்லுநராகிய மற்றொரு பேராசிரியரும் இதே தலைப்பைத் தந்திருந்தார். சுவாமிகள் என்னைச் சந்தித்து 'அப்பேச்சாளர் கம்பனில் அதிக நாட்டம் கொண்டவர், நீயும் கம்பனையே பேசினால் நன்றாக இராது, வேறொரு புலவனை எடுத்துக்கொண்டு பேசுக' என்று கூறினார். அதற்கு உடன்பட்ட நான் பாரதியைப் பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டேன். அப்பொழுது இலக்கிய உலகில் பாரதி அதிகம் செல்வாக்குப் பெற்றிராத காலம். சுவாமிகளுக்கே பாரதி பாடல்களில் பயிற்சி இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. முதலில் பேசிய அத் தமிழ்ப்புலவர் நல்ல தமிழறிவு, கம்பனில் பயிற்சி என்பவை நிரம்பப் பெற்றவராயினும் அவரிடம் ஒரு குறையிருந்தது. நேரங்கெட்ட நேரத்தில் குடித்துவிடுவார். அன்று கூட்டம் தொடங்குமுன் நிறைய மது அருந்திவிட்டார். மேடையில் வந்து நின்றவர் தனிப்பாடலிலுள்ள 'ஆரார் தலை வணங்கார்?' என்ற பாடலைப் பற்றிப் பேச முற்பட்டார். முடி திருத்துபவரைக் கம்பன் புகழ்ந்து பாடியதாகத் தனிப்பாடல் திரட்டில் இப்பாடல் அமைந்துள்ளது. பதிப்பித்த புண்ணியவாளன் கொட்டை எழுத்தில் 'கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடியது' என்ற தலைப்பையும் தந்துவிட்டார். பேசத்தொடங்கிய புலவர் இப்பாடலை விரிவாகப் பாடி அதற்கு விளக்கமும் கூறினார். எத்தகைய பெரியவரும் முடிதிருத்துபவரின் முன், தலை வணங்கியே தீரவேண்டும் என்ற கருத்துடைய அப்பாடலுக்கு நடிப்புத் திறமையுடன் விளக்கம் கூறிவிட்டு "இப்படி ஒரு பாட்டைப் பாட யாரால் முடியும்? கவிச்சக்கரவர்த்தி கம்பனால் மட்டுமே முடியும்" என்று கூறிமுடித்தார். தலைமை ஏற்றிருந்த அடிகளார் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ஆனால், ஒன்றும் கூறவில்லை. அவர் பேசிமுடித்ததும் அக்கால மரபுப்படி அவர் பேச்சுக்கு முடிவுரை ஒன்றும் கூறாமல், என்னைப் பேசுமாறு அழைத்தார்.

கூட்டம் தொடர்ந்தது. இரண்டாம் பேச்சாளனாகிய நான் 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பட்டத்திற்குப் பாரதி முழுத்தகுதி வாய்ந்தவன் என்பதை நிறுவும் வகையில் விரிவாகப் பேசினேன். ஒரு கவிச்சக்கரவர்த்தி என்பவன் பழைய சட்ட திட்டங்களைக் கட்டிக்கொண்டு வாழவேண்டும் என்ற தேவையில்லை. சக்கரவர்த்தி ஆதலால் அவர் புதிய சட்டங்களை நிறுவலாம் என்ற அடிப்படையை விவரித்து விட்டுப் பாரதி இதனை எவ்வாறு செய்தான் என்று கூறினேன். அதுவரை, உயிர்கள்தான் தலைவிகள், இறைவன் ஒருவனே தலைவன் என்றிருந்த பழைய மரபை உதறித்தள்ளிவிட்டு 'கண்ணம்மா என் காதலி', 'கண்ணன் என் சேவகன்' என்ற முறையில் புதிய பாடல்களை அமைத்ததை எடுத்துக் கூறினேன். அன்றுவரை நிலவியிருந்த ஆண்டான் அடிமைத்திறத்தை உதறிவிட்டு 'விநாயகர் அறுபத்தாறு பாடியுள்ளான் பாரதி' என்றும் கூறினேன்.

நான் பேசி முடித்ததும் அடிகளார், ஷெல்லி முதலிய மேனாட்டுக் கவிஞர்களுடன் பாரதியை ஒப்பிட்டு முடிவுரை கூறத் தொடங்கினார். 'பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டும் பராசக்தி' என்பது பாரதியின் வாக்கு. இதை எடுத்துக்காட்டிய அடிகளார், "இக்கருத்துப் புதுமையானது; இக்கருத்தைக் கவிஞன் எங்கிருந்து பெற்றான் தெரியுமா? அவன் போற்றிப் படித்த ஷெல்லியின் வானம்பாடி (Skylark) என்ற பாடலில் வரும் ஓரடியின் தமிழாக்கம்தான் இது" என்று கூறிவிட்டு, 'Like a poet hidden in the light of thought, singing hymns unbidden till the world is wrought' என்ற அடிகளை அடிகளார் எடுத்துக்காட்டினார்.

தமிழ்ப்புலவர்கள் பலரும் பாரதியென்ற பெயரையே அறியாத காலத்தில் இவ்வளவு ஆழமாகப் பாரதியைப் பயின்று ஒன்றேகால் மணிநேரம் முடிவுரை என்ற பெயரில் சொற்பெருக்காற்றினார் என்றால், அது விபுலானந்த அடிகளார் ஒருவரால் மட்டுமே முடியும். விழா முடிந்து, தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்ற பிறகு ஊர்க்கார நண்பரொருவர் "சுவாமி முதற்பேச்சுக்கு முடிவுரை சொல்லாமலே விட்டுவிட்டீர்களே!" ஏன்?" என்று கேட்டார். உடன் பத்துப்பேர் இருந்தனர். அந்த இலங்கைச் சிங்கம் எதுபற்றியும் கவலைப்படாமல் "ஓ, யாம் துறவியாக இருத்தலின்றோ அந்தக் கயவனை நையப் புடைக்காமல் விட்டுவிட்டோம்" என்று கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

(நன்றி : நான் கண்ட பெரியார்கள்)

# சமய வாழ்வின் பல்வேறு இலக்குகளை அடைவதற்கு உதவும் யோகநெறி


செல்வரத்தினம் பத்மநாதன்
ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக்கழக நூலகம்

ஞானமும் கலையும் அறிவியலும் மிக உயர்ந்த உழைப்பின் பயன்களேயாகும். அவை வெளிப்படுத்தும் உண்மைகள் ஒழுங்குபட்ட செயல்முறைகளின் விளைவாகும். இவ்வழிப்பட்டதே சமய வாழ்வுமாகும். அது தனிமனிதனின் எண்ணம், சொல், செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதை அடிப்படையாகக் கொண்டது. இவ் ஒழுங்குபட்ட செயல்முறைகளினூடகவே ஆன்மிக உயர்நிலை எய்தப்படுகின்றது. அவ் உயர்நிலை பற்றிய இலக்கியங்களை இந்துசமய வரலாற்றில் மிக ஆழமாகவும் பரந்துபட்டும் காணலாம்.

இந்துசமயம் கூறும் ஆன்மிக நெறிகளில் யோகம், கர்மம், ஞானம், பக்தி பற்றிய சிந்தனைகள் இந்துசமய இலக்கியங்களில் படிப்படியாக வளர்ந்து தெளிவு பெறுவதை காணலாம். செயல் கர்மமாகவும் அறிவு ஞானமாகவும், உணர்வு அன்புமயப்பட்டு பக்தியாகவும் நின்று ஆன்மிக வாழ்வை வளப்படுத்தின. இவற்றை ஒழுங்கமைத்து ஆன்மிக உயர்நிலைக்கு வழியமைக்கும் செயலை யோகநெறி ஆற்றியது. யோகநெறி சமயவாழ்வின் பல்வேறு இலக்குகளையும் அடைவதற்கு கைக்கொண்ட நெறிமுறையாகும். கர்மமும், ஞானமும், பக்தியும் சுட்டும் உயர்நிலை தனிமனிதனின் அகத்தில் நடைபெற்று முற்றுப்பெறுவதாகும். உடலையும், மனத்தையும், அறிவையும் ஒழுங்குபடுத்தும் செயல் முறைகளையே யோகநெறி கொண்டுள்ளது. அது செயலாகிய கர்மத்தினூடும், உணர்வாகிய பக்தியினூடும் அறிவாகிய ஞானத்தினூடும் வெளிப்பட்டது. மறுவளமாக கர்மத்தையும், பக்தியையும், ஞானத்தையும், ஒழுங்குபடுத்தவும் சரிப்படுத்தவும் யோகநெறியானது ஆரம்ப காலத்திலிருந்து ஆன்மிக வாழ்வின் அடிப்படைகளை அமைத்தளித்ததை வரலாறு முழுவதும் காணலாம்.

யோகம் என்பது சித்தத்தை நிறுத்தக் கற்பிக்கும் விஞ்ஞானமாகும். மனம் மாறாதவகை கற்பிக்கும் விஞ்ஞானமாகும். மேலும் மனிதன் முதலில் தன்னுடலையும் உள்ளத்தையும் இறுதியில் இயற்கை முழுவதையும் தன்வயப்படுத்துவதற்கான வழியை வகுக்கும் விஞ்ஞானமுமாகும் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

யோகம் என்ற சொல் உபாயம், உயர்ச்சி என ஒரு படிமுறையில் வளர்ந்து செல்லும் செயலைக் குறிக்கும் பொருளிலும், சேர்தல், கூடுதல், கலத்தல், புணர்தல் என்னும் பொருளில் ஒன்றாதல் என்ற கருத்திலும் கையாளப்படுகின்றது. தவம், தியானம், நீள நினைத்தல், நிட்டை கூடுதல் என்னும் சொற்களும் யோகத்தைக் குறிப்பதாகும்.



வரலாற்று நோக்கில் 'யோக தத்துவம் உண்டானது இந்து நதிப் பள்ளத்தாக்கு நாகரீகத்தில் தான்' என்பது பணிக்கர் என்னும் ஆய்வாளரின் கருத்து. சிந்துவெளி மக்கள் யோகப்பயிற்சியையும் அறிந்திருந்தனர். அங்கு கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் ஆன்மீகஞானம் கைவரப் பெற்ற ஒரு யோகியின் முத்திரை கவனத்திற்குரியது. அது மூன்று முகங்களைக் கொண்ட மனித உரு ஒன்று கால்களை மடக்கி இரு குதிக்கால்களும் ஒன்று சேர்ந்து கால்பெருவிரல் கீழ்நோக்கி உள்ளவாறு ஆசனமிட்டு யோகத்தில் அமர்ந்திருப்பது போலக் காணப்படுகிறது. இவ்வுரு அமர்ந்துள்ள யோகநிலை 'மூலபந்த யோகம்' என அடையாளம் காணப்படுகிறது. யோகீஸ்வரரான சிவபெருமானையே இவ்வுரு குறிப்பிடுகிறது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சேர் யோன் மாசல் குறிப்பிடுமிடத்து, சரித்திர நாயகனான சிவனுடன் இணைத்துக் கூறப்படும் பூர்வீக ஆரியக் கடவுளின் இரண்டாவது தோற்றம் யாதெனில் சிவன் பிரத்தியேகமான யோகியை போன்று காட்சி தருவதாகும். இவ்வகையில் ஆதிச்சமயமான சைவத்தின் தோற்றத்திற்கும் நிலைபேற்றிற்கும் காரணமாக யோகநெறி கைக்கொள்ளப்பட்டது.

சிந்துவெளிப் பள்ளத்தாக்கு நாகரீகத்தின் பின் வேதங்கள் சுட்டும் சமயவாழ்வில் ஆரணியகங்களும், உபநிடதங்களும் யோகநெறி நின்றோர் வழிவந்தவையே. மெய்யியல் ஆய்வின் புதிய விளக்கங்களான இவ்வுபநிடதங்கள் தியானமென்னும் நீள நினைத்தல் மனத்திற்கும் உயிருக்கும் பயிற்சியளிப்பதையே முதன்மையாக விளக்கமாகக் கொண்ட துறவிகளிடமிருந்தே அவை தோன்றின. இவ்வாறு தோற்றம் பெற்ற உபநிடதங்கள் பிற்கால தத்துவ உலகிற்கு அடிப்படையாயிற்று. அவற்றில் யோக தரிசனமும் ஒன்றாகும். அறுவகைத் தரிசனங்களில் சாங்கியமும் யோகமும் சாங்கியயோகம் என இணைத்துப்

பார்க்கப்படுகிறது. இதற்கு சாங்கியம் தத்துவ விளக்கத்தைத் தர யோகம் அதைக் கைக்கொள்ளும் செயல்முறை வழிகளைக் கூறுவதே காரணமாகும்.

சுவேதாஸ்வர உபநிடதம் சாங்கிய யோகம் பற்றி விரிவாகக் கூறுகின்றது. முண்டக உபநிடதத்தின் இரண்டாம் பகுதி யோகம் பற்றிக் கூறுகிறது.

பகவத்கீதை ஒரு யோக நூலாகும். அது கர்மம், பக்தி, ஞான வழிப்பட்ட எல்லா ஆன்மீகச் செயற்பாடுகளையும் யோகம் எனக் குறிப்பிடுகிறது. யோக வாசிஷ்டத்தில் உத்தாலகர், சாகபுகண்டர் கதைகளில் தியான முறை பற்றிக் கூறப்படுகிறது. அத்துடன் பலியின் கதை நிர்விகற்ப சமாதிநிலை அடையும் வழிபற்றிக் கூறுகிறது. பதஞ்சலி கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரையில் எழுதிய யோக சூத்திரம் என்னும் நூல் பழஞ்சிறப்பு மிக்க யோக முறைகளுக்கெல்லாம் ஆதார நூலாகும். இந்நூலால் அறியப்படும் அட்டாங்க யோகம் என்னும் ராஜயோகம் ஒழுங்கான செயல்முறைகளை முன்வைக்கின்றது. அதில் கூறப்பட்டுள்ள எட்டு உறுப்புக்களில் முதலிரண்டும் ஒழுக்க நெறிகளையும், மூன்றாம் நான்காம் நிலைகள் உடலை வசப்படுத்தவும், அடுத்துள்ள மூன்றும் மனத்தை ஒருநிலைப்படுத்தி படிப்படியாகக் குண்டலினி சக்தியை எழுப்பி உயர்ந்த அனுபவ நிலையாகிய எட்டாவது சமாதி நிலையை அடைவதையும் குறிக்கும். ராஜயோகம் பற்றி சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுமிடத்து 'வணக்கம், வழிபாடு, கருமம், கிரியை, அற்புதம் இவற்றின் விளக்கமாக எல்லாச் சமயங்களுக்கும் ஆதாரமாகிய முறைகளை ராஜயோகம் கூறும்' என்கிறார்.

சிவாகமங்கள் யோகம் பற்றிச் சிறப்பாகக் கூறுகின்றன. சாக்த தந்திரங்கள் யோக நெறியை 'குண்டலினி யோகம்' என விளக்கும். யோக நெறியில் குண்டலினி சக்தியை எழுப்புதல் என்னும் செயல்முறை விளைவு முன்வைக்கப்படுகிறது. 'உரையுணர்வு கடந்த காட்சிக்கும் ஆன்மாவை அடைவதற்கும் தெய்வீக ஞானத்தைப் பெறுவதற்கும் ஒரே வழியுண்டு. அது குண்டலினியை எழுப்புவதாகும்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

தமிழ் இலக்கியங்களில் அறிவர் என்றும் அறவோர் என்றும் இருவகைச் சான்றோர் குறிக்கப்படுகின்றனர். அவர்களில் அறவோர் தவம்புரிந்தனர். அவர்கள் வழியில் சித்தர்கள் யோக நெறிப்பட்டவர்கள். சித்தர்களில் திருமூலர் தந்த திருமந்திரம் யோகம் பற்றி விரிவாகப் பேசுகிறது. அறவாழ்வு பற்றிக் கூறும் சங்கமருவிய கால நூல்கள் தவம் பற்றி எடுத்துரைக்கின்றன.

அவற்றில் திருக்குறள்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
மீண்டு முயலப் படும்." என்கிறது.

யோக நெறிபற்றிக்கூறும் இலக்கியங்களை சமண, பௌத்த சமயங்களிலும் காணலாம்.

உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் விளங்கிக்கொள்வதற்கும், அவற்றை உணர்வதற்கும் அடைவதற்கும் யோகச்செயல்முறைகள் உதவுவதுடன், அட்டமாசித்திகள் போன்ற பல்வேறு சித்திகளையும் பெற்றுக்கொள்வதற்கும் யோகமுறைகள் வழிவகுக்கும் என்பது யோகநெறி நின்றோர் வாக்கு. ஆனபோதும் இலக்கியங்களின் குறிப்புக்கள் செயல்முறைகளைக் கொண்டனவாகவும் பூடகமாக உரைக்கப்படுவனவாகவும் உள்ளன. உதாரணமாக முன்னர் குறிப்பிட்டது போன்று தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரம் பல்வேறு யோகச் செயல்முறைளையும் கூறுகின்றது. ஆனபோதும் அதை விளங்கிக்கொண்டு நடைமுறையில் கைக்கொள்ளக்கூடிய வழிமுறைகள் தெளிவாக இல்லை. காரணம் அந்நெறி முறைகள் குருசீட பாரம்பரியத்தின் வழிவந்தனவாகும். அந்நூலில் குறிக்கப்படும் சொற்களுக்கான கருத்துக்கள் மறைபொருளாக இருப்பதுமாகும். அச்செயல்முறைகள் இலக்கியங்களுக்கு மேல் குருவின் மூலம் அடையவும், விளங்கிக் கொள்ளவும் கூடியதாக இருப்பதே அதற்கான காரணமாகும். அதனால் இன்று அப்பாரம்பரியங்களில் சிலவோ பலவோ அழிந்தவிட்டனவா என்ற ஐயங்களும் உண்டு. உதாரணமாக வேதாத்திரி சுவாமிகளின் வாழும் கலைப் பயிற்சியின் போது அளிக்கப்படும் விந்தை கட்டுப்படுத்தும் செயல்முறை குருசீட பாரம்பரியத்தின் வழி தென்னகத்திலிருந்து சீனா சென்று, பின் சீனாவிலிருந்து ஐரோப்பாவுக்கும், பின் ஐரோப்பாவிலுள்ள ஒரு குருவிடமிருந்து தாம் அச்செய்முறையை கற்று தற்போது திரும்பவும் தென்னகத்தை அடைந்ததாக வரலாறு. இவ்வகையில் யோகநெறி, யோகிகளின் வழிவந்த ஒரு செயல்முறை வடிவமாகும்.

யோகநெறியைப் பெறுவதும் கடைப்பிடிப்பதும் 'அவனருளாலே அவன் தாள் வணங்கு' என்ற கூற்றுக்கு ஒப்ப தகுதியானவர்களுக்கே அப்பேறு கிடைக்கிறது என்ற மரபின் மூலம் ஏனையவர்களுக்கு மறுக்கப்படுகின்றதா? என்ற கேள்வி ஒன்று உண்டு. இன்று உலகில் சமய வாழ்வில் நாட்டமுள்ள ஒவ்வொரு சராசரி மனிதனுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் சமய நிறுவனங்கள் தம் கைகளை அகலவிரித்துள்ளன. இன்றைய வியாபார உலகில் மாத்திரமன்றி என்றுமே சமயநெறி நின்ற யோகிகளும் ஞானிகளும் அருகியே இருந்துள்ளார்கள். ஆனபோதும் இன்றைய வாழ்க்கை வசதிகள் சமயநெறிகளின் வழி நிற்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் உகந்தகாலமாகும். காரணம் பல்வேறு உலகியல் தேவைகளிலும் அடிப்பட்டு அல்லலுறும் மக்கள் அமைதியை விரும்புகின்றனர். எக்காலத்தையும் விட இக்காலத்தில் தனிமனிதனின் அமைதித்தேவை அதிகரித்துள்ளது. அமைதி தேடும் ஒவ்வொரு உள்ளத்திற்கும் சாந்தியளிப்பதாக யோக நெறியின் ஆரம்ப செயல்முறைகள் உள்ளன. அதனால் அவை இன்று பொதுமைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் வளர்ச்சியில் யோகநெறியில் பல்வேறு கூறுகளையும் தனிமனிதன் ஒவ்வொருவனும் பெறும்வகையிலான வழிமுறைகளை சமய நிறுவனங்கள் இன்று வகுத்து வருகின்றன. சமய எல்லைகள் கடந்து யோக நெறியானது உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்ற குரல் இன்று எழுந்துள்ளது.

# ஆன்மிகம் - பொருள் விளக்கம்

*கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்*

மனிதவாழ்வின் பிரதான நோக்கம், இறையுணர்வு பெற்று, அறநெறியில் வாழ்க்கையை நடாத்தித் தூய்மை பெற்று, பேரின்ப நிலையை எய்துவதாகும். இதனையே, ஆன்மீக வாழ்வு எனக் குறிப்பிடப்படுகிறது. மனித நேயம், ஆன்ம நேயம் ஆகிய இரண்டும் ஆன்மீக வாழ்வின் இரு கண்கள் ஆக விளங்குகின்றன. எல்லா மனிதர்களிடத்திலும் உயர்வு, தாழ்வு பாராது; வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதம் காட்டாது; தமர், பிறர் என்னும் வேற்றுமையுணர்வு இன்றி; எல்லா மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதும், கருணை காட்டுவதுமே மனித நேயம் ஆகும். எல்லா உயிர்களிடத்தும் சமமாக அன்பு செலுத்துவதும் கருணை காட்டுவதுமே ஆன்ம நேயம் எனப்படுகிறது.

நாம் வாழுகின்ற சமுதாயம், நன்றாக, அமைதியாக, மகிழ்ச்சியாக, நிறைவுபெற்று இருந்தால்தான்; நாம் ஒவ்வொருவரும் அமைதியுடன் நன்றாக வாழமுடியும். வேற்றுமையில் ஒற்றுமை கண்டு; சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்பனவற்றின் நலம் பேணிக்காத்து, ஓம்பி; "என் கடன் பணி செய்து கிடப்பதே", என்னும் உயர் தத்துவத்தைச் செயற்பாடு ஆக்கி; தனக்கும் பிறருக்கும் எக்காலத்திலும் துன்பம் விளைவிக்காத; அதேவேளை நன்மை பயக்கக்கூடிய, எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மையான ஒழுக்க வாழ்வே ஆன்மீக வாழ்வு ஆகும். அறநெறி ஒழுக்க வாழ்வே ஆன்மீக வாழ்வு. ஆன்மீக வாழ்வுக்கு ஆதாரம் இறையுணர்வு, இறை நம்பிக்கை என்பவற்றுடன் அறநெறியில் ஒழுகுதலும் ஆகும்.

பிற உயிர்களின் துன்பம் நீக்கும் தூயநெறியே அன்பு நெறி; அதுவே அறநெறியும் ஆகும். அன்பும் அறனும் மனித வாழ்க்கையின் பண்பும் பயனும் என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. "அன்பின் வழியது உயிர்நிலை", என்பது வள்ளுவர் வாக்கு. அன்பு நலம்பேணி வாழ மறுப்பவர்கள் சுயநலமுடையோர். அன்பு நலம் பேணிக்காத்து, பிறர்க்கு உதவி, அவர்களின் துன்பங்களைத் துடைத்து, அவர்களை மகிழ்வித்து வாழ்பவர்களே பொதுநலம் பேணுபவர்கள். எல்லா உயிரும் ஒன்றே; அவற்றிற்கிடையே உயர்வு – தாழ்வு வேறுபாடு இல்லை என்று அறிந்து, ஆற்றுகின்ற பணிகள் யாவும் அன்பின் செயலாகும்; அறமும் ஆகும்.

ஆன்மீக நலம் காத்து ஓம்பி வருவதற்கு, தாவர உணவு உண்பதன் முக்கியத்துவம் பற்றி, வேதாத்திரி மகரிஷி, பின்வருமாறு கூறுகின்றார்:

"மாமிச உணவு அதிகமான உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியது. நோய்களையும் உண்டுபண்ணக்கூடியது. அத்துடன் மாமிச உணவை மனிதன் நாடும்பொழுது, 1. உயிர்க்கொலை, 2. அதன் உடலை உணவுக்காகத் திருடுதல், 3. அவ்வுயிரின் வாழும் உரிமையைப் பறித்தல் என்ற மூன்று குற்றங்களையும் செய்து விடுகிறான். இந்தக் குற்றங்கள்தான் சமுதாயத்தில் மக்களிடையே பரவும்போது, எல்லாவகையான துன்பங்களுக்கும் காரணமாகின்றன. இந்த மூன்று குற்றங்களே உலகில் உள்ள அனைத்துக் குற்றங்களுக்கும் அடிப்படை. அங்கு அன்பும் கருணையும் எவ்வாறு மலரும்.?"

அன்பும் கருணையும் மலராத பட்சத்தில், அங்கு ஆன்மீகமும் வற்றி வரண்டுவிடும். அந்தவகையில் ஆன்மீக வாழ்வு சித்தி பெறுவதற்று மாமிச உணவு ஏற்றதல்ல என்பது புலப்படுகிறத. தாவர உணவையே உண்டு, ஆன்மீக வாழ்வு வாழவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

அவ்வாறே மது அருந்துதல், போதைப்பொருள் பாவனை, புகைத்தல் என்பனவும் ஆன்மீக வாழ்வுக்கு ஒவ்வாதன. இப்பழக்கங்களும் குற்றச் செயல்களைப் புரியத்தூண்டுவன.

பேராசை, கோபம், கடும் பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு–தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு தீய குணங்களை, தங்கள் மனங்களில் வளர்த்து வருகின்ற மனிதர்களிடம் ஆன்மிகம் இடம்பெற்றிருக்காது. தீய குணங்கள் ஆறும் மனித மனங்களிலுள்ள களங்கங்கள்; அழுக்குகள்; தூய்மை மிக்க ஆன்மீகம், அழுக்குகள் படிந்த மனித மனங்களை விட்டு விலகியிருப்பதே நீதி. "துட்டனைக் கண்டால் தூர விலகு;" என்பது முதுமொழி.

ஆறு தீய குணங்களையும் மனிதர்கள் சீரமைப்புச் செய்துவரும்போது, களங்களின் அழுத்தம் படிப்படியாகக் குறைகின்றது. மேலே கூறப்பட்டுள்ள பேராசை முதலான ஆறு தீய குணங்களும் முறையே திருப்தி நிறைந்த மனம், பொறுமை, ஈகை, கற்பு நெறி, சமத்துவ உணர்வு, மன்னிப்பு எனும் நற்குணங்கள், நற்பண்புகள், விழுமியங்களாக மிளிர்கின்றன.

தீய எண்ணங்கள் தவிர்க்கப்படவேண்டும். அப்பொழுதுதான் ஆன்மீகம் முளைகொண்டு வளர்ந்து செழிக்கும். "தீயவை தீய பயத்தலால், தீயவை தீயினும் அஞ்சப்படும்." என்பது வள்ளுவர் அமுதமொழி. இதனை உணர்ந்து, மனிதர்களாகிய நாம், தீவிர முயற்சி செய்து மனதில் அவ்வப்போது எழும் தீய எண்ணங்களை, எமது அறிவின் உதவியுடன் அவற்றின் நலம் தீங்குகளை ஆராய்ந்து, முளையிலேயே வேருடன் கிள்ளி எறிந்து விடவேண்டு.ம. அதுவே புத்திசாலித்தனம். எண்ணங்களே செயலாக உருவெடுக்கின்றன. இதற்கு வழி, நல்ல எண்ணங்களைத் தொடர்ந்து மனதில் உருவாக்கிக் கொண்டு இருப்பதுதான். இங்குதான் ஆன்மீகம் உதயமாகின்றது.

எண்ணமே வாழ்வு. நல்ல எண்ணங்கள் ஆன்மீக வாழ்வுக்கு வித்துக்கள் ஆகும். தொடர்ந்து, நல்ல எண்ணங்களையே வாழிவில் எண்ணிக் கொண்டு வாழ்ந்தால், அதுவே, ஆன்மிக வாழ்வுக்கு அடிப்படையாகும். அறவாழ்வுக்கு ஆதாரமாகும். தனிமனித, குடும்ப, சமூக மற்றும் பொது வாழ்க்கை, ஆன்மிகம் செறிந்ததாக அமையும்போது தமக்கும் பிறருக்கும் சமூகத்திற்கும் தாம் ஈடுபாடு கொண்டுள்ள பொதுநலப்பணிகளுக்கும் உயர்வு ஏற்படுகின்றது. இன்று மனித சமூகத்தில் பரவலாக இடம்பெற்று வருகின்ற ஊழல். இலஞ்சம், மோசடிகள். பகற்கொள்ளை, கறப்புப் பணம் மீது மோகம், பாலியல் வல்லுறவுகள், கடத்தல்கள், கொலைகள், திருட்டுக்கள்,

பழிவாங்கல்கள், கறுப்புச்சந்தை, வியாபாரம் மற்றும் வாழ்க்கை ஒழுங்கீனங்கள், போதைப்பொருள் கடத்தல் என்பன, மனிதர்களில் ஏற்பட்டு வருகின்ற தீய எண்ணங்களின் வெளிப்பாடுகளும் செயற்பாடுகளும், அவற்றின் பயனாக ஏற்பட்ட ஆன்மிக வறுமையுமே, என்பதைக் காலங்கடந்த நிலையிலேனும் மனித குலம் உணர்ந்து, தவறுகளைத் திருத்தி சீராக்கம் செய்து; ஆன்மிகத்தை மீண்டும் மனித வாழ்வில் மலர்ச்சி பெறச் செய்ய முயற்சி எடுக்குமேயானால், மனித குல மீட்சி, உயர்வு உறுதியாகிவிடும். தாமதித்தால் தவிக்க நேரிடும்.; அழிவும் உறுதியாகிவிடும். ஆன்மீகம் ஒன்றினாலேயே, தாழ்ச்சியடைந்துள்ள மனித சமுதாயம் மீளவும் மீட்சி பெற்று தரத்தில் உயர்ச்சி பெற முடியும் என்பது உண்மையில் உண்மை. அறிவில் தெளிவுடையோர், அறிவீனர்களுக்கு அஞ்சி, ஒதுங்கியிருக்காமல், முன் வந்து ஆன்மீகத்தை, அறத்தை; அன்பு, கருணை என்பவற்றை; நீதியை, சத்தியத்தை, சாந்தியை உலகில் நிலைபெறச் செய்ய வேண்டியது காலத்தின் தேவையும், கட்டாயமுமாகும்.

"தீங்கினர் தம் கண்ணிற்குத் தெரியாத தூரத்தில் நீங்குவதே நல்ல நெறி", என்னும் நிலைப்பாடு, அது கூறப்பட்ட காலத்திற்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆன்மிகம் கோலோச்சிய காலம் அது. பன்றியோடு சேர்ந்த பசுக்கன்றும் அழுக்குகளைத் தேடி நாடும் என்னும் பயப்பாடு இருந்த காலம். தீயவர்களுடன் சேர்ந்தால் நல்லவர்களும் கெட்டவர்களாகி விடுவார்கள் என்ற அச்சத்தினால் அவ்வாறு பெரியோர் சொல்லி வைத்தனர். நெற்பயிர்களுக்கிடையே வளருகின்ற புற்கள், பூண்டுகளை, வளரவிட்டால், நெற்பயிர்களை அழித்து நாசம் செய்துவிடும். அதனால், அக்களைகளை முளையிலே கிள்ளி எறிந்து விடும் வழக்கம் இருந்து வருகின்றது. களைகளை நெற்பயிர்களாக உருமாற்ற முடியாது. ஆகையினால் களைகளைப் பிடுங்கி அகற்றியோ, களைநாசினிகளைப் பாய்ச்சி அழித்தோ, நெற்பயிர்களைப் பாதுகாப்பது தர்மம். ஆனால், தீய குணங்களையுடைய மனிதர்களை, நற்குணங்கள் உடைய மனிதர்களாக மாற்ற முடியும். ஆகையால், தீயவர்களைத் தனிமைப்படுத்தி ஒதுக்கிவிடாமல், சாம, பேத, தான, தண்டம் என்னும் முறைகளுள் பொருமானதைப் பயன்படுத்தி அவர்களைத் திருத்தி நல்ல மனிதர்களாக, ஆன்மிகம் செறிந்த வாழ்க்கையை வாழ்பவர்களாக, உயர் பண்புகளையுடைய சான்றோர் சமூகத்துடன் பொருந்திவாழ்பவர்களாக உருவாக்கிவிடுவது, சமூகப்பொறுப்புடைய மனிதர்களின் கடமையாகும். அது மனித தர்மமாகும்.

தீய குணங்களையுடைய மனிதர்களை அழிப்பது, ஆன்மீகம் ஆகாது, தீய குணங்களை ஒழித்து, அவற்றால் பீடிக்கப்பட்ட மனிதர்களைத் திருத்தி, நல்லவர்கள் ஆக்குவதுதான், ஆன்மீகத்துக்கு உடன்பாடானது. கந்தபுராண கலாசாரம் இதனைத்தான் ஆதரிக்கின்றது. முருகப்பெருமான் போர் நடத்தி, சூரபத்மனிடம் இருந்த ஆணவத்தை; அதன் குணங்களான "நான்" எனும் அகந்தையையும், "எனது" எனும் மமதையும், அழித்து, சூரபத்மனை ஆட்கொண்டார். சூரபத்மனைக் கொல்லவில்லை. அவனைச் சேவலும் மயிலும் ஆக உருமாற்றிச், சேவலைக் கொடியில் அமர்த்தினார்; மயிலைத் தமது வாகனம் ஆக்கினார். அந்த வகையில் சூரபத்மன் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். முருகனுடன் வாழுகின்ற பாக்கியத்தையும் பெற்றான். இதுவே கந்தபுராண கலாசாரம் காட்டும் ஆன்மீக கலாசாரம்.

உயிரினங்கள் அனைத்திலும், மனித இனமே ஆன்மீக வளம் கொண்டது. மனிதர்கள் அவ்வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது. அவர்களின் கடமையும் உரிமையும் ஆகும். தம் உரிமையைக் கோரிப் பயன்கொள்ள மறுப்பதோ, மறப்பதோ, ஒரு வகையில் உரிமை மீறல் ஆகும்.

மனிதனின் ஆன்மீக ஒழுக்கப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுமுகமாக, பண்டைக்காலந்தொட்டுப்பல நீதி நூல்களும், அறநெறி சாந்ந்த விழுமியக் கருத்துக்கள் தொகுக்கப்பெற்ற நூல்களும்; ஆசாரம், ஒழுக்கம், ஆன்மீகம் என்பவற்றை விளக்கும் நூல்களும் புலமையாளர்களால் எழுதப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. மனிதர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும்; நல்ல வண்ணம் வாழ்வதற்கும்; ஆன்மீக வளத்தைப் பயனுள்ள வகையில், வாழ்க்கை வளமாக ஆக்கி பயன்கொள்ளும் முறையை அறிந்து கொள்வதற்கும், அவர்களுக்கு வழிகாட்டிகளாக இந்நூல்கள் விளங்குகின்றன. திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, ஆசாரக்கோவை மற்றும் சங்ககாலத்துப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்பன அவற்றுட் சில. புராண, இதிகாசங்கள், காவியங்கள், காப்பியங்கள் என்பன படிப்பினைகள் ஒழுக்க விழுமியங்கள், அறங்கள், ஆசார சீலங்கள் என்பனவற்றைக் கதைகள், எடுத்துக்காட்டுக்கள் மூலம் உணர்த்துவனவாக அமைகின்றன.

ஒருகாலத்தில் கல்வி கற்றல் என்பது இத்தகைய அறிவு, ஆன்மிக நூல்களைக் கற்றுத்தேர்ச்சி பெறுதலையே குறித்து நின்றது. "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக" என்கிறது திருக்குறள். கற்கத் தகுந்த; அறம், ஆன்மிகம் சார்ந்த; மனித ஆக்கத்திற்கு உதவக்கூடிய சிறந்த நூல்களைத் தெரிந்து ஐயந்திரிபறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்றபின் கற்றாங்கு ஒழுக வேண்டும் என்பது இக்குறட்பா தரும் பொருள்.

கற்றல், நிற்றல் இரண்டும் கல்வியின் இரு பக்கங்கள். அவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒரு பக்கம் பழுது அடைந்தாலும், நாணயம் முழுமையாக அதன் மதிப்பை இழந்து, செல்லாக்காசு என்ற அவமதிப்பையும் பெற்றுவிடுகிறது. அவ்வாறே, கற்றல், நிற்றல் என்பதில் நிற்றல் இடம்பெறாவிடினும், கற்றல் கசடறக் கற்கப்படாவிட்டாலும், கல்வி அதன் மதிப்பை இழந்து பயனற்றதாகி விடுகின்றது.

ஆன்மிகக் கல்வியாக, விழுமியக் கல்வியாக விளங்கிய தமிழ் மரபுக் கல்வி, மனிதனை, மனிதத்தன்மைகளுடைய மனிதனாக உருவாக்கியது. வையத்துள் வாழ்வாங்கு வாழவும்; பண்புடையோர், சான்றோர் ஆகத் துலங்கவும், தமிழ் மரபுக்கல்வி மனிதர்களை நெறிப்படுத்தியது. "பண்புடையார் பட்டுண்டு உலகு"; என்றும், "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று" என்றும், "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்றும், "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்று மகுட வாசகங்கள் எழுவதற்கும் மரபுத் தமிழ்க்கல்வியே ஊற்றுக்கண்ணாகவும் முதற்காரணமாகவும் விளங்கியது. "கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்" என்பது மரபுத்தமிழ்க் கல்வியின் அதியுயர் கல்வி இலக்காகவும், பண்பும் பயனுமாகவும் அமைந்தது. ஆன்மீக நலம் பேணிக் காத்து, ஓம்பப்பட்டது. மக்கள் வாழும் முறை அறிந்து, வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர். அமைதி நிலவியது. "வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவது தூய நற்கல்வியே" எனும் திருமூலர் வாக்கு, நடைமுறை முறைவாழ்க்கையில் நிரூபணமாயிற்று.


தற்காலத்தில், பொருள் ஈட்டுவதை முதன்மை இலக்காகக் கொண்டதே கல்வி எனும் கோட்பாடு, வலுப்பெறத்தொடங்கி, நடைமுறைக்கு வந்ததும்; அறம் சார்ந்த ஆன்மீகக்கல்வி வழங்கலில் பின்னடைவு ஏற்பட்டது. ஒரு தொழில்முறையைப் போதிப்பதற்கு, எடுத்துக் கொள்கின்ற முயற்சியாகக் கல்வி மாற்றப்பட்டுவிட்டது. நவீன கல்விமுறை, நல்ல பண்புகளை, ஒழுக்கவிழுமியங்களை, நல்ல உள்ளங்களை உருவாக்குகின்ற ஆன்மீகத்தை மாணவர்களுக்குத்

தரவேண்டும் என்பதில் சிரத்தை கொள்ளவில்லை. இந்நிலைமை பற்றி, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலர் ஊதான்ட் அவர்கள் கூறியதை, இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். "நம் கல்வி ஒரு மனிதனை ஒரு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ உருவாக்குகிறது. ஆனால் மனிதனை உண்மையான மனிதனாக உருவாக்குவதில்லை."

இன்றைய கல்வித்திட்டம் எழுத்தறிவு, தொழில் அறிவு என்பவற்றை மாணவர்களுக்கு ஊட்டுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. மனிதன் மனிதத்தன்மைகளையுடைய, மனிதப்பண்புள்ள, மனிதனாக; ஆன்மிகத்தை வளர்த்து உலகியலுடன் இணைத்து; உலகியல் வாழ்க்கையைச் சீரும் செம்மையும் நிறைந்த, அதேவேளை ஊழல்களைக் களைந்து தூய்மைப்படுத்தப்பட்ட அறநெறி வாழ்க்கையாக மலர்ச்சி பெற, உதவும் ஒழுக்கக்கல்வி, இன்றைய மாணவர்களுக்கு உடனடித் தேவையாக உள்ளது என்பதை உணர்ந்து விரைந்து செயற்படுவோமாக. ஆன்மிக நலம் காப்போம்; வாழ்வில் அமைதியும் இன்பமும் காண்போம்.

# மாமன்றத்தின் அஞ்சலி

## அமரர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள்



"ஈழத்துச்சிதம்பரம்" எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலில் ஆரம்பகாலம் தொடக்கம் பிரதம சிவாச்சாரியாராகவிருந்து கடந்த ஏப்ரல் மாதத்தில் தனது 99வது அகவையில் இறைபதம் எய்திய சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்களை அகில இலங்கை இந்து மாமன்றம் மிகுந்த கவலையுடன் நினைவு கூருகின்றது. இவர் தனது வாழ்நாள் முழுவதும் இறைபணியோடு ஆன்மீக மற்றும் சமயப்பணிகளையும் முன்னின்று மேற்கொண்ட பெருந்தகையாவார். ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் பெயர் பெற்று விளங்கினார்.

1916ஆம் ஆண்டு பிறந்த வைத்தீஸ்வரக்குருக்கள் 1940இல் தனது ஆசிரியப்பணியினை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் ஆரம்பித்தார். யாழ். திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தனது பயிற்சியை முடித்த சிவாச்சாரியார் அவர்கள் 1970இல் ஆசிரியர் தொழிலில் இருந்து ஓய்வுபெற்று ஆன்மீகப்பணிகளில் முழுநேரமாக ஈடுபட்டார். 1940இல் காரைநகர் சிவன் கோயிலில் மணிவாசகர் சபையை நிறுவி சமயத்திற்கு அரும்பணியாற்றினார். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் சமகாலத்தில் பாண்டித்தியம் பெற்ற சிவாச்சாரியார் பல சமய நூல்களையும் ஆக்கியுள்ளார். இவரது கல்விப்புலமைக்காக 1995ஆம் ஆண்டு கம்பன் கழகத்தால் "மூதறிஞர்" பட்டமும் 2001ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தால் "கலாநிதி" பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்து மாமன்றத்துடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிவந்த சிவாச்சாரியார் அவ்வப்போது மாமன்றத்திற்குத் தேவையான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்த பெருமகனாவார்.

அன்னாரின் இழப்பு சைவ உலகுக்கு ஈடுசெய்ய முடியாததாகும். சமய வளர்ச்சிக்கும் ஆன்மீகப் பணிகளுக்கும் தன்னை அர்ப்பணித்த இப் பெருந்தகை காரைநகர் சுந்தரேஸ்வரப் பெருமானின் பாதங்களில் நிரந்தர பேரின்பத்தை அடைய வேண்டி மாமன்றம் பிரார்த்திக்கின்றது.

## அமரர் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள்



இலங்கையின் மூத்த சிவாச்சாரியாரும், திருக்கணித பஞ்சாங்க ஸ்தாபகருமாகிய சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்களின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

இளமைக்காலத்திலேயே சைவ ஆகமங்களைக் கற்றுத்தேர்நததுடன் பஞ்சாங்கக் கணிப்பிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். இதன் பொருட்டு 1970 களிலிருந்து திருக்கணிதப் பஞ்சாங்கத்தை கணனிப் பொறிமுறையில் கணித்து வெளியிட்டு வருகின்றார். இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் சிவாகம நூல்கள் பலவற்றை ஆக்கி வெளியிட்டுள்ளார். அத்துடன் சமயக்கிரிகைகளின்போது உச்சரிக்கப்படும் மந்திரத்தின் பொருள், அதனால் அடியவர்களுக்கு ஏற்படும் பலாபலன்கள் இவற்றையெல்லாம் அடியார்களுக்கு விளக்கிக் கூறும் திறமை பெற்றிருந்தார். இவர் ஆகம முறைகளிலும், ஆன்மீக நெறிகளிலும் சோதிடக் கலையிலும் பெற்ற பாண்டித்தியத்தால் கலாபூஷணம், வேதாகம சோதிட பூஷணம், சிவாச்சாரிய திலகம் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய உறவினைப் பேணிவந்ததுடன் அவ்வப்போது மாமன்றத்திற்கு தேவையான அறிவுரைகளையும் ஆகமரீதியான தெளிவுரைகளையும் தந்துதவி வந்துள்ளார். பிற்காலத்தில் தனது புதல்வனாகிய சிவஸ்ரீ சி. ஜெகதீஸ்வர சர்மா மூலம் இப்பணிகளை மாமன்றத்திற்கு வழங்கும்படி செய்த பெருந்தகை. அன்னாரது மறைவு இந்து சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் புதல்வன் ஜெகதீஸ்வர சர்மா மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கு இந்து மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா இறையடி சேர எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளை வேண்டுகின்றது.



# Review of the compendium for Hindus

## on the 5th of April at Saraswathy Hall, Bambalapitiya by the chairman; Northern Development Foundation Mr. Kanaganayagam Kanag-Isvaran P.C.

**A Compendium to guide future generations on the righteous path of Hindu Worship and Practices**



Hinduism is an old faith, probably the oldest. Its strength lies in its inseparable alliance with philosophy. It is a faith that inquiries. Dogmas do not dominate.

The fabulous world of Hinduism is astonishingly wide in range; besides religion, philosophy, yoga, art, music, architecture, history and mythology, it also deals in fascinating details with scores of other Subjects.

A religious tradition that has produced in every age seers, saints and sages must have in it a vitality that defies the challenge of time and a precious legacy which humanity cannot ignore. Hinduism which has been constantly renewing itself in the lives and teachings of master-minds cannot become obsolete or out of date.

Nevertheless, today with the rapid advance of globalization the threat of extinction of our cultural and religious heritage might seem probable. Therefore, while modernization and industrialization remain urgent issues, it is at the same time essential to preserve and transmit our traditional cultural and religious values.

Our beliefs determine our thoughts and attitudes about life, which in turn direct our actions. By our actions we create our destiny. Beliefs about sacred matters-God, soul and cosmos - are essentials to one's approach to life.

Hindus believe in many diverse things, but these are the bedrock concepts on which we all concur. We have heard comments that our culture and religious traditions and practices are old fashioned; that they hold back progress and that we should forget about them and adopt new ways of life.

But those who so proclaim little realize that it is what we hold sacred, the beliefs we hold sacrosanct, the religious practices we engage in, which gives order and meaning to our social, political, economic, aesthetic and religious norms. It is the determining factor which distinguish our people from our neighbours.

The challenge therefore is to preserve our culture and religion by practicing them and make them part of our lives.

The book I am called upon to review, meets this challenge most admirably.

"A Compendium for Hindus" the publication of All Ceylon Hindu Congress under the able and professional guidance of my dear friend Kandiah Neelakandan, as its President, has presented in the English language. The quintessential wisdom of Hinduism in a volume constituting some 450 pages only distilled and packaged in a digestible form among others most abstruse philosophy of Saiva Siddhantam, attractively interspersed with the colour photographs of the popular Hindu deities of the Tamils.

The religious journey through the pages of this splendid volume, follows a well planned, carefully planned path – accentuating religious practices, in a manner so as not to overwhelm a modern English educated reader here and most importantly in the diasporic audience, and to Hindus and others not as familiar with the Tamil language, as the locals.

However, in order not to be lost in translation, the Tamil original is also presented.

The contents are divided, not into chapters – but "Modes" in keeping with its objective and purpose.

| | | |
|---|---|---|
| Mode 1 | - | Modes of Worship |
| Mode 2 | - | Way of Living |
| Mode 3 | - | Way of Functioning |
| Mode 4 | - | Ways of Fasting |
| Mode 5 | - | Ways of observing duties to the dead |
| Mode 6 | - | Incidents of taboo |
| Mode 7 | - | Nature of Philosophy |
| Mode 8 | - | Religious Songs "Thirumuraikal" |

The compilers and in particular Mrs. Thilaka Wijayarathnam and the publications deserve our wholehearted support and appreciation for the effort that has gone into this work. Generations of Hindus to come should be proud that their forefathers have left for them a Compendium to guide them on the righteous path of Hindu worship and practices.

I wish this publication every success it deserves.

# SHIVA LIGAMS



In Karnataka, India the river Shikri water has dried up or the first time in the history and thousands of Shiva Lingams were seen under water.

Lingam is worshipped by Hindus and full of mysteries dating back to ancient times – aliens.

The form of Shiva which Hindus are most familiar with, is the 'Shiva Ling' found in their temples. It represents Power and Energy. And it resembles a nuclear reactor! The Hindus equated the Lingam with Power (Nuclear Power?)

The worship of Shiva Lingam was not confined to India only. Lingam was referred to 'Prayapas' by the Romans who introduced the worship of Shiva Lingam to European countries. The statutes of Shiva Lingams were found in the archeological findings in Babylon, a city of ancient Mesopotamia. Further, the archeological findings in in Harappa-Mohanjo-daro, which yielded numerous Shiva Lingam statutes, have disclosed the existence of a highly evolved culture long before the Ariyan's immigration.

Ancient stone carvings, such as these from the Vijayanagara Empire of India, suggest that aliens visited Earth hundreds of years ago.

Courtesy : Web site



# ஆன்மீக வாழ்விற்கு ஈழத்து சித்தர்கள் காட்டிய பாதை

சைவப்புலவர், திருமதி. சிவானந்தஜோதி ஞானசூரியம்,
மண்டூர், மட்டக்களப்பு

ஈழத்தில் சித்தர்கள் பலர் வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்று ரீதியாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமும் அறியமுடிகிறது. "நிஜானந்த போதம்" என்ற நூலின்படி கோரக்கச் சித்தர் திருகோணமலையில் சமாதியடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழத்தை சிவபூமி என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இது ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்டும் வாக்கேயாம். சமூக வாழ்க்கையில் இருந்து விலகி மனதில் தோன்றும் சகலவித ஆசைகளையும் நீக்கி தமது ஆன்மாவில் முழு நிறைவு எய்தும் சாதுக்கள் தங்களைப் பற்றிய செய்திகளையும் தகவல்களையும் பிறருக்குக் கூறுவதில்லை.

"ஸித்" என்னும் வேர்ச் சொல்லே "ஸிது" என்னும் சொல்லாக உருமாறியது. இதுவே தமிழில் "சித்தம்" என்ற சொல்லிலிருந்து தோன்றியிருக்கலாம். சித்து என்பது சித்தம், அறிவு, பூரணத்துவம், வெற்றியடைதல் முதலிய கருத்துக்களை உணர்த்துவதாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவைகள் அந்தக்கரணங்களாகும். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும். புத்தி நிச்சயிக்கும். அகங்காரம் முனைப்பை தோற்றுவிக்கும். சித்தம் இம்மூன்றிற்கும் காரணமாய் சிந்திக்கும். சித்தத்தின் சலனமே அனைத்து தத்துவங்களின் தோற்றமாகும். இதுவே ஆன்மீக வாழ்வின் எல்லையாகும். பிராண வாயுவின் சலனம் சித்தத்தின் சலனத்தைப் பொறுத்தது. இந்த உண்மையை உணர்ந்தே சித்தர்கள் பிராணாயாமத்தை வலியுறுத்துகின்றனர். எனவே பிராணாயாமத்தின் மூலம் பிராணனும் சித்தமும் ஒடுங்கிய நிலை சித்தர் நிலையாகும். இதுவே சிவநிலை என்பர். திரையற்ற நீர்போல சிந்தை தெளிந்த நிலை இது. இந்நிலையில் சித்தமுமில்லை செயலுமில்லை. இதனை மோனநிலை என்றும் கூறலாம். இதனை திருமூலர் "செத்தார்நிலை" எனக் கூறுகிறார். "சிந்தையிலே களங்கமற்றான் சித்தனாவான்" என அகத்தியர் குறுநூல் கூறுகிறது. சிந்தை தெளிந்திருப்பவன் அவனே சித்தன்.

"செகமெலாம் சிவமென்றறிந்தோன்சித்தன்" என வான்மீகி சூத்திரம் (16) பதினாறாம் வரி கூறுகிறது. சித்தி என்றால் அடைதல் என்பது பொருளாகும். எமது உலகியல் வழக்கில் "போன காரியம் சித்தியாச்சு", "சொன்னது சித்தியாச்சு" என்று கூறுவது காண்போம். இது ஆன்மீக வாழ்வில் மிகப் பெரிய வழியைக் காட்டுகிறது. இறைவனை சத் - சித் - ஆனந்தம் எனக் குறிப்படுவர். "சத்"என்பது "என்றும் உள்ளது", "சித்" என்பது பேரறிவு. ஆனந்தம் என்பது "பேரின்பம்" என்றும் உள்ள பேரறிவுப் பொருளான இறைவனை உணர்த்தும் இன்பமாம். இதை நாம் ஆன்மீக வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழவும் மண்ணில் நல்லவண்ணம் வாழவும் நாயன்மார்கள் அருளாளர்கள் எமக்குத் தந்த திருமுறைகள் ஆன்மீகப் பணிக்கு வழிகாட்டுகின்றன. அதன் உயர்வை சித்தம் ஒருநிலைப்பட்டால் எல்லாம் சித்திக்கும் என்பதை "சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்றும் திருவாசக அச்சோ பதிகத்தில் "சித்தமாகிய ஆணவ மலத்தின் அழுக்கை அகற்றுதல்" என்றும் "சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை" எனத் திருவெம்பாவையிலும், "சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி" என்று விநாயகர் அகவலிலும் எமை சிந்திக்கவைக்கிறது.

இறைவன் தனது திருவிளையாடல்களைச் சித்தராகத்தான் வந்து காட்டி மக்களை ஆன்மீக வாழ்க்கைக்கு இட்டுச்சென்றான் என திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. முதல், இடை, கடை சித்தர்கள் மரபு உண்டு. "வேதாந்த சித்தாந்த சமரச நன்நிலை பெற்ற வித்தக சித்த கணமே" என்கிறார் தாயுமானவர். கடவுளைக் காண முயல்வோர் பக்தர்கள். கண்டு தெளிந்தோர் சித்தர்கள் என்றும் "சாத்திரத்தை சுட்டெரித்தான் அவனே சித்தன்" என்றும் மூச்சே தெய்வம் என்றும் உணர்ந்தவன் சித்தன். தத்துவங்கள் முப்பத்தாறும் கடந்தவன் என்பது அகத்தியர் தரும் விளக்கமாகும். "ஒரு கோடி சித்தருண்டு அவர்கள் பேரை ஓகோகோ எழுதிடவே அடங்காதையா" என்கிறார் சச்சிதானந்தர். இவர்கள் மதங்களையும் சமயங்களையும் கடந்து மருத்துவத்திலே தேர்ச்சிபெற்று மூலிகையையே முழுமையான மருந்தாக்கி மூடப் பழக்க வழக்கங்களை ஒழிப்பதிலும் உண்மையான தத்துவம் எது என்பதை விளக்குவதிலும் சிறப்பிடம் பெற்று ஆன்மீக வாழ்விற்கு வழியூட்டியவர்கள். (ஈழத்துச்சித்தர்கள்). வாழ்க்கை நிலையாமை ஒன்றே நிலையானது என்ற தத்துவத்தை வலியுறுத்திப் பாடியவர்களும் வாழ்ந்துகாட்டி மக்களை ஆன்மீக வழியில் செலுத்தியவர்களும் சித்தர்களேதான். வேறு எவரும் இருக்கமுடியாது. வெறும் வாழ்க்கை சுகங்களில் மூழ்கிப்போய் பிறப்பின் நோக்கத்தை மறந்து அழியும் உடலின் தன்மையினையும் ஆத்மாவின் அழியாத் தன்மையினையும் மக்கள் அறிய ஆன்மீக வாழ்வை நினைவுபடுத்துவதே சித்தர்கள் நோக்கமாகும். எனவேதான் ஆண் பெண் உறவு இன்பங்களை மிகவும் கேவலப்படுத்தி சில சித்தர்கள் பாடியிருக்கின்றார்கள். ஈழத்தில் வாழ்ந்த சித்தர் வரிசைகளிற் சில வருமாறு:

கடையிற்சுவாமிகள், பரமகுருசுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், யோகர் சுவாமிகள், நவநாத சுவாமிகள், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்தகடாட்சர சுவாமிகள், செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாதச்சித்தர், நயினாதீவுச் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், குடைச் சுவாமிகள், வடிவேற் சுவாமிகள்.

ஈழத்தில் சித்தர் மரபு இந்தியாவிலிருந்தே வந்தது. இவர்கள் இளமை, யாக்கை, செல்வம்,வாழ்க்கை, முதலியவற்றின் நிலையாமையை உணர்த்தியவர்களாக இக்காலத்திலும் அற்புதங்கள் நடைபெறும் என வழிகாட்டியவர்கள். அவர்களை சமூகம் மதியாதபோதும் சினம்கொள்ளாது சீரியவழிகாட்டுபவர்கள். மௌனத்தின் மூலமும் சிவமூலமந்திரத்தின் மூலமும் சித்தாந்தத்தில் ஆன்மீகப் பாதையைக் காட்டி அதன்படி செலுத்துபவர்கள். அன்பினாலே அகிலத்தையும் சிவன்பாலே அணைப்பவர்கள். எம்நாட்டுச் சித்தர்களை வாழ்வில் மறவாமல் அவர்கள் எமக்குத் தந்த ஆன்மீக சிந்தனையில் பிறரையும் வழிப்படுத்தி நடப்போமாக.



# மாமன்றச் செய்திகள்

## பாரெல்லாம் பரவும் மாமன்றப் பணிகள்

### மாமன்ற நூல்களின் வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா வெளியீடான A Compendium for Hindus என்ற இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரியின் வெளியீட்டு விழா இலண்டன், அவுஸ்திரேலியா ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன.

கடந்த ஏப்ரல் 18ஆம் 19ஆம் திகதிகளில் பிரித்தானியா சைவ ஆலயங்களின் ஏற்பாட்டில் இலண்டனில் நடைபெற்ற 16ஆவது சைவ மாநாட்டின்போது மேற்படி நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா மாமன்றத்தின் சார்பாக நூலை வெளியிட்டு வைத்தார்.

மாமன்றத்தின் இன்னொரு வெளியீடான 'இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் – ஓர் ஆய்வு' என்ற நூலை யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் மேற்படி சைவ மாநாட்டின்போது வெளியிட்டுவைத்தார்.

மாமன்றத்தின் A Compendium for Hindus என்ற ஆங்கில மஞ்சரி இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் – ஓர் ஆய்வு ஆகிய இரு நூல்களும் ஏப்ரல் 19 ஆம் திகதியன்று அவுஸ்திரேலியா சிட்னி முருகன் திருத்தலத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் கலந்துகொண்டு, மேற்படி இரு நூல்களையும் வெளியிட்டு வைத்தார். மாமன்ற உப தலைவரும், மாமன்ற யாழ். இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மேற்படி இரு நூல்களையும் அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## இரத்ததான முகாம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழாவை யொட்டி மாமன்ற சமூகநலன் குழுவின் ஏற்பாட்டில் மாமன்ற அங்கத்துவ நிறுவனமான இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இம்மாதம் (மே) 16ஆம் திகதியன்று காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இரத்ததான முகாமொன்று நடாத்தப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தினரும், மருத்துவபீட மாணவர்களும் கலந்து கொண்டு இரத்தான முகாம் சிறப்பாக நடைபெறுவதற்கு உதவியிருந்தார்கள்.

## மாமன்றத்தின் வைரவிழா

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழாவையொட்டி இந்து ஆராய்ச்சி மாநாடொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை, யாழ் நல்லூரில் இந்து ஆராய்ச்சி மாநாடு இடம்பெறவிருக்கிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## நீத்தார் நினைவு தினம்

எதிர்வரும் ஆகஸ்ட் 14 ஆம் திகதி நிகழும் ஆடி அமாவாசை தினத்தை வழமைபோல் இவ்வருடமும் கீரிமலையில் நீத்தார் நினைவாக அனுஷ்டிப்பதற்கு மாமன்றம் தீர்மானித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாமன்றச் சமூகநலன் குழு மேற்கொண்டு வருகிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## வைரவிழா போட்டிகள்

மாமன்ற வைரவிழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக் கிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என்பவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிவித்தல்கள், விரைவில் பத்திரிகைகள் வாயிலாக வெளியிடப்படவிருக்கின்றன.

### சுந்தரர் தேவாரம் (திருநாட்டுத் தொகை)

ஈழ நாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சுரஞ்
சோழ நாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழி யூரன நாட்டுக் கெல்லா மணியாகிய
கீழை யில்லரனார்கிடங் கிள்ளி குடியதே.

### சேக்கிழார் பெரியபுராணம்

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்து
சென்னியர்மா தோட்டத் திருக்கேதீச்சரம் சார்ந்த
சொல்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்

### கேதுநாதன் போற்றி


மலர்மிசை வாழும் வேதன் வான்புவி அளந்த மாயன்
குலவரைப் பகைஞன் தேவர் கோதறு கணங்க ளேனோர்
நலமிக அருளு கென்றே நாடொறும் வணங்கி ஏத்தப்
பலனருள் கேதுநாதன் பங்கயச் சரணம் போற்றி!

### அகத்திய முனிவர் பாடல்


வேதநாயகனே போற்றி வேள்வியில் முதலே போற்றி
வேதமான் மறியாய் போற்றி விநாயக சனக போற்றி
காதில் வெண் குழையாய் போற்றி கங்கையஞ் சடையாய் போற்றி
மாதொரு பாகம் வைத்த மாதோட்டக் கனியே போற்றி!!

## திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் தேர்த் திருவிழாவும் பாலஸ்தாபனமும்


திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் பஞ்சரதத்தேர் பவனி மன்மத வருடம் வைகாசித் திங்கள் 17ஆம் நாள் (31-05-2015) ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். ரூ. 320 மில்லியனுக்கு மேல் இந்திய அரசினால் செலவிடப்பட்டு மாமல்லபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள கருங்கல் சிற்ப வேலைப்பாடுகளுடன் கட்டப்படவிருக்கும் உட்பிரகார வேலைகள் கூடிய விரைவில் ஆரம்பமாகும். அதற்காக **7-6-2015இல் பாலஸ்தாபனம் நடக்கவிருக்கிறது.** கருங்கல் உட்பிரகார வேலைகள் நிறைவுபெற்றதும் புதிய உட்பிரகாரம் இவ்வாறு அமையும்.




பிரதான மண்டபத்தின் மாதிரித் தோற்றம் கருங்கல் சிற்பவேலைகள் முடிவுற்றபின். (தெற்கிலிருந்து)




பிரதான மண்டபத்தின் மாதிரித் தோற்றம் கருங்கல் சிற்பவேலைகள் முடிவுற்றபின். (கொடித்தம்பம்)



பிரதான மண்டபத்தின் மாதிரித் தோற்றம் கருங்கல் சிற்பவேலைகள் முடிவுற்றபின். (தென்கிழக்கிலிருந்து)



பிரதான மண்டபத்தின் மாதிரித் தோற்றம் கருங்கல் சிற்பவேலைகள் முடிவுற்றபின். (வடகிழக்கிலிருந்து)



சகல கட்டுமானப் பணிகளும் முடிவுற்றபின் திருக்கேதீச்சர ஆலய உட்பிரகாரத்தின் முழுத்தோற்றம்

**31.03.2015ஆம் திகதியன்று வெள்ளவத்தையில் யோகர் சுவாமி நிதியத்தின் புதிய கட்டிடத்திற்கு இராமகிருஷ்ணமிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்தா அடிக்கல் நாட்டுகிறார். அருகில் நிதியத்தின் செயலாளரும் மாமன்ற சமய விவகாரக் குழுச் செயலாளருமான திரு. சிவசுப்பிரமணியம்.**





**16.05.2015 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்ற சமூகநலன்குழு ஒழுங்கு செய்த இரத்ததான நிகழ்வில்...**



மாமன்றப் பொதுச் செயலாளர், பொருளாளர், மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர், குழுச் செயலாளர்.



ஓர் அன்பர் இரத்ததானம் செய்கிறார்.








**கோண்டாவில் சிவபூமி மனவள விருத்திப் பாடசாலையில் தொழிற் பயிற்சிக் கூடம் 15.05.2015 அன்று திறந்து வைக்கப்பட்டபோது இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை தம்பதியினர், அவுஸ்திரேலியா சமூக சேவையாளர் திரு. ஈழலிங்கம் தம்பதியினர், சிவபூமி அறக்கட்டளை தலைவர் சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்.**

## மாமன்றத்தின் அஞ்சலி

### அமரர்
### சின்னத்தம்பி செல்வரத்தினம்



அகில இலங்கை இந்து மாமன்றம்
விடுதி நடத்துவதற்கு இரத்மலானையில்
செல்வா இல்லத்தைத் தந்துதவிய

**திரு. சின்னத்தம்பி செல்வரத்தினம்**
**அவர்களையும்**
**இவரது மனைவி இராஜேஸ்வரி** (இராணி)
**அம்மையாரையும்**
என்றும் மறக்க முடியாது.

**20-04-2015இல் அமெரிக்காவில்**
**திரு. செல்வரத்தினம் சிவபதமடைந்த**
துயரச் செய்தி கேட்டு வேதனையடைந்தோம்.

இவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து
அன்னாரின் குடும்பத்தினருக்கு
மாமன்றத்தின்
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

## இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- திருக்கேதீச்சரம் மீது பாடப்பெற்ற திருப்பதிகம் 4
- திருக்கேதீச்சரம் ஆலயத்தின் தொன்மையும் பழமையும் சில தகவல்கள் 6
- பாலாவியின் கரையமர்ந்த பரமன் 8
- எங்கள் ஈசனைக் கண்டு கொண்டேனே ! 10
- திருக்கேதீச்சரநாதனை வழிபட்டோரும், திருப்பணிகள் செய்தோரும் 11
- திருக்கேதீச்சரத் திருப்பணியும் சேர். கந்தையா வைத்தியநாதனும் 12
- திருக்கேதீச்சரப்பெருமான் திருவடி தீண்டப்பெற்றோர் 14
- சிவபாதசுந்தரனாரும் திருக்கேதீச்சரமும் 16
- திருக்கேதீச்சரமும் நாவலர் பெருமானும் 17
- யோகர் சுவாமிகள் முதன்மைச் சீடராக விளங்கிய மார்க்கண்டு சுவாமிகள் 18
- சத்தியவித்தகர் மாண்புமிகு சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய சிறப்புரை 19
- வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை காட்டிய பாதையில் வன்னிக்கும் எங்கள் சேவையை எடுத்துச் செல்வோம். 22
- தவத்திரு சிவயோக சுவாமிகள் அருளிய மானிட வாழ்க்கையின் இரகசியம் 26
- ஆழ்ந்த புலமை கொண்ட விபுலானந்த அடிகள் 28
- சமய வாழ்வின் பல்வேறு இலக்குகளை அடைவதற்கு உதவும் யோகநெறி 29
- ஆன்மிகம் - பொருள் விளக்கம் 31
- Review of the compendium for Hindus 34
- Shiva ligams 35
- ஆன்மீக வாழ்விற்கு ஈழத்து சித்தர்கள் காட்டிய பாதை 36
- மாமன்றச் செய்திகள் 37
- திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் தேர்த் திருவிழாவும் பாலஸ்தாபனமும் 38

# பாரெல்லாம் பரவும் மாமன்றப் பணிகள்

**மாமன்ற வெளியீடுகளான "A Compendium for Hindus" ஆங்கில மஞ்சரி, தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு வெளியீடு 2015.04.18ஆம், 19ஆம் திகதிகளில் இலண்டனில் நடந்த பிரித்தானிய சைவ ஆலயங்களின் 16வது சைவ மாநாட்டில் இடம்பெற்றபோது**




மாமன்ற உபதலைவர் திரு. சின்னத்துரை தனபாலா மாமன்றத்தின் இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரியை மாநாட்டில் வெளியிட்டு வைத்து உரையாற்றுகிறார்.




யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் தெய்வத் திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் ஆய்வு நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுகிறார்.



மாநாட்டில் ஏனைய பேராளர்களுடன் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஸ்கொட்



கௌரவிப்பு நிகழ்வு




மேடையில் சிறப்பு விருந்தினர் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு சீ. யோகேஸ்வரன், திரு. சி. தனபாலா ஆகியோர்.



சபையோர்

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015


## 05.04.2015 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்து மக்களுக்கான ஆங்கில மஞ்சரி வெளியிட்டு வைக்கப்பட்டபோது


மனிதநேயமாமணி இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை தம்பதியினர் மங்கள விளக்கேற்றும் காட்சி.


பிரதம விருந்தினர் சத்தியவித்தகர் சி. வி. விக்னேஸ்வரன் (வடமாகாண முதலமைச்சர்)


மஞ்சரியின் முதற்பிரதியை மனிதநேய மாமணி திரு. கயிலாசபிள்ளை தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளுக்கு வழங்குகிறார். நடுவில் மேல்மாகாண ஆளுநர் மாண்புமிகு கே. சி. லோகேஸ்வரன்.


தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் (இணைத்தலைவர், காசித்திருமடம் திருப்பனந்தாள்) இந்து ஒளி விசேட இதழின் முதற்பிரதியை ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளுக்கு வழங்குகிறார்.


சைவஞான பானு கலாநிதி ஆறு. திருமுருகன்


ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்


மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றுகிறார்.


திருமதி சாந்தி நாவுக்கரசனுக்கு பிரதம விருந்தினர் சிறப்புப் பிரதியை வழங்குகிறார். அருகே திருமதி திலகா விஜயரத்தினம்


சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி திரு. கனகநாயகம் கனக-ஈஸ்வரன்


கலாநிதி வேலாயுதபிள்ளைக்கு அஞ்சலி!


திரு. மா. கணபதிப்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர், மாமன்றக் கல்விக்குழு தலைவர்)


நிதி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் திருமதி அ. கயிலாசபிள்ளையும் நூலின் தொகுப்பாசிரியர் திருமதி திலகா விஜயரத்தினத்தை கௌரவிக்கின்றனர்.


திரு. பொன். விமலேந்திரனுக்கு தவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆங்கில மஞ்சரியின் சிறப்புப் பிரதியை வழங்குகிறார்.


விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.